REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மார்ச் 21 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்
1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 70 | Thursday 21, March, 2024 | 16பக்கங்கள் | 50/-




## மின்சார, எரிசக்தி சட்டமூலம் சபையில் அடுத்த மாதம் சமர்ப்பிப்பு

### நிலக்கரி கொள்வனவு நிதியை சேமிக்க சந்தர்ப்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மின்சாரம், எரிசக்தி சட்ட மூலம் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அதிலுள்ள ஜீ 2 ஜீ முறைமை நீக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, சுற்றாடல் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரையை நடைமுறைப்படுத்தியே, மீள்புத்தாக்க மின் சக்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். எரிபொருள் மற்றும் நிலக்கரி கொள்வனவுக்கு வழங்கும் நிதியை, மீள் புத்தாக்க மின் சக்தி 06

## செயற்கை நுண்ணறிவு பாடம் தரம் எட்டுக்கு மேல் அறிமுகம்

### மைக்ரோசொப்ட் நிறுவனத்துடன் கல்வியமைச்சு ஒப்பந்தம் கைச்சாத்து



பாடசாலையில் தரம் எட்டுக்கு மேலான வகுப்பு மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு பாடம் போதிக்கப்படவுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் கல்வி அமைச்சும் மைக்ரோசொப்ட் நிறுவனமும் கொழும்பில் கைச்சாத்திட்டன. ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர், இந்நிறுவன அதிகாரிகளுடன் ஜனாதிபதி பேச்சு நடத்தினார்.

செயற்கை நுண்ணறிவு (A01) பாடத்தை போதிக்கவென நவீன வகுப்பறைகளும் 06

## கீரிமலை குமாரசுவாமி குருக்கள் காலமானார்

**யாழ். விசேட நிருபர்**



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீன கர்த்தா ந.குமாரசுவாமிக் குருக்கள் நேற்றைய தினம் புதன்கிழமை அதிகாலை தனது 71 வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

ஈழத்தின் மூத்த சிவாச்சாரியாரான மறைந்த நகுலேஸ்வரக் குருக்களின் மகனான இவர், கடந்த வருடம் தந்தையின் மறைவின் பின்னர் 06

# நீதிமன்றத்தை அவமதித்த சட்டத்தரணிக்கு விளக்கமறியல்; தொழில் அந்தஸ்து இழப்பு

## மனநிலை அறிக்கையை சமர்ப்பிக்கவும் நீதிமன்றம் உத்தரவு



நீதிமன்றத்தை அவதூறு செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட சட்டத்தரணி ஒருவரை, சட்டத்தரணி அந்தஸ்திலிருந்து இடைநிறுத்தவும், அவரை ஏப்ரல் 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் உயர் நீதிமன்றம் நேற்று (20) உத்தரவிட்டது.

ஜயதுங்க படபெந்திகே சுசில் பிரியந்த ஜயதுங்க என்ற சட்டத்தரணிக்கே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது. மீண்டும் இவர் ஏப்ரல் 03 இல், நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். குறித்த இச்சட்டத்தரணி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பகிரங்கமாக நீதிமன்றத்தை அவதூறு செய்திருந்தார். நீதிமன்ற அவமதிப்பு மற்றும் சட்டத்தரணிகளின் தொழில் நெறிமுறைகளை மீறியதாக, இவருக்கு எதிராக இரண்டு குற்றப்பத்திரிகைகளை தயாரித்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சட்ட மாஅதிபருக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இச்சட்டத்தரணியின் மனநலம் குறித்து பரிசோதித்து அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்ட நீதிமன்றம் இவரின் உடல் நிலையை பரிசோதிக்க சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்புமாறும் உத்தரவிட்டுள்ளது.

பிரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் குமுதினி விக்ரமசிங்க ஆகியோரை கொண்ட நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்தது. உச்ச நீதிமன்றத்தில் நேற்று (20) வழக்கு விசாரணை நடைபெற்ற வேளையில், இந்த வழக்கறிஞரின் சொத்து தகராறு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனு தொடர்பாக, அவரே ஆஜராகி விடயங்களை தெரிவிக்க முனைந்திருந்தார்.

இந்நிலையில், வழக்கை விசாரிக்கும் நீதிபதிகள் குழுவினருக்கு எதிராக தாம், மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும், இதனால் இவ்வழக்கை இவர்களால் விசாரிக்க முடியாது என்றும் குறித்த சட்டத்தரணி கூறினார். இதன் பின்னர், நீதிபதிகள் குழாமுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தொடர்ந்தும் அவர் விடயங்களை முன்வைத்தார். இதன் பின்னரே, இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முடிவெடுத்தது.

## காஸா சிறுவர் நிதியத்துக்கு ஆளுநர் செந்தில் நிதியுதவி



ஜனாதிபதியின் காஸா குழந்தைகள் நிதியத்துக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் 05 இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கினார். காஸாவில் இடம் பெற்றுவரும் மோதல்களில் 06



## 02 கோழி இறைச்சி விலை குறைப்பு

### பொருளாதார மத்திய நிலையம் அறிவிப்பு

## வவுனியா வைத்தியசாலையில் மருந்தாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு




வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மருந்தாளர்கள் நேற்று (20) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால், நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகினர்.

பதவி உயர்வு மற்றும் புதிய நியமனம் ஆகியவற்றில் முறைகேடு இடம்பெற்றதாக தெரிவித்தே இவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள மருந்தக பிரிவுகள் முற்றாக செயலிழந்தன.

## மத்திய வங்கி சம்பள அதிகரிப்பு: அரசாங்கத்துக்கு தொடர்பில்லை

### கணக்காய்வுக் குழு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மத்திய வங்கி சேவையாளர்களின் சம்பள அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கும் அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அரசாங்க நிதி தொடர்பான குழு முன்வைத்துள்ள அறிக்கையை பரிசீலனை செய்த பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (20) அமர்வில் மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதன் சேவையாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில், அரசாங்க நிதி குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா அறிக்கை சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையை சுட்டிக்காட்டி உரையாற்றுகையிலே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அதன் 06

## சபாநாயகருக்கு எதிரான பிரேரணை சபையில் இன்று வாக்கெடுப்பு

### இரு நாள் விவாதங்கள் மூன்று நாட்களாக நீடிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம், மூன்றாவது நாளாக இன்றைய தினமும் இடம்பெறுகிறது. இந்நிலையில், இதன் மீதான வாக்கெடுப்பும் இன்று மாலை இடம்பெறவுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமான மேற்படி இவ்விவாதம் மூன்று தினங்களாக தொடர்ந்த நிலையில், இன்று (21) வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

ஏற்கனவே இரண்டு தினங்களுக்கு விவாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர், மூன்று நாட்களுக்கு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டு 06

## ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 21-24 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.44 |
| ஸுபஹ் | 04.59 |
| சூரிய உதயம் | 06.14 |
| ழுஹர் | 12.19 |
| அஸர் | 03.31 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.31 |

## சட்ட விதிகளுக்கமையவே கலால் அனுமதிப்பத்திரங்கள்

### கலால் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

புதிதாக கலால் வரி அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கு இரண்டு கோடி ரூபா லஞ்சம் செலுத்தக் கோரியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிப்பதாக கலால் ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி தெரிவித்தார்.

புதிய கலால் வரி அனுமதிப் பத்திரங்களை வழங்கும்போது திணைக்களத்தில் உள்ள எவரும் இலஞ்சம் பெறுவதில்லை எனவும் வலியுறுத்திய ஆணையாளர் நாயகம், ஒரு அனுமதி 06

## கோப் குழுவிலிருந்து மேலும் மூவர் விலகல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கோப் குழுவிலிருந்து நேற்று (20) மேலும் மூவர் இராஜினாமா செய்தனர். இதுவரை, இக்குழுவிலிருந்து பத்துப்பேர் பதவி விலகியமை குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற உறுப்பினர்களான அனுரகுமார திசாநாயக்க, வசந்த யாப்பா பண்டார மற்றும் துமிந்த திசாநாயக்க ஆகியோரே, நேற்று கோப் குழுவிலிருந்து விலகியோராவர். 06

## மத்திய வங்கி சம்பள அதிகரிப்பை நிறுத்த அரச நிதிக்குழு பரிந்துரை

### குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா சபையில் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

**மத்திய வங்கியின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை நிறுத்திவைக்குமாறு அரசாங்க நிதிக்குழு பரிந்துரை செய்துள்ளதாக, அக்குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.** 06

## மத்திய வங்கியின் அதிகரித்த சம்பளம் மீளப்பெறப்பட வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியல் தலையீடுகள் மற்றும் நாட்டின் நிதிக் கொள்கை குடும்பமயமாவதை தடுக்கும் வகையிலேயே, மத்திய வங்கியை சுயாதீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனினும் 06

## ரூபா 12 கோடி பெறுமதியான தங்கக் கடத்தல் முறியடிப்பு

### வர்த்தகர் இருவர் விமான நிலையத்தில் கைது



நாட்டுக்குள் தங்கத்தை கடத்திவர முயன்ற வர்த்தகர்கள் இருவர், சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். விமான நிலையத்தில் கைதான இவர்களில் ஒருவர், அம்பலாங்கொடை பகுதியில் 06

### தினேஷ் ஷாப்டர் வழக்கு

## நிபுணர் அறிக்கையை கோருகிறது நீதிமன்றம்



கொலை செய்யப்பட்ட வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் கையடக்கத் தொலைபேசி மற்றும் கணினி தரவுகள் தொடர்பான நிபுணர் அறிக்கையை உடனடியாக நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு, கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனுவெல நேற்று (20) அரசாங்க பகுப்பாய்வாளருக்கு நினைவூட்டல் கடிதம் ஒன்றை 06

## சீனாவிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி



சீனாவிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்படவுள்ளது. இன்னும் ஐந்து தினங்களில், பெரிய வெங்காயம் கிடைக்கும் என, வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இது இறக்குமதியான பின்னர், உள்நாட்டு சந்தையில் வெங்காயத்தின் விலை 06

## சுவசெரிய 1990: உலகின் முன்னணி சேவையாக தெரிவு




உலகின் முன்னணி அம்பியுலன்ஸ் சேவைகளில் ஒன்றாக "சுவசெரிய" சேவை தெரிவாகியுள்ளது.

வேகமாக பதிலளிக்கும் அம்பியு லன்ஸ் சேவைகளில் ஒன்றாக "சுவசெரிய" மாறியுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இந்த அறிக்கையை உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய துணைத் தலைவர் மார்ட்டின் ரேசர், கீழ் உலக வங்கியின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் இந்த அறிக்கையை பதிவிட்டுள்ளார். தெற்காசியாவில் வறுமையை ஒழித்தல் என்ற தொனிப்பொருளின் கீழ், 06

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 மார்ச் 21 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.59
லுஹர் - 12.19
அஸர் - 03.31
மஃரிப் - 06.21
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் பங்குனி 08
ராகுகாலம் : பகல் : 1.47 - 3.17வரை
சுபநேரம் : காலை : 7.47 - 9.17வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# கொழும்பு, துறைமுக நகர முதலீடுகள், அபிவிருத்திக்கு புதிய மாதிரி வரைவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி மற்றும் முதலீடுகளுக்காக புதிய வடிவிலான நிதி 'மாதிரி' ஒன்று கொண்டுவரப்படும் என நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசிய வர்த்தக தரப்பினருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த புதிய வடிவத்திலான மாதிரி கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில், காமினி வலேபொட எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வலேபொட எம்.பி தமது கேள்வியின் போது துறைமுக ஆணைக்குழு தொடர்பான வர்த்தமானி மூலம் பாரியளவில் தேசிய வர்த்தகத்துறை நெருக்கடிக்குள்ளாகும் நிலை உருவாகியுள்ளதாக குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு துறைமுக நகர சட்டம் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்ட போது சபையில் 149 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் நான், அதற்கு எதிராக நீதிமன்றத்திற்கு விடயங்களை சமர்ப்பித்தேன்.

அதில் ஒரு முக்கியமான விடயத்தை நான் குறிப்பிட்டிருந்தேன்.அது தீர்வையற்ற வரி முறை மூலம் தேசிய வர்த்தகர்களுக்கு பாரிய நெருக்கடிகள் ஏற்படும் என்பதாகும்.

இது தொடர்பில் நான் ஜனாதிபதியுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன்.

அந்த வகையில் ' கொழும்பு துறைமுக நகர' சட்டத்திற்கு பதிலாக 'த பைனான்சியல் சிட்டி'என்ற வகையில் புதிய மாதிரி ஒன்றை கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி மற்றும் முதலீடுகளுக்காக கொண்டு வருவதற்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

அந்த வகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொருத்தமான யோசனையை முன் வைக்க வேண்டும்.அது வர்த்தக தரப்பினருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அமைய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தவக்கால சிந்தனை

## இடைவிடாது வேண்டுதல் செய்வோம்

"நான் உங்களுக்குச் சொல்கிறேன்,எனது வார்த்தையினை கடைப்பிடிப்போர் என்றுமே சாக மாட்டார்".

நம்பிக்கை நமக்கு கடவுள் பற்றிய அறிவினை கற்றுத் தருவதோடு வளர்ச்சி பெற்று வரும் இவ்வுலகில் இறையருளில் வளரவும் உதவுகிறது. நம்பிக்கையுடையவர்கள் வளமிக்கவராய் இருப்பர். அவர்களது வழிமரபினர் கடவுளது அருளால் நிரப்பப்படுவர். அவர்கள் ஓடினாலும் களைப்படைய மாட்டார்கள். அவர்கள் உறுதியானவர்களாய் கனிகொடுக்கும் திராட்சைத் தோட்டத்தைப் போன்று இருப்பர். அவர்கள் எங்கு சென்றாலும் ஒளி அவர்களோடு இருக்கும் அவர்களது சுற்றம் சுகம் தரும் அருவிகளைக் கொண்டிருக்கும்.

இயேசுவின் உடன்படிக்கையைக் கொண்டிருப்பதனால் அவர்கள் நித்தியத்திற்கும் நிலைப்பர். நம்பிக்கையற்றவர்களோ வாழ்வில் வெறுமையை உணர்வர். எறிவதற்காக கற்களை எடுத்துக் கொள்வர். அவர்கள் ஒளியைக் காண மாட்டார்கள். அவர்கள் தம்மைச் சுற்றி முட்களையே காண்பர். அவர்கள் வாழ்வு துக்கத்தில் நிறைந்திருக்கும்.

அவர்களது குற்றங்கள் மன்னிக்கத்தக்கவை என எண்ணி மனதிற் கொள்ளமாட்டார்கள். வாழ்வைக் கொன்றாலும் அதனை தலையான பாவமாக எண்ண மாட்டார்கள்.

இருள் சூழ்ந்த இந்நாட்களில் தெய்வீக ஒளியால் சூழப்பட்டு உமது ஒளி பிரகாசிக்கட்டும். பிளவுபட்ட இவ்வுலகில் இறை ஞானத்தை கொண்டு வருவோம். இறையொளி இல்லாமல் வெறுப்பு,பகைமை,இருள்,யுத்தம் நிறைந்த இவ்வுலகில் எதிர் நோக்கே கிடையாது.

இப்புனிதமான நாட்களில் எம்மில் நிறைந்துள்ள சந்தேகங்கள் நீங்கி நம்பிக்கை பெருக இறைவனிடம் தொடர்ந்தும் இடைவிடாது வேண்டுதல் புரிவோம். அடுத்தவருக்கு தூண்டுதலாக இருக்கும் மகனாக, மகளாக இருப்போம்.

இறைவனின் ஆவியானவர் தாமே நமக்குள் இருக்கும் சோர்வினை அகற்றி துணிவுடன் பணியாற்ற அருள் தருவாராக.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# ரமழான் சிந்தனை

## நோன்பாளியின் பிரார்த்தனை

துஆ என்பது இறை வணக்க வழிபாடுகளில் தலையான ஒன்றாகும். 'இந்த சமூகத்தின் மிகப் பெரும் ஆயுதம் துஆவாகும்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் (ஆதாரம் : திர்மிதி). அத்தோடு நில்லாது அன்னாரும் அதிகமதிகம் துஆ செய்துள்ளார்கள். ஏனையவர்களையும் துஆ செய்ய ஊக்குவித்துள்ளார்கள்.

அல்லாஹுத்தஆலா சிலருடைய துஆக்களை நிராகரிக்காமல் ஏற்றுக்கொள்கின்றான். அவர்களில் நோன்பாளிகளும் அடங்குகின்றனர். இதனை பின் வரும் நபிமொழி தெளிவுபடுத்துகிறது.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவித்துள்ள நபிமொழியொன்றில், 'பிரார்த்தனை நிராகரிக்கப்படாத மூன்று பேர் உள்ளனர். அவர்களில் நோன்பாளி நோன்பு திறக்கும் வரை கேட்கும் துஆ, நேர்மையான தலைவர் மற்றும் அநீதி இழைக்கப்பட்ட நபர் ஆகியோரே அந்த மூன்று நபர்களாவர். அல்லாஹ் இவர்களின் துஆக்களை மேகங்களுக்கு மேல் உயர்த்தி, அதற்கு வானத்தின் வாயில்களைத் திறக்கின்றான் என்று பதிவாகியுள்ளது.

ஆகவே நாம் மகத்துவம் நிறைந்த ரமழான் மாதத்தில் இருக்கின்றோம். இம்மாதத்தில் துஆ ஏற்றுக்கொள்ளப்படும் இப்தாருடைய நேரத்தில் துஆ கேட்பதில் நாம் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். இருந்தும் கூட நோன்பு துறக்கும் நேரத்தில் துஆ கேட்பதை விடவும் உணவு, பானங்களை தயாரிப்பதற்கு தான் அதிக முக்கியத்துவம் அளிக்கும் நிலை காணப்படுகிறது. இது நோன்பு துறக்கப்படும் நேரகாலத்தின் பெறுமதி உணரப்படாததன் வெளிப்பாடாகும்.

எனவே, இப்தார் நேர காலத்தின் பெறுமதியை உணர்ந்து இப்தாருக்கான ஏற்பாடுகளை முன் கூட்டியே செய்துவிட்டு நோன்பு துறக்கும் நேரகாலத்தில் பிரார்த்தனைகளில் ஈடுபடுவோம். அதன் ஊடாக இறையருளைப் பெற்றிடுவோம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

# வர்த்தக தரப்பினருக்கு தீங்கிழைக்கும் தீர்மானங்களை அரசாங்கம் எடுக்காது

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டிலுள்ள வர்த்தக தரப்பினரை நீக்கி விட்டு வேறு வர்த்தக தரப்பினருக்கு வாய்ப்பு வழங்கும் வகையில் அரசாங்கம் ஒரு போதும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாதென, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒருபோதும் எந்த தரப்பினருக்கும் அநீதி ஏற்படும் வகையில் அரசாங்கம் எத்தகைய தீர்மானத்தையும் மேற்கொள்ளத் தயாரில்லை என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

ஒரு நாட்டில் இரண்டு வரி சூத்திரங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது தேசிய கைத்தொழில் துறை வீழ்ச்சியடையும் என்ற தோரணையில், எதிர்க்கட்சித் தலைவர் சபையில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

எந்த தரப்பினருக்கும் அநீதி ஏற்படும் வகையில் அரசாங்கம் எத்தகைய தீர்மானத்தையும் மேற்கொள்ளாது.

நாட்டில் தற்போதுள்ள வர்த்தக தரப்பினரை நீக்கிவிட்டு வேறு தரப்பினருக்கு வாய்ப்பளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது .

வரி கொள்கையை நடைமுறைப் படுத்தும் போதும் தீர்வை வரி நிவாரணம் வழங்கும் தற்போதுள்ள நடைமுறையை மீறி செயற்படப் போவதில்லை. அதேபோன்று எந்த தரப்பினருக்கும் அநீதி ஏற்படாத வகையிலேயே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில் சபையில் ஒவ்வொரு தரப்பினரும் முன்வைக்கும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. சில மட்டுப்படுத்தல்களும் உள்ளன. இவை அனைத்தையும் கவனத்திற் கொண்டு திருத்தங்களை மேற்கொண்டு பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி 'மை ரிபுயூட்' இசை நிகழ்ச்சியில் பாரியாருடன் பங்கேற்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,அவரது பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் 'My Tribute' இசை நிகழ்ச்சியை கண்டு களித்தனர்.சௌந்தரி டேவிட் றொட்ரிகோ மற்றும் நெரஞ்சன் டி சில்வா ஆகியோருடன் இணைந்து செனுக் விஜேசிங்க இந்த இசை நிகழ்ச்சியை வழங்கியிருந்தார்.

கொழும்பு லயனல் வென்ட் திரையரங்கில் நடைபெற்ற 'My Tribute' இசை நிகழ்ச்சியில் கிறிஸ்டோ பிரின்ஸ் டிரம்ஸ் இசை வழங்கியதோடு நதினி ஒலேகாசெக்ரேம் மற்றும் ஹேமால் குருவிதாராச்சி ஆகியோர் கலைஞர்களாக இதில் இணைந்து கொண்டனர். சோல் சவுண்ட்ஸ் அகாடமி பாடகர் குழுவினர் இந்த இசை நிகழ்ச்சியில் பாடல் இசைத்தனர்.

தனது ஆரம்பக் கல்வியை வத்தளை லைசியம் இன்டர்நேஷனல் பாடசாலையில் பெற்ற ஷெனுக் விஜேசிங்க, லண்டனில் உள்ள ஸ்டெபோர்ட்ஷயர் பல்கலைக்கழகத்தில் சர்வதேச வணிக முகாமைத்துவப் பட்டதாரி பட்டத்தை பெற்றார். இளம் வயதிலேயே பியானோ பயிற்சியை ஆரம்பித்த இவர் ஐந்து வயதில் பாடத் தொடங்கினார் .

# பாராளுமன்றத்தின் மரபுகளை பாதுகாப்பதே சபாநாயகரின் பொறுப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நிறைவேற்றுத்துறையின் தேவைகளை நிலைநாட்டும் வகையில் செயற்படாமல் பாராளுமன்ற மரபுகளை பாதுகாப்பதே சபாநாயகரின் பொறுப்பு என்றும், அதனை அவர் செய்யத் தவறியதாலேயே சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபாநாயகர் தவறு செய்யும்போது அதனை சுட்டிக்காட்டி சரி செய்ய வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குள்ளது. இதனை செய்ய அதிகாரிகளும் தவறியுள்ளதாக ரவூப் ஹக்கீம் எம்.பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இரண்டாது தினமாக இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் சபையில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பாராளுமன்ற காலத்தில் பல்வேறு விடயங்களை எம்மால் காண முடிந்துள்ளது. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி பதவி விலகினார்.

06

# மாகாண சபைத் தேர்தல்கள் இழுபறிக்கு சுமந்திரனும் பொறுப்பு

(லோரனஸ் செல்வநாயகம்)

மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டு மக்களுக்கான வாக்களிக்கும் உரிமை இல்லாதொழிக்கப்பட்டமைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி எம்.ஏ.சுமந்திரன் பொறுப்புக் கூற வேண்டுமென நீதி,அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் முறைமை திருத்த விவகாரத்தின் போது அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எம்.ஏ.சுமந்திரன் கடும் அழுத்தங்களை பிரயோகித்தார் என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டு மக்களின் வாக்களிக்கும் உரிமை இல்லா தொழிக்கப்பட்டமைக்கு சுமந்திரன் எம்.பி பொறுப்புக் கூற வேண்டும் என்றும் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் சுமந்திரன் எம்.பி உரையாற்றிய பின்னர், உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சுமந்திரன் எம். பி சபையில் உரையாற்றுகிறாரா அல்லது பிரதேச சபையில் உரையாற்றுகிறாரா ? என்பதை புரிந்து கொள்ள முடியாதுள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சுட்டிக்காட்டி அவர் உரையாற்றினார். சபையில் அவர் ஆற்றிய உரையில் விரக்தி மாத்திரமே எதிரொலித்தன.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் இவர் முன்னர் சபையில் உரையாற்றுகையில் 'உயர்நீதிமன்றம் வீட்டுக்கு செல்ல வேண்டும் ' என்று குறிப்பிட்டுள்ளார்.

06

# கோழி இறைச்சி விலை குறைப்பு

நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையம் வெளியிட்டுள்ள தகவலின்படி, ஒரு கிலோ கோழி இறைச்சியின் சில்லறை விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. மையத்தின் அதிகாரி ஒருவர் இந்த விலைக் குறைப்பு பற்றி தெரிவித்துள்ளார்.

விலை குறைப்பின் பின்னர் நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 1,180 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு கிலோ மாட்டிறைச்சி 2,400 ரூபாவுக்கும் ஒரு கிலோ ஆட்டிறைச்சி 3,300 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# திருக்கோவில் வைத்தியசாலையை திறக்க அவசர நடவடிக்கை எடுக்கவும்

## சபையில் ஸ்ரீதரன் எம்.பி வேண்டுகோள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



திருக்கோவில் ஆதார வைத்தியசாலையை மீளத் திறப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனா, தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பியான, எஸ். ஸ்ரீதரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமது தவறுகளை மூடி மறைப்பதற்காக திருக்கோவில் ஆதார வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. இதனால், மக்களுக்கான சேவை பாதிக்கப்பட்டுள்ளதை சபையில் சுட்டிக்காட்டிய அவர், அந்த வைத்தியசாலையை உடனடியாக திறப்பதற்கு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான இரண்டாம் நாள், விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

06

# பக்கசார்பான செயற்பாடுகளாலேயே பிரேரணை கொண்டு வந்தோம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தொடர்ச்சியாக சபையில் பக்கச்சார்பாக செயற்பட்டு வருவதாலேயே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்ப ட்டதாக எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இழந்துள்ளதாகத் தெரிவித்த அவர்,நாடு வீழ்ச்சியடைந்தமைக்கு சபாநாயகரே பிரதானமான காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பிரிட்டிஷ் பாராளுமன்ற சம்பிரதாயத்தின் படி சபாநாயகராக தெரிவு செய்யப்படுபவர், அரசியல் நடவடிக்கைகள் பதவிகளை தவிர்த்து செயற்படுவது முக்கியம்.

சபாநாயகர் ஆசனத்திலிருந்து கொண்டு இர தரப்புக்கும் நியாயமாக செயற்பட முடியும். ஆனால் எமது சபாநாயகர் இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டதற்கு பின்னர் அரசியல் தொடர்புகளில் இருந்து மீளவில்லை. அவர் இன்னும் பிரதேச சபை ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக செயற்படுகின்றார். இது அரசியல் நியமனம்.

ஜனாதிபதியே அந்த பதவியை வழங்குகிறார். அவ்வாறான நிலையில் சபாநாயகர் இந்த பதவியுடன் சபாநாயகர் ஆசனத்தில் இருக்கும்போது அவர் எடுக்கும் அனைத்து தீர்மானங்களுக்கும் பின்னால் அரசியல் கலந்திருப்பதை நாம் உணர்கிறோம்.

குறிப்பாக பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக்குழுவை மூன்று வருடங்களாக நியமிக்காமல் அவர் காலம் தாழ்த்தி வந்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் துறைசார மேற்பார்வை குழுவுக்கு எதிர்ப்பு என்பதாலேயே, சபாநாயகர் அதனை நியமிக்காமல் காலம் கடத்தி வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி

## ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.இதன்படி,2.75 மில்லியன் குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கென பத்து கிலோ நாட்டரிசி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள அமைச்சரவை பத்திரத்தின் படி, அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம் கொண்டவர்களின் போஷாக்கு மட்டத்தைப் பேணுவதற்கு ஏதுவாக இவ்வாண்டிலும் இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களை இணைத்து மாவட்டச் செயலாளர்கள் மூலமாக இக்குடும்பங்களுக்கு அரிசி வழங்கப்படவுள்ளது.

# பிரகடனம் தேசிய மாலுமிகள் தினம் 21 மார்ச்





**Hon. Ranil Wickremesinghe**
President
Democratic Socialist Republic of Sri Lanka

It is indeed a pleasure to acknowledge the commendable efforts undertaken by the Ministry of Ports, Shipping and Aviation in nurturing a skilled cadre of professional seafarers, as outlined in their corporate vision.

Seafarers occupy a pivotal role in the global economic landscape, facilitating the movement of goods and fostering international trade. Their tireless efforts in navigating the seas ensure the smooth transportation of goods and commodities, thereby fuelling economic activities on a global scale. It is noteworthy that the majority of international trade relies heavily on maritime transportation, underscoring the indispensable nature of seafarers in today's interconnected world.

The establishment of a National Seafarers' Day to honour and recognize invaluable contributions of seafarers to Sri Lanka is a laudable initiative. Additionally, the forthcoming publication of the first textbook on shipping in the Sinhala language, scheduled for the 21st of March 2024, may pave the way to attract the future generation for this lucrative industry.

In furtherance of raising public awareness, the issuance of a commemorative stamp and first-day cover to mark this significant occasion is a thoughtful gesture.

I extend my heartfelt congratulations to the Ministry of Ports, Shipping, and Aviation for their proactive measures aimed at bolstering the seafaring community. I wish all stakeholders involved in this important event every success in their endeavours.



**Hon. Dinesh Gunawardena**
Prime Minister
Democratic Socialist Republic of Sri Lanka

The dedication and professionalism of seafarers keep the vast majority of world trade moving safely, delivering vital goods - including food, fuel and medical supplies.

I wish to make a special mention that seafarers have continued to provide this essential service under the unprecedented and difficult conditions brought on by the COVID-19 pandemic.

We believe declaring a national day for seafarers is timely to recognise and appreciate the dedication and personal sacrifices of seafarers and their valuable contribution to the smooth functioning of the maritime industry.

The decision taken by the Ministry of Ports, Shipping and Aviation to commemorate the National Seafarers Day by initiating an action plan to produce high quality professional seafarers in order to enhance employment prospects is highly appreciable.

I am glad to note that the first textbook on "Shipping" written in the national language, Sinhala is scheduled to be published on the 21st of March 2024 coincide with the National Seafarers' Day celebration.

I wish the celebration of the National Seafarers' Day every success.



**Hon. Nimal Siripala de Silva, M.P.**
Minister of Ports, Shipping and Aviation

Celebrating the inaugural National Seafarers' Day in Sri Lanka

It is a pleasure and excitement for me to send this message on inaugural National Seafarers' Day in Sri Lanka. Despite the indispensable role of the seafarers their contribution to the national economy and the society is not much highlighted and appreciated. The key objective of establishing a national day is to shape collective memory, promote national unity, and reinforcing cultural values and identity. Therefore, the National Seafarers' Day will mark cultural and historical commemoration as it serves as reminders of key milestones, and achievements, helping to reinforce national identity and pride in the shipping industry and seafarers. It will have a symbolic significance and a powerful expression of national identity and unity. Today's inaugural celebration help to reinforce their significance and encourage citizens to uphold them, and these values can be established by continuing this celebration on the 21st of March every year.

The Ministry of Ports, Shipping, and Aviation is commited to increase the number of seafarers in Sri Lanka to 50,000 by 2030. However, it has been observed that the lack of awareness about seafaring industry and its reality by the public has been a serious shortcoming. When the society in unaware of evolving lucrative jobs in the shipping sector particularly in seafaring, parents and teachers cannot guide the younger generation in the right direction. Social awareness plays a significant role in overcoming the various challenges towards these capacity building initiatives in this sector. We have also identified the relevance of incorporating this indispensable subject in the school curriculum. Therefore, the launch the textbook in shipping education written in our national language sets another important milestone. This textbook could be the foundation to incorporate this incredibly important subject in school curriculum thus the sustainable capacity building initiatives. The ministry is pleased about the initiatives and collaboration by CINEC Campus in making this event a reality.



**Hon. Susil Premajayantha**
Minister of Education

As the Minister of Education, I feel honoured to send a congratulatory message to the Ministry of Ports, Shipping and Aviation on the inaugural national seafarers' day celebration. We believe that investing in maritime education and training is essential for developing a skilled workforce and meeting the growing demand for seafaring jobs. By equipping individuals with the necessary knowledge, skills, and qualifications, education contributes to the sustainability and growth of the maritime sector while enhancing job opportunities for aspiring seafarers. Therefore, establishing a national day for seafarers is timely because it may pave the way for future generations to get the awareness of the maritime industry and great potential exists for seafarers.



**Hon. Douglas Devananda**
Minister of Fisheries

On this momentous occasion of National Seafarers' Day 2024, I extend my heartfelt congratulations to the Ministry of Ports, Shipping, and Aviation.

Seafarers are the lifeblood of global trade, transporting goods and fostering international commerce. While fisheries contribute heavily to maritime activities, seafaring encompasses a broader spectrum. The dedication of seafarers significantly impacts the global trade of fishery products, and I, as the Minister of Fisheries, deeply appreciate their invaluable role.I commend the vision of the Minister of Ports, Shipping, and Aviation Hon. Nimal Siripala De Silva (M.P), Attorney-at-Law and Solicitor of the United Kingdom, guided by the leadership of His Excellency the President Ranil Wickremesinghe, in nurturing high-caliber seafaring professionals. Their unwavering efforts through National Seafarers' Day celebrations to enhance employment opportunities are truly commendable.



**Hon. Ali Sabry**
Minister of Foreign Affairs

I am pleased to congratulate the Ministry of Ports, Shipping, and Aviation on the first National Seafarers' Day in Sri Lanka. I am confident that establishing a National Day for Seafarers will raise public awareness of the industry's immense potential.

The Ministry of Foreign Affairs promotes the maritime industry in a variety of ways. It plays an important role in enabling statutory and regulatory requirements in the marine sector, especially when foreign countries are involved, such as formalising recognition of seafarer qualifications by other countries and vice versa.
Sri Lankan diplomats have often helped to protect the rights and interests of Sri Lankan seafarers through the governments of those countries.

Global effects, such as the economic crisis, pandemic, piracy, and international conflict, have a direct impact on the shipping trade. Sri Lanka, due to its strategic location, must assume a crucial part in such situations. We also encourage the Ministry of Ports, Shipping, and Aviation's objective of increasing Sri Lankan seafarers to 50,000 by 2030. Given the worldwide significance of the maritime industry, we believe the Ministry of Foreign Affairs can play an important role in making the above mission a reality, and we will support to this endeavour.

I commend the Ministry of Ports, Shipping, and Aviation for its efforts on National Seafarers' Day, and I wish all seafarers the best as they serve the industry and Sri Lanka, and commencing their careers at sea.



**Mr. K. D. S. Ruwanchandra**
Secretary
Ministry of Ports, Shipping and Aviation

Seafarers play a vital role in global trade and transportation, often spending long periods away from their families to ensure goods reach their destinations safely with required quality. National Seafarers Day recognizes the role played by the seafarers and is organised to appreciate their contribution to the economy and society. The Ministry of Ports, Shipping and Aviation promotes careers in the maritime industry in line with the government's expectation of attracting foreign exchange income to the country. By highlighting the essential role of seafarers, it encourages young people to consider careers at sea, contributing to the sustainability of the maritime workforce. Seafaring is an international profession, with seafarers from diverse backgrounds working together on ships around the world. National Seafarers Day fosters a sense of solidarity among seafarers globally, recognizing their shared experiences and challenges. Therefore, by dedicating a day to seafarers, attention is drawn to the importance of their safety and well-being. It provides an opportunity to raise awareness about the challenges they face, such as hazardous working conditions, isolation, and mental health issues.

The launching of textbook on shipping written in Sinhala language will mark a very vital milestone in shipping in Sri Lanka. The Ministry of Ports, Shipping and Aviation has already approached the Ministry of Education requesting to incorporate shipping as a subject in schools. National Seafarers Day is important for recognizing the contributions of seafarers, promoting their well-being, encouraging maritime careers, preserving cultural heritage, and fostering international solidarity within the maritime community. I wish to extend greetings to all seafarers on this memorable day.



**Capt. Ajith Peiris**
Chairman and President
CINEC Campus
Chairman
Association of Seafarer Recruiting Agents

The maritime industry provides employment opportunities and create many supportive industries such as shipbuilding, bunkering, port operations, and logistics. The seafarers who are the livewire in this industry generates revenue as foreign exchange. Declaring a national day for seafarers is timely decision and a strong milestone towards prosperity of Sri Lanka.

The launch of a textbook on shipping and announcement of incorporating commercial shipping and Maritime Sciences as a school subject on the inaugural National Seafarers' Day in Sri Lanka displays the indispensability of systematic education in the capacity building of the shipping industry. Announcement of the BSc in Maritime Operations Degree Program that adds academic value to the seafarers' profession. This is the first time such program is approved by the Ministry of Educations in Sri Lanka and signifies an historical landmark for seafarers.

I take this opportunity to thank the President of Dalian Maritime University Prof. SHAN Hongjun and President of National Korea Maritime & Ocean University Prof. Dr. RYOO, Dong-Keun for their presence in this memorable occasion. We appreciate the support of Dalian Maritime University, and National Korea Maritime & Ocean University for their support in our exercise to capacity building.

The declaration of Sri Lanka government's official acceptance to designate seafarers and other marine personnel as key workers;" in line with International Maritime Organization on this memorable day is yet another achievement. Inaugural issue of the Stamp and first day cover by the Department of Posts of Sri Lanka organised by the ministry of media will enhance the social awareness about this industry and seafarers.

Therefore, providing the due recognition to seafaring by the government would be the key to create public awareness about the importance of seafaring industry. It helps the capacity building efforts in the industry. Through the public awareness each citizen of the country could contribute to this national effort for mutual benefits.



**Mr. Ajith Wijesinghe**
Director General
Merchant Shipping Secretariat

I'm honoured to extend my congratulations on the inaugural national day for seafarers in Sri Lanka. We deeply value and support the government's vision of bolstering the number of Sri Lankan seafarers to 50,000 by 2030.

The maritime industry continues to thrive, offering a spectrum of rewarding career opportunities tailored to various educational and skill backgrounds.

Establishing a national day for seafarers within the Sri Lankan community will raise awareness about the industry's vast potential and its tangible benefits.

Recognizing the influential roles of parents and teachers, initiatives are underway to educate and inspire the younger generation about seafaring.

The Merchant Shipping Secretariat remains steadfast in its ever commitment to facilitating opportunities and eliminating hurdles for the younger entering into the seafaring profession.

I am confident that this celebration will effectively convey the importance of our mission, propelling us toward our goal of 50,000 seafarers by 2030.



**Professor Prasad Sethunga**
Director General
National Institute of Education

The National Curriculum Framework (NCF) for General Education developed by the National Institute of Education (NIE) provides a basis to formulate a new curriculum, reflecting on the lessons learned from the present curriculum and global good practices as well as the priorities in the national development strategy. As the technology is driving transformation and innovation in industries, diverse subjects will be introduced through NCF under STEAM (Science, Technology, Engineering, Arts and Mathematics) approach from the Junior Secondary Level. Commercial Shipping and Maritime Science is one of the subjects that has been introduced under the above subject category and it is a timely option that align with the above objective of the NCF.

Maritime education encompasses elements of both science and art, reflecting the diverse nature of skills and knowledge required in the maritime industry. Maritime education is inherently interdisciplinary, drawing from various scientific fields such as physics, meteorology, and engineering, while also incorporating practical and artistic aspects. This interdisciplinary approach reflects the complexity of the maritime industry and the diverse skills needed by professionals. Integrating maritime concepts into the school curriculum can enhance students' understanding of these subjects and promote interest in STEAM-related careers.
Teaching professional subjects at school with high employability is crucial for several reasons. Primarily, it directly addresses the needs of both students and the workforce. The importance of offering and emphasizing professional subjects such as maritime shipping with high employability is multifaceted. There is an ongoing and evolving demand for shipping jobs due to global trade expansion, the rise of e-commerce, technological advancements, need for the supply chain resilience, cybersecurity in shipping, diversification of cargo types, ever increasing regulatory compliance that ensure the sustainability, economic growth and development, global competitiveness, career satisfaction for graduates, lifelong learning and continuous improvement, positive impact on society and infrastructure development projects.

In addition, maritime education is aligned with the policy objectives of National Education Policy Framework (NEPF) illustrated under holistic education. This request was originally made by the Ministry of Ports, Shipping, and Aviation with necessary justification. Accordingly, after making a comprehensive evaluation on the request and with the blessings of the Hon. Minister of Education, Dr. Susil Premajayantha I am pleased to announce about our plan to incorporate the Commercial Shipping and Maritime Science as a piloting subject in the school curriculum on this memorable day of seafarers in Sri Lanka. I am sure this a vital step towards making the Government of Sri Lanka's vision to increase the seafarers in the country to 50,000 by 2030.

CINEC CAMPUS · CEYLINE SHIPPING LTD. · MERCMARINE GROUP OF COMPANIES · MSTI · CMA SHIPS LANKA · CENTRUM MARINE · MERCMARINE GROUP OF COMPANIES · MMA · Sri Lanka Shipping Company Limited

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 08ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 10

**குறள் தரும் சிந்தனை**



செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி

பழிக்கத் தக்கவைகளைச் செய்யாமல் பாராட்டத்தக்க அறவழிச் செயல்களில் நாட்டம் கொள்வதே ஒருவர்க்குப் புகழ் சேர்க்கும்.

# விவசாயப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் அக்கறை

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கென பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சிறுபோக நெற்செய்கையாளர்களுக்கு சலுகை விலையில் பசளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர சமர்ப்பித்த இத்திட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்படி, ஒரு ஹெக்டேயருக்கு 15 ஆயிரம் ரூபா பசளை மானியம் வழங்கப்பட உள்ளது. இந்த மானியம் நெற்செய்கைக்கு பயன்படுத்தப்படும் யூரியா, ரி.எஸ்.பி, எம்.ஒ.பி போன்ற இரசாயனப் பசளைகளில் வழங்கப்படவிருக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் இம்மானியத் தொகையை விவசாயிகளின் வங்கிக்கணக்கில் வைப்பிடவும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

கடந்த ஆட்சிக் காலத்தில் நெற்செய்கை உள்ளிட்ட விவசாயப் பயிர்ச்செய்கைகளுக்கு இரசாயனப் பசளைப் பாவனை தடை செய்யப்பட்டதோடு, இயற்கை பசளைப் பாவனை ஊக்குவிக்கப்பட்டது. அதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. இரசாயனப் பசளை இறக்குமதியும் தடை செய்யப்பட்டது.

ஆனால் இரசாயனப் பசளைப் பாவனைக்கு பழக்கப்பட்டு போன இந்நாட்டு விவசாயிகளை கடந்த ஆட்சியாளர்களின் இயற்கை பசளை ஊக்குவிப்பு திட்டம் கடும் அதிருப்திக்கும் ஆட்சேபனைக்கும் உள்ளாக்கியது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் மறியல் போராட்டங்களையும் அவர்கள் முன்னெடுத்தனர். ஆனால் விவசாயிகளின் கோரிக்கைகள் கடந்த ஆட்சியாளர்களால் கருத்தில் கொள்ளப்படவில்லை. அதனால் பெரும்பாலான விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொண்டனர்.

இதே காலப்பகுதியில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துக் கொண்டிருந்தது. அந்த நெருக்கடிக்கு உள்நாட்டு விவசாயிகளின் இரசாயனப் பசளைக் கோரிக்கைப் போராட்டமும் வலு சேர்த்தது. பொருளாதார நெருக்கடி மக்களுக்கு கடும் அசௌகரியங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தியது.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடியோடு சேர்த்து அரசியலும் கொதிநிலையை அடைந்தது. அதன் விளைவாக அன்றைய ஆட்சியாளர்கள் பதவி விலகும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இந்நிலையில் நாட்டின் தலைமையைப் பொறுப்பேற்க எவரும் முன்வராத சூழல் உருவானது. அந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி நாட்டின் தலைமையை ஏற்றார். அதனைத் தொடர்ந்து கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத் திட்டங்களை அவர் முன்னெடுக்கலானார். நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டங்கள் விரிவான அடிப்படையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. அதன் பிரதிபலனாக பொருளாதார நெருக்கடி கட்டம் கட்டாக நீங்கியதோடு, மக்கள் எதிர்கொண்ட அசௌகரியங்களும் குறைவடையலாயின.

உள்நாட்டு விவசாயிகளின் கோரிக்கை குறித்து விஷேட கவனம் செலுத்திய ஜனாதிபதி, இரசாயனப் பசளையைத் துரிதமாகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இந்நாட்டு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவென விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கும் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அவை விவசாயத்தை ஊக்குவிக்கும் வேலைத்திட்டங்களாக அமைந்துள்ளன.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் பசளை பெற்றுக்கொடுக்கப்பட்டதோடு மானிய விலையில் இரசாயனப் பசளை பெற்றுக் கொடுக்கும் திட்டமும் செயற்படுத்தப்பட்டன. பசளை மானியத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டன.

இதன் பயனாக 2023 ஆம் ஆண்டு அரிசி இறக்குமதி செய்யப்படாத ஆண்டாகப் பதிவானதோடு உள்நாட்டுக்கு தேவையான நெல்லை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய நிலையையும் நாடு பெற்றுக் கொண்டது. இவ்வாறான நிலையில் இலங்கையின் அரிசிக்கு வெளிநாடுகளில் கேள்விகளும் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் சிறுபோக நெற்செய்கையாளர்களுக்கும் பசளை மானியம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் யாழ்குடாநாட்டுக்கு நாளை விஜயம் செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பலாலியில் இராணுவத்தினரின் பாவனைக்காக சுவீகரிக்கப்பட்டு இராணுவத்தின் பொறுப்பிலுள்ள 278 ஏக்கர் விவசாயக் காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்கவிருக்கிறார். அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நாட்டை விவசாய உற்பத்திகளில் தன்னிறைவு அடையச் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாறு பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆகவே விவசாயப் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையும் நோக்கில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது மக்களின் வளமான வாழ்வுக்கு அளிக்கப்படும் பாரிய ஒத்துழைப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# மக்களுக்கு சரியான பாதையை காண்பிக்கும் பத்திரிகை தினகரன்

## 92ஆம் ஆண்டு விழாவில் அமைச்சர் டக்ளஸ் புகழாரம்



அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகையாக இருக்கின்ற போதிலும், எமது மக்களுக்கு சிறந்த வழிகாட்டல்கள், செய்திகள் மற்றும் இதர விடயங்களை பக்கச்சார்பின்றி வழங்கக்கூடிய வகையில் தினகரன் வெளிவருவது வரவேற்கத்தக்கதாகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் பத்திரிகையின் 92 ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த 18 ஆம் திகதி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் உரையாற்றுகையில், "இலங்கையின் இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய பத்திரிகைகளில் தினகரனுக்கு எப்போதும் தனியிடம் உள்ளது. பேராசிரியர் கைலாசபதி மற்றும் ஆர். சிவகுருநாதன் போன்றோரை எமது இலக்கிய கர்த்தாக்கள் இன்றும் நினைவுகூருகின்றனர்.

ஒருவர் சார்ந்தோ அல்லது கட்சிகள் சார்ந்தோ விமர்சனங்களை வெளியிடுவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட நபர்களிடமும் கட்சிகளிடமும் குழுக்களிடமும் அவ்விடயம் குறித்து வினவுவது ஆரோக்கியமான விமர்சனத்துக்கு வழிவகுக்கும் என நான் அடிக்கடி ஊடகத்துறை நண்பர்களுடன் கலந்துரையாடும்போது கூறுவதுண்டு. இதனையே இச்சந்தர்ப்பத்திலும் கூற விரும்புகின்றேன்.



எமக்கென்று சமூகக் கடமைகள் இருக்கின்றன. அதே சமூகக் கடமைகள் ஊடகங்களுக்கும் இருக்கின்றன. நான் தவறென்று ஆதார பூர்வமாக ஒப்புவிக்கின்ற நிலையில் அதனை ஏற்றுக்கொண்டு மன்னிப்பு கேட்டு என்னை நானே திருத்திக்கொள்வேனே தவிர, நான் பிடிக்கும் முயலுக்கு மூன்று கால்கள் என்று கூறிக்கொண்டிருக்க மாட்டேன். அதுதான் எனது இயல்பு.

தற்போது தினகரன் பத்திரிகையை சிறந்த முறையில் முன்னெடுத்து வரும் ஆசிரியர் தே. செந்தில்வேலவரின் அயராத உழைப்பை என்னால் உணரக்கூடியதாக உள்ளது. அவருக்குத் துணையாக சிறந்த ஆசிரியர் குழுவினர் செயற்பட்டு வருவதும் பாராட்டுக்குரியது.

அந்த வகையில் இந்தப் பத்திரிகை மேலும் சிறப்போடு பல நூற்றாண்டுகளைக் காணவும் எனது வாழ்த்துகளை தெரிவிக்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.

# டொக்டர் சரண்யா ஜெயக்குமார் வட்டு இந்துக் கல்லூரியில் உரை

இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் ஏற்பாட்டில் இலங்கைக்கு வருகை தந்திருந்த DR. சரண்யா ஜெயக்குமாரின் கருத்தரங்கு பாடசாலை அதிபர் தலைமையில் யா/ வட்டு இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப்புலவர் அரங்கில் நடைபெற்றது.

'ஊழல் அற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்' எனும் தலைப்பில் அவர் கருத்தரங்கை நடத்தினார். "தீதும் நன்றும் பிறர் தர வாரா. அதாவது ஒருவர் நல்லாய் வருவதும் கெட்டுப் போவதும் அவரவரையே சார்ந்தது. ஒரு மனிதனின் பண்பு நேர்மையும் பிறருக்கு தீங்கு செய்யாமல் இருப்பதும் ஆகும். மாணவர்கள் தமது கடமைகளை சரியான முறையில் கடைப்பிடிக்க வேண்டும். மாணவர்களது எதிர்காலம் வெற்றிகரமாக அமைய வேண்டுமெனில் அதற்கு கல்வி மிகவும் அவசியம் ஆகும். யாரையும் முன்மாதிரியாகக் கொள்ளாமல் மாணவர்கள் தமது இயல்பிற்கு ஏற்ப முன்னேற வேண்டும். வறுமை என்பது கல்விக்குத் தடையல்ல. மாணவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாடசாலைக் கல்வியை சரியான முறையில் கற்றால் அவர்களது எதிர்காலம் நல்ல நிலையை அடையும்" என அவர் தமது கருத்துக்களை முன்வைத்தார்.





"தொலைபேசிப் பாவனையினாலும் போதைப்பொருள் பாவனையினாலும் மாணவர்களது ஒழுக்கமும் கல்வியும் பாதிக்கப்படுகின்றன. அதற்கு மாணவர்கள் அடிமையாகக் கூடாது. இது மாணவர்களது மூளையைப் பாதிக்கின்றது. தொலைபேசி விளையாட்டுக்களால் மாணவர்கள் உள்ளத்தில் வன்முறை தூண்டப்பட்டு சமூக சீர்கேடுகள் ஏற்படுகின்றன" என்று அவர் குறிப்பிட்டார். மாணவர்களது உள ஆரோக்கியத்திற்கு இவரது கருத்தரங்கு மிகவும் பிரயோசனமாக அமைந்திருந்தது. இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்த ரட்ணம் பவுண்டேசன் அமைப்பினருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

# இலங்கையின் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது அவசியம்!

## ஐக்கிய நூற்றாண்டு முன்னணி வேண்டுகோள்

அரசியல் தலைமைப் பாத்திரங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்குமாறு ஐக்கிய நூற்றாண்டு முன்னணி இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கட்சித் தலைமைத்துவம் மற்றும் நிர்வாக சபைகளில் பெண்களை இணைத்துக் கொள்வதற்கு முன்னுரிமை அளிக்குமாறு ஐக்கிய நூற்றாண்டு முன்னணி கேட்டுக்கொண்டுள்ளது.

அம்முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பெண்களுக்கான வேட்புமனுக்களை அதிகரிக்க வேண்டும். நீண்ட காலமாக இலங்கைப் பாராளுமன்றத்தில் பெண்களின் குறைவான பிரதிநிதித்துவம் ஒரு சவாலாக இருக்கிறது. வரலாற்று ரீதியாக பெண்களுக்கு தலைமைத்துவப் பதவிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் நியமனங்களில் முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. இந்த ஏற்றத்தாழ்வு பாலின சமத்துவத்தின் கொள்கைகளை குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது.

ஐக்கிய நூற்றாண்டு முன்னணியானது அரசியல் தலைமையின் பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கிறது.



அத்துடன் முன்மாதிரியாக வழிநடத்த உறுதிபூண்டுள்ளது. பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதற்கான எங்கள் அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக, எங்கள் கட்சியில் உள்ள அனைத்து தலைமைப் பதவிகளிலும் 50% பெண்களால் வகிக்கப்படுவதை உறுதிசெய்ய உறுதியான நடவடிக்கை எடுத்துள்ளோம். மேலும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் 50 வீதம் பெண்களை நியமிப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.



அரசியல் தலைமைத்துவத்தில் பாலின சமநிலையை அடைவது கொள்கை சார்ந்த விடயம் மட்டுமன்றி, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு மூலோபாய கட்டாயமும் ஆகுமென்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எமது கட்சிக்குள் பெண்களின் குரல்களை உயர்த்துவதற்கு நாம் தீவிரமாகச் செயற்படுகின்றோம். அனைத்து மட்டங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

இந்த முக்கியமான முயற்சியில் எங்களுடன் இணைந்து கொள்ளுமாறும், அரசியல் அரங்கில் பெண்களைச் சேர்ப்பதற்கும், அதிகாரம் அளிப்பதற்கும் முன்னுரிமை அளிக்குமாறும் அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கிறோம். நமது தேசத்தின் எதிர்காலத்திற்கு பங்களிப்பதற்கும் வடிவமைப்பதற்கும் பாலின வேறுபாடின்றி அனைத்து தனிநபர்களுக்கும் சமமான வாய்ப்புள்ள இலங்கையை நோக்கி நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சவூதி மன்னரின் விருந்தினர்களாக உம்ரா சென்றோர் அனைவரும் தாயகம் திரும்பினர்

இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலர் சவூதி அரேபிய மன்னரின் நான்காவது மற்றும் இறுதிக் குழு விருந்தினர்கள் உம்ரா கடமைகளை நிறைவேற்றிவிட்டு தத்தமது நாடுகளுக்கு புறப்பட்டுச் சென்றனர்.

உலகின் சகல நாடுகளிலும் வாழும் துறை சார்ந்த ஆளுமைகளை தமது நாட்டின் விருந்தினர்களாக அழைத்து உம்ரா வணக்கத்தை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தை வழங்கி, உணவு மற்றும் தங்குமிட வசதிகளையும் வருடாந்தம் ஏற்பாடு செய்து கொடுக்கிறது சவூதி அரேபியா. அவ்வாறே இவ்வருடமும் உலகில் பல பாகங்களில் உள்ள 1000 பேர் இத்திட்டத்தின் கீழ் மன்னரின் விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தனர்.

ரஷ்யா, பங்களாதேஷ், தஜிகிஸ்தான், இலங்கை, மாலைதீவு, இந்தியா, கஜகஸ்தான், பாகிஸ்தான், அஜர்பைஜான், நேபாளம், துருக்கி, கொசோவோ, கிர்கிஸ்தான், துர்க்மெனிஸ்தான், அவுஸ்திரேலியா, ஐரோப்பா, ஆசியா மற்றும் ஓசியானியா போன்ற 16 நாடுகளைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் என பல்துறை சார்ந்த ஆளுமைகளான 250 முக்கிய இஸ்லாமிய பிரமுகர்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

1000 பேர் நான்கு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இறுதி 250 பேரைக் கொண்ட உம்ரா யாத்திரிகர்கள் குழுவில் இலங்கையை சேர்ந்த ஆளுமைகள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இத்திட்டத்தின் கீழ் உலமாக்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளடங்கலாக பத்து உம்ரா யாத்திரிகர்களைக் கொண்ட இலங்கைக்குழு கடந்த 06.03.2024 அன்று மதீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தது.

இலங்கையில் இருந்து கலந்து கொண்ட யாத்திரிகர்களுக்கான முன்னேற்பாட்டை சவூதி தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி வழிகாட்டலில் சவூதி அரேபிய தூதரகம் சிறப்பாக செய்திருந்தது.

மன்னரின் விருந்தினராக சென்ற அனைவருக்கும் போக்குவரத்து, தங்குமிடம், உபசரிப்பு என சகல வசதிகளையும் சவூதி வழங்கியிருந்தது.

விருந்தினர்கள் உம்ரா கடமைகளை நிறைவேற்றியதுடன் பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க இடங்கள், குபா மஸ்ஜித், புனித அல் குர்ஆன் அச்சிடும் கிங் ஃபஹத் வளாகம், சர்வதேச கண்காட்சி மற்றும் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு, இஸ்லாமிய நாகரிகத்தின் அருங்காட்சியகம் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல்சௌத் மற்றும் சவூதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல்சௌத் ஆகியோருக்கு விருந்தினர்கள் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளனர்.





அஷ்ஷெய்க்
**அஹ்மத் இம்தியாஸ்...**
(மதனி)











## தினகரன் 92ஆவது பிறந்த நாளன்று...

# 'தொழுநோய்' கட்டுரைப்போட்டியில் வெற்றிபெற்றோரும் கௌரவிப்பு







தினகரன் 92 ஆவது பிறந்தநாளன்று தினகரன் நாளிதழ், தினகரன் வாரமஞ்சரி மற்றும் காவேரிக் கலாமன்றம் ஆகியன இணைந்து நடத்திய தொழுநோய் தொடர்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இக் கட்டுரைகளின் தொகுப்பு உள்ளடக்கி 'விழி' எனும் பெயரில் நூலொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சபைத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் முன்னிலையில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் ஹாசிம் உமர், லேக்ஹவுஸ் வெளியீடுகளின் பிரதம ஆசிரியர், நிர்வாக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பாடசாலைப் பிள்ளைகள் பொதுமக்கள் மத்தியில் தொழுநோய் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதலை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய கட்டுரையாளர்களின் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெயிடப்பட்டது. இது எமது நாட்டு மக்களின் எதிர்கால சந்ததியினர்களின் ஆரோக்கியமான சுகாதார வாழ்வுக்கான ஒரு முக்கியமான நூலாகும். இந்த 'விழி' எனும் கட்டுரைத்தொகுப்பின் பதிப்பாசிரியர் இக்பால் அலியாவர். இந்நிகழ்வில் போது நூலின் முதல் பிரதியினை புரவலர் ஹாசிம் உமரிடம் காவேரிக் கலாமன்றத்தின் இயக்குனர் வணபிதா ரீ. எஸ். யோசுவா அடிகளார் மற்றும் நூலின் பதிப்பாசிரியர் இக்பால் அலி ஆகியோர் சேர்ந்து வழங்கி வைத்தனர்.

இக்கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ். பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜுட் அல்போன்சஸ் மேவிஸ் ஜின்யா லேக்ஹவுஸ் நிறுவன தலைவரிடமிருந்து ரூ. 50,000 பணப்பரிசும் சான்றிதழையும் பெற்றுக்கொண்டார். இரண்டாம் இடம்பெற்ற வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவன் செல்வன் எஸ். அஸ்வின் ரூ. 25,000 பணப் பரிசிலையும் சான்றிதழையும், மூன்றாம் இடம் பெற்ற வவுனியா ரம்பைக்குளம் பெண்கள் மகா வித்தியாலய மாணவி எஸ். டிபானி ரூபா 15,000.00 பணப்பரிசிலையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியில் பங்குபற்றிய 10 பேருக்கு ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. இதில் முஹமட் தஸ்லிம் அப்துர் ரஹ்மான் காத்தான்கு, டி,பி. புஸ்பராஜு அளுத்மாவத்தை, கொழும்பு. எஸ்.சங்கவி , சாவகச்சேரி ஆகியோர் வருகைதந்து பெற்றுக்கொண்டனர்.

# மக்களுக்குப் பணியாற்றுவதற்காக தமதுயிரை தியாகம் செய்த பொலிஸாரின் 160 ஆவது நினைவுதினம் இன்று



இலங்கை வாழ் மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்காக வீரத்துடனும் விவேகத்துடனும் செயற்பட்டு 160 வருட பொலிஸ் வரலாற்றில் தங்கள் உயிர்களை நீத்த பொலிஸ் வீரர்களின் ஞாபகார்த்த தினம் இன்றாகும்.

'தர்மமாக செயற்படுபவன் தர்மத்தினால் காப்பாற்றப்படுவான்' எனும் தொனிப்பொருளின் கீழ் இயங்கும் பொலிஸ் சேவையானது நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் அன்றும் இன்றும் செயற்பட்டு வருகின்றது. தன் உயிரை தியாகம் செய்த பொலிஸ் வீரர்களின் ஞாபகார்த்த தினமான இன்றைய தினம் சகல பொலிஸ் பிரிவுகளிலும் காலை 8.00 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

1864 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி கேகாலை மாவட்டத்தில் மாவனெல்ல உதுவன்கந்த பிரதேசத்தில் தீகிரி கேவகே சரதியல் என்ற வன்முறையாளரை கைது செய்யும் நடவடிக்கையின் போது சரதியலின் ஆதரவாளரான மம்மலை மரிக்கார் என்பவரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி பொலிஸ் கொஸ்தாபல் சபான் மரணமடைந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும், மார்ச் மாதம் 21 ஆம் திகதி பொலிஸ் வீரர்கள் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சபான் மரணமடைந்து மார்ச் 21 ஆம் திகதியுடன் 177 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இன்று அவரது நினைவு தினமாகும். அதன் பின்னர் 1894 ஆம் ஆண்டு பொரளை பொலிஸ் நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த போது பொலிஸ் கான்ஸ்டபிள் 289 கே. தம்பிமுத்து சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக தனது உயிரை தியாகம் செய்த மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் ஆவார்.

முப்பது வருடகால யுத்தத்தின் போது இலங்கை இராணுவத்தினர் அதிகளவானோர் தனது உயிர் தியாகம் செய்துள்ளனர். அதற்கு அடுத்தபடியாக நாட்டுக்காக தனது இன்னுயிரை தியாகம் செய்தது இலங்கை பொலிஸ் படையாகும். யுத்தத்தின் போது 2598 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரை தியாகம் செய்துள்ளதுடன், 1575 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அங்கவீனமடைந்தனர். மேலும் நாட்டினுள் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்ட வன்முறையின் போது இன்றுவரை 3157 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். அதன் போது 44 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அங்கவீனமடைந்தனர்.

2024.02.09 ஆம் திகதி இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது சந்தேக நபர்களை கைதுசெய்ய முற்பட்ட வேளை சந்தேக நபர்களின் துப்பாக்கி சூட்டு பிரயோகத்தால் பொலிஸ் சார்ஜன்ட் 55457 இரத்னவீர உயிர்த் தியாகம் செய்துள்ளார். மேலும் 2023.11.23 ஆம் திகதி காலை ஜா எல பிரதேசத்தில் சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முற்பட்ட வேளை, சந்தேக நபர் ஆற்றில் பாய்ந்து தப்பிக்க முயற்சி செய்தார். அவ்வேளை பயிற்சி பொலிஸ் கான்ஸ்டபிள் 99033 கிருஷ்ணமூர்த்தி பிரதாபன் சந்தேக நபரை கைது செய்வதற்காக ஆற்றில் குதித்தபோது நீரில் அள்ளுண்டு தனது இன்னுயிரைத் தியாகம் செய்தார்.

அத்தோடு கொழும்பு போக்குவரத்துப் பிரிவின் கீழ் இயங்கும் கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த போது 2023.10.05 ஆம் திகதி சுதந்திர சதுக்கம் முன்பாக பயிற்சிப் பொலிஸ் கானஸ்டபிள் 19498 அங்கம் பொடிகே மனோஜ் பியங்கர் வாகன விபத்துக்குள்ளாகி தனது உயிரை தியாகம் செய்த மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் ஆவார்.

பொதுமக்களின் ஜனநாயக உரிமை, பாதுகாப்பு, வன்முறை தடுப்பு, போக்குவரத்துக் கட்டுப்பாடு, சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது உயிர்களை அர்ப்பணித்தது மட்டுமின்றி சில நேரங்களில் தமது குடும்ப உறுப்பினர்களின் உயிர்களையும் அர்ப்பணித்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக தற்போதைய பொலிஸ் மாஅதிபரின் பணிப்புரையில் மேற்கொள்ளப்பட்டு வரும் 'யுக்திய' எனும் அநீதிக்கெதிரான சுற்றிவளைப்பானது குற்றங்களை இனங்கண்டு அவற்றை ஒடுக்கும் நடவடிக்கையாகும். அதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் காலநிலை மற்றும் இரவு பகல் பாராது தனது கடமையை உத்வேகத்துடன் நிறைவேற்றி வருகின்றனர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு மற்றும் சமாதானத்தை பாதுகாப்பதற்கு, மற்றும் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாப்பதற்கு துணிச்சல் மிக்க கௌரவமான பணிக்கு உரித்துடையவராய் இருக்க மன தைரியமிக்க, நாட்டுப்பற்றுமிக்க சிறந்த பிரஜையால் மட்டுமே இயலும். அத்துடன் தனது உயிரை துச்சமாக கருதி கடமையை சரிவர நிறைவேற்றுவதும் அவ்வாறான உத்தியோகத்தர்களே. தனது பெற்றோர், மனைவி, பிள்ளைகள் மற்றும்






தனது நெருங்கியவர்களிடமிருந்து விலகி தனது இலக்கை கடந்த காலத்தில் நிறைவேற்றியது போன்றே நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் பொலிஸ் உத்தியோகத்தர்களால் தயக்கமின்றி கௌரவத்துடன் நிறைவேற்றி வருகின்றனர்.

மேலும் இன்று 160 வது பொலிஸ் வீரர்கள் நினைவு தினத்தன்று பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன் அவர்களால் பொலிஸ் சேமைப் படை தலைமையகத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக தனது உயிரை தியாகம் செய்த உத்தியோகத்தர்களின் குடும்பங்களை கௌவரவிக்கும் முகமாக பொலிஸ் மா அதிபர் அவர்களின் கரங்களினால் நன்கொடை மற்றும் பரிசில்கள் வழங்கிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(பொலிஸ் ஊடகப் பிரிவு)

# விபத்துகளால் பாதிப்புறும் மூன்றாம் தரப்பினருக்கு ரூ. 5 இலட்சத்திற்கு உட்பட்டதாக இழப்பீடு

மோட்டார் வாகன விபத்துகளால் பாதிக்கப்படும் மூன்றாம் தரப்பினருக்கு அல்லது அவர்களின் சட்டப்பூர்வமான உரித்துடையவர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் இன்றி அதிகபட்சமாக ஐந்து இலட்சம் ரூபாய்க்கு உட்பட்டவகையில் இழப்பீடு வழங்கும் மாற்று முறையை அறிமுகப்படுத்த இலங்கை காப்பறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, போக்குவரத்து துறை தொடர்பான ஏனைய பங்குதாரர்கள் மற்றும் இலங்கையின் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் இந்த மாற்று முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய முறை நடைமுறைபடுத்தப்பட்டாலும் தற்போதுள்ள சட்ட முறைப்படி இழப்பீடு வழங்குவதற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழு சபை தெரிவித்துள்ளது. உரிமை கோரும் உரிமையில் எவ்வித பாதிப்பும் இல்லை என சுட்டிக்காட்டியுள்ள இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, பதிவு செய்யப்பட்ட பொது காப்புறுதி நிறுவனங்கள் கருணை அடிப்படையில் இந்த இழப்பீட்டை வழங்குவதாகவும் கூறுகிறது.

மோட்டார் வாகன விபத்தில் இறந்த அல்லது நிரந்தரமாக ஊனமுற்ற பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுபவர்கள் இதன் கீழ் தகுதியுடையவர்களாவதோடு மற்றும் விபத்தில் சிக்கிய மோட்டார் வாகனத்தை காப்புறுதி செய்த காப்புறுதி நிறுவனம் உரிய இழப்பீட்டுத் தொகையை வழங்கும்.

இதன்படி, விபத்துக்குள்ளான மோட்டார் வாகனம் இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட பொது காப்புறுதி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட குறைந்தபட்சம் மூன்றாம் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதியை கொண்டிருப்பது கட்டாயமமாகும்.

இதன்படி, இழப்பீட்டைப் பெறுவதற்காகஇ இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க சுற்றறிக்கையில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்துஇ விபத்துக்குள்ளாக்கிய மோட்டார் வாகனத்தை காப்புறுதி செய்துள்ள காப்புறுதி நிறுவனத்திடம் ஆறு மாதங்களுக்குள் இறப்பு அல்லது நிரந்தர இயலாமை குறித்த விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்டவருக்கு அல்லது சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு இழப்பீடு மற்றும் இறப்பு ஏற்பட்டால் 500,000 ரூபாயும் நிரந்தர ஊனம் ஏற்பட்டால் அதிகபட்சமாக 500,000 ரூபாயும் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளுக்கு உட்பட்டு வழங்கப்படும். இந்த இழப்பீடு பெறுவதற்கு ஒரு நிபந்தனையாக மரணம் அல்லது இயலாமை மோட்டார் வாகன விபத்தின் விளைவாக ஏற்பட வேண்டும்.

விபத்து நடந்த 12 மாதங்களுக்குள் இறப்பு அல்லது நிரந்தர ஊனம் அல்லது நியமனம் தொடங்கப்பட வேண்டும் என்றும் ஆணையம் கூறுகிறது. இந்த அமைப்பின் கீழ் பெறப்படும் இழப்பீட்டுத் தொகை பாதிக்கப்பட்டவருக்கு அல்லது சட்டப்பூர்வ வாரிசுக்கு போதுமானதாக இல்லாத பட்சத்தில்இ நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வாய்ப்பு இருப்பதாக இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது

## தங்கத்தின் விலைகளில் நேற்று முதல் மாற்றம்



தங்கத்தின் விலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால், நேற்று (20) ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 657,543 ரூபாவாக குறைவடைந்துள்ளது. இதன்படி, 24 கரட் ஒரு கிராம் தங்கம் 23,220 ரூபாவாகவும், 24 கரட் எட்டு கிராம் (1 பவுண்) தங்கம் 185,600 ரூபாவாகவும், 22 கரட் ஒரு கிராம் தங்கம் 21,270 ரூபாவாகவும், 22 கரட் எட்டு கிராம் (1பவுண்) தங்கம் 170,150 ரூபாவாகவும், 21 கரட் ஒரு கிராம் தங்கம் 20,300 ரூபாவாகவும், 21 கரட் எட்டு கிராம் (1பவுண்) தங்கம் 162,400 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளது.

## சட்ட விதிகளுக்கமையவே...

பத்திரத்துக்காக ஒருமுறை மாத்திரமே ஒன்றரை கோடி ரூபாவை அரச வருமானமாகப் பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.இது குறித்து விளக்கிய ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டதாவது:

இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை 12 புதிய அனுமதிப்பத்திரங்கள் மூலம் அரசுக்கு 150 மில்லியன் மேலதிக வருமானம் கிடைத்தது. அரசாங்கம் பின்பற்றும் சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி விண்ணப்பிப் போருக்கே கலால் அனுமதிப்பத்திரங்களை எமது திணைக்களம் வழங்குகிறது. திணைக்களம் ஒருபோதும் லஞ்சம் பெறுவதில்லை. வருமானத்தை அதிகரிப்பதற்காகவே அரசாங்கம் கட்டணம் அறவிடுகிறது. இந்த உண்மைகளை அறிந்தோ அல்லது அறியாமலோ சிலர் முன்வைக்கும் குற்றச்சாட்டை மறுக்கிறேன். புதிய மதுபான அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ள கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலே இவ்வாறான விளகத்தை ஆணையாளர் வழங்கியிருந்தார். அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப் பொருட்களை குறைக்கவும் புதிய கலால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் விளக்கினார்.

## மத்திய வங்கி சம்பள அதிகரிப்பு:...

சேவையாளர்களின் சம்பள அதிகரிப்புக்கு நாங்களும் உடன்படவில்லை.சம்பளம் அதிகரிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கும் அரசாங்கத்துக்கும், எவ்வித தொடர்பும் கிடையாது.எனவே, இவ்விவகாரத் துடன் அரசாங்கத்தை தொடர்புப்படுத்தி கருத்து தெரிவிப்பதை எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் இந்த விடயத்தில் சிறந்த நிலைப்பாட்டில் உள்ளார்.

ஆனால், எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகிறது.சம்பள அதிகரிப்பு முரணானது என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.

புதிய மத்திய வங்கி சட்டத்தை திருத்தம் செய்ய வேண்டும் என பிறிதொரு தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.

மத்திய வங்கியின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா உள்ளார்.

ஆகவே இவ்விடயம் குறித்து முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும். அரசாங்க நிதிக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையை பரிசீலனை செய்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## சபாநாயகருக்கு எதிரான பிரேரணை...

அதற்கிணங்க மூன்றாவது நாளாக இன்றும் விவாதம் நடைபெறுகிறது. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே மூன்று நாட்கள் விவாதம் நடத்த இணங்கப்பட்டது

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட 44 எதிர்க்கட்சி எம்பிக்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை அண்மையில் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைக்கு முரணாக நிறைவேற்றப்பட்டதாகவும், எதிர்க்கட்சிகள் முன்வைத்த ஆட்சேபனையை புறக்கணித்து ஆளும் கட்சியின் தேவைக்கு ஏற்ப அதன் சரத்துக்களை நிறைவேற்ற சபாநாயகர் இடமளித்ததாகவும் எனக் குற்றஞ்சுமத்தியே எதிர்க்கட்சியினர் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்தனர்.

## ரூபா 12 கோடி பெறுமதியான...

வசிக்கும் 60 வயதுடையவர் எனவும் மற்றையவர் கொழும்பு பம்பலப்பிட்டியில் வசிக்கும் 65 வயதுடையவர் எனவும் தெரியவந்துள்ளது.

12 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளை பயணப்பொதிகளிலிருந்த விஸ்கி போத்தல் பெட்டிகளில் இவர்கள்,மறைத்து வைத்திருந்ததாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சுவசெரிய 1990: உலகின்...

சுவசெரிய சேவை குறித்த அறிக்கை பதிவாகியுள்ளது.

இந்த அறிக்கையின்படி, 2016இல், நாட்டில் சுவசெரிய அம்புலன்ஸ் சேவை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், 1.8 மில்லியன் இலங்கையர்கள் இச்சேவையை பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அழைப்புக் கிடைத் 12 நிமிடங்களில் உதவி தேவைப்படுவோரை அணுகி, மருத்துவமனை அல்லது பராமரிப்பு மையத்திற்கு அழைத்துச் செல்ல சுவசெரிய உதவுகிறது.

2018 இல், பாராளுமன்றத்தின் சிறப்புச் சட்டத்தின் மூலம் சுவசெரிய ஆம்புலன்ஸ் சேவை, சுயாதீனமான தனியார் அமைப்பாக நிறுவப்பட்டது. தெற்காசியாவில் ஒரு புரட்சிகர டிஜிட்டல் ஹெல்த் மற்றும் அவசரச் சேவை திட்டமாக சுவசெரிய விளங்குவதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

## சீனாவிலிருந்து பெரிய...

குறைவடையும் எனவும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். இதற்கு மேலதிகமாக பெரிய வெங்காயத்திற்கு பதிலாக இளஞ்சிவப்பு வெங்காயத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இளஞ்சிவப்பு வெங்காய இறக்குமதிக்கு அறவிடப்படும் 70 ரூபாய் வரி பத்து ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கீரிமலை குமாரசுவாமிக்...

ஆதீனகர்த்தாவாகவிருந்து ஆலயத்தை வழிநடாத்தி வந்தார். அண்மைக்காலமாக உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்றைய தினம் அதிகாலை இறைவனடி சேர்ந்துள்ளார்.

## காஸா சிறுவர் நிதியத்துக்கு...

பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இப்தார் மாதத்தில் நிவாரணம் வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஜனாதிபதி காஸா நிதியத்திற்கு கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் 05 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

காஸா குழந்தைகள் நிதியத்துக்கு இதுவரை 57 இலட்சத்து 73 ஆயிரத்து 512 ரூபா நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த நிதி விரைவில் காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் நலன் புரி தேவைகளுக்காக இலங்கை அரசாங்கத்தால் அனுப்பிவைக்கப்பட உள்ளது. வர்த்தகர்கள், பொது அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினரும் இந்த நிதியத்துக்கு உதவிகளை வழங்கிவரும் நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முதல் அரசியல் தலைமையாக இந்நிதியை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மத்திய வங்கி சம்பள அதிகரிப்பை...

மத்திய வங்கி அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் வரை, சம்பள அதிகரிப்பை நிறுத்துவதற்கு நிதியமைச்சரினால் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும், நான்கு வாரங்களுக்குள் அதற்கான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று மத்திய வங்கியின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம் தொடர்பான அரசாங்க நிதிக் குழுவின் அறிக்கையை, சபையில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மத்திய வங்கியின் அதிகரித்த...

அதை உபயோகித்து மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்ததை அனுமதிக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளத்தை 70வீதம் வரை அதிகரித்துள்ளதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## மின்சார, எரிசக்தி சட்டமூலம்...

திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதும் மீதப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மன்னார் மின் உற்பத்தி திட்டம் உள்ளிட்ட மின் உற்பத்தி திட்டங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று சபையில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## கோப் குழுவிலிருந்து...

"கோப்" தலைவராக பொதுஜன பெரமுன எம்பி ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அக்குழுவிலிருந்த உறுப்பினர்கள் பலர், பதவிகளை இராஜினாமா செய்து வருகின்றனர்.

மேற்படி குழுவிலிருந்து கடந்த திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தி எம். பி எரான் விக்ரமரட்ன பதவி விலகினார்.இதையடுத்து நேற்று முன்தினம் எதிர்த்தரப்பு சுயாதீன எம்.பிக்களான தயாசிறி ஜயசேகர, சரித்த ஹேரத், ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களான ஹேஷா விதானகே, நளின் பண்டார, எஸ்.எம்.மரிக்கார் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பி சாணக்கியன் ஆகியோரும் பதவி விலகினர்.

## செயற்கை நுண்ணறிவு பாடம்...

நிர்மாணிக்கப்படவுள்ளன. மேலும் இதற்குத் தேவையான தொழினுட்ப கருவிகளும் பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முதற்தடவையாக இருபது மாவட்டங்களிலிருந்து இருபது பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பாடத்திட்டங்களுக்கு தேவைப்படும் உதவிகளை மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் குழு வழங்கவுள்ளது.

## நிபுணர் அறிக்கையை...

அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

உயிரிழந்தவர் பயன்படுத்திய இலத்திரனியல் சாதனங்கள் தொடர்பில் அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை என முன்வைக்கப்பட்ட கருத்துக்களைப் பரிசீலித்த பின்னரே, இது தொடர்பான நினைவூட்டல் கடிதத்தை வழங்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## மாகாண சபைத்... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

இவர்களுக்கு சார்பான தீர்ப்பு கிடைக்கும் போது சபைக்கு வந்து உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அப்பாற்பட்டு செல்ல கூடாது என்று குறிப்பிடுகிறார். ஏனைய சந்தர்ப்பங்களில் வேறு விதமாக கருத்துக்களை முன்வைக்கின்றார். அந்த வகையில் ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு என்பதைக் கேட்க விரும்புகிறேன் என அமைச்சர் தெரிவித்தார். இதன்போது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய சுமந்திரன் எம்பி உயர்நீதிமன்றத்தின் குறைநிறைகளை சுட்டிக்காட்டும் உரிமை எமக்கு ண்டு.அன்று குறிப்பிட்ட விடயத்துக்கும், இன்று குறிப்பிடும் விடயத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் உள்ளன. நான் அன்று குறிப்பிட்ட கருத்தில் எவ்வித மாறுபாடும் கிடையாது என்றார். அதனை தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், மாகாண சபைத் தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.சிறந்த சட்ட வரைபை நாம் தயார் செய்து முன்வைத்தோம். உயர்நீதிமன்றத்தின் திருத்தங்கள் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகளுக்கு நான் எதிர்ப்பு தெரிவித்தேன் என தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

### (21.03.2024)




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)




**மேஷம்:** நண்பர்கள் தேடி வந்து உதவி செய்வார்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சில தங்கள் வேலையை விட்டு அதிக ஆதாயம் உள்ள பணிக்கு செல்ல முயற்சிப் பார்கள்.




**ரிஷபம் :** சக பணியாளர்களிடம் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. சொந்த தொழில் செய்பவர்கள் பணிகளை விரைவாக செய்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.



**மிதுனம் :** சொந்தத் தொழில் சுறுசுறுப்பாக நடைபெறும். பழைய வாடிக்கையாளர்கள் மூலம் புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.



**கடகம் :** உத்தியோகத்தில் சிலருக்கு அலுவலகப் பணி காரணமாக வெளியூர் செல்ல நேரிடும். சொந்த தொழில் செய்பவர்களுக்கு பழைய வாடிக்கையாளர்கள் மூலம் புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்க பெறும்.



**சிம்மம் :** உத்தியோகத்தில் சிலருக்கு அலுவலகத்தில் எதிர்பார்த்த கடன் தொகை கிடைக்க பெறும். அதன் மூலம் பாதையில் நிறுத்தி இருந்த பணியை தொடர்வார்கள்.



**கன்னி :** உத்தியோகத்தில் உள்ளவர்கள் செய்யும் வேலைகளில் சிரமங்கள் இருந்தாலும் உயரதிகாரிகளின் ஆதரவு இருக்கும். சொந்த தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு ஆதாயம் குறையாது.



**துலாம் :** வரவேண்டிய பணத்தை பெற அதிக அலைச்சலை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் சக பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.



**விருச்சிகம்:** சக பணியாளர்களின் சொந்த விஷயங்களில் தலையிடாதீர்கள். சொந்த தொழில் செய்பவர்கள் வேலைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.



**தனுசு :** உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைகளில் ஏற்பட்ட தவறால் உயர் அதிகாரிகளின் கோபப்பார்வையை சந்திக்க நேரலாம். பொறுப்புகளில் கூடுதல் கவனம் இருப்பது அவசியம்.



**மகரம் :** உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு அலுவலகத்திலேயே பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கக்கூடும். சொந்த தொழில் செய்பவர்களுக்கு அதிக பொறுப்புகளால் போராட்டமான நிலை ஏற்படலாம்.



**கும்பம் :** சகா பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டியது இருக்கும். சொந்த தொழில் செய்பவர்கள் பரபரப்பாக பணியாற்றினாலும் எதிர்பார்த்த வருமானம் இருக்காது.



**மீனம் :** உத்தியோகத்தில் சிலருக்கு பணி புரியும் அலுவலகத்திலேயே பதவி உயர்வு கிடைக்கலாம். சொந்தத் தொழில் செய்பவர்கள் புதிய உத்திகளை கையாண்டு வேலைகளை விரைவாக செய்து கொடுப்பார்கள்.

## திருக்கோவில்... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் மெதடிஸ்த தமிழ் வித்தியாலய மாணவனான ஜெயக்குமார் விதுர்ஜன் (16 வயது) கடந்த மார்ச் (11) பாடசாலையில் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் பங்கேற்றபோது திடீரென மயக்கமுற்றார். திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்திருந்தார்.

இம்மாணவன் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது சுமார் 3 மணி நேரமாக எவ்வித சிகிச்சையும் அளிக்கப்படவில்லையென, ஊர் மக்களும் மாணவனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவர்களும் குறிப்பிடுகின்றனர்.

அந்த வைத்தியசாலை மருத்துவர்களின் அசமந்தப் போக்கே மாணவனின் மரணத்திற்கு காரணமென மக்கள் இன்றும் கொதித்துப்போயுள்ளனர். அதனால் அவர்கள் அந்த வைத்தியசாலைக்கு முன்பாக நிகழ்த்திய சில போராட்டங்களால் வைத்தியசாலைக்கு சிறு சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

எனினும், இதனை காரணமாக வைத்து 11 நாட்களாக திருக்கோவில் ஆதாரவைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. மக்கள் கிழக்கு மாகாண ஆளுநரிலிருந்து முறைப்பாடு செய்யக்கூடிய சகல தரப்பினரிடமும் இவிடயம் தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

அந்த மாவட்ட எம்.பி.யான கலையரசன் கூட இதை மீண்டும் திறப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.ஆனால்அந்தவைத்தியசாலை 11 நாட்களாக மூடப்பட்டுள்ளது. பெருமளவு நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வந்து திரும்பி போயுள்ளனர்.

இது மனிதாபிமானப்பிரச்சினை. எனவே சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் இந்த சபையின் ஊடாக மனித உயிர்களுடன் விளையாட விட வேண்டாம் என்ற கோரிக்கையை முன் வைக்கிறோம்.

உடனடியாக அந்த வைத்தியசாலை திறக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## பாராளுமன்றத்தி... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

அதன் பின்னர் அமைச்சரவை பதவி விலகியது. அதனைத் தொடர்ந்து பதில் ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்றம் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை அவசரமாக கொண்டுவரப்பட்ட ஒன்றல்ல. பல சந்தர்ப்பங்களில் அவர் பொறுப்பை பாதுகாக்கத் தவறியுள்ளார். குறிப்பாக நிகழ்நிலை காப்புச் சட்டத்தை சபையில் அனுமதிக்கும்போது, அது தொடர்பில் இருந்த குறைபாடுகளை நாம் சுட்டிக்காடியிருந்தபோதும் சபாநாயகர் அதனை கண்டுகொள்ளாமல் செயற்பட்டார். நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் 44 திருத்தங்கள் காணப்பட்டன, அதில் 31 விடயங்களுக்கு உயர் நீதிமன்றம் திருத்தங்களை மேற்கொண்டிருந்தது. அந்த திருத்தங்களை முறையாக மேற்கொள்ளாமலே இந்த சட்டத்தை பாராளுமன்றத்தில் அனுமதிக்க சபாநாயகர் நடவடிக்கை எடுத்தார். சபாநாயகரின் இந்த நடவடிக்கைக்கு பாராளுமன்ற அதிகாரிகளும் பொறுப்பாகின்றனர்.

மேலும் நிறைவேற்றுத் துறையின் தேவைக்கு செயற்படாமல் சொந்த தீர்மானம் மேற்கொண்டு சபாநாயகர் செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. பொலிஸ் மா அதிபர் நியமனத்தின் போது அரசியலமைப்பு சபையிலும் அவ்வாறே அவர் செயற்பட்டார். முதலாவது சார்ள்ஸ் மன்னரின் காலத்தில் பிரித்தானிய பாராளுமன்றத்தின் சபாநாயகராக இருந்த சபாநாயகருக்கு ஏதாவொரு விடயத்தை செய்யுமாறு மன்னன் அழுத்தம் பிரயோகித்தார். அதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், எனது கண்களுக்கு காண்பது பாராளுமன்றம் உத்தரவிடும் விடயங்கள். எனது செவிகளுக்கு புலனாவது பாராளுமன்றம் உத்தரவிடும் விடயங்கள். எனது நாவினால் வெளிப்படுவது பாராளுமன்றம் எனக்கு உத்தரவிட்ட விடயங்கள். அதனை மீறி செயற்பட எனக்கு இயலாது. அதனால் உங்களின் உத்தரவை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என பதிலளித்துள்ளார். இந்த சம்பவம் எமது சபாநாயகருக்கும் பொருத்தமாகும். நிறைவேற்றுத்துறையின் தேவைக்காக செயற்படாமல் சபையின் மரபுகளை பாதுகாப்பதே சபாநாயகரின் கடமையும் பொறுப்புமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நகர்வலம்



ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2024/2028 புதிய கூட்டு மூலோபாயத் திட்டம்;

## பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும்

(எம்.எஸ்.பாஹிம்)

ஆசிய அபிவிருத்தி வங்கி 2024 / 2028 காலப்பகுதியை உள்ளடக்கிய இலங்கைக்கான புதிய கூட்டு மூலோபாயத் திட்டத்தை (CPS) அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த மூலோபாயத் திட்டம் நாட்டின் நுண்பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதில் கவனம் செலுத்துவதோடு அபிவிருத்தி மற்றும் பின்னடைவில் இருந்து நிலையான மீட்புக்கு அடித்தளத்தை அளிக்கிறது.

"இந்த புதிய கூட்டு மூலோபாயத்திட்டம், பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான நாட்டின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்கும் அதேவேளை, பசுமையான மற்றும் நீண்டகால நிலையான வளர்ச்சியை அடைவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தற்போதைய உதவியின் அடிப்படையில் கட்டமைக்கப்படும்" என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தகபூமி கதோனோ தெரிவித்தார்.

"அறிவுசார் தீர்வுகள், கொள்கை




ஆலோசனை ஆதரவு மற்றும் முன்னுரிமை முதலீடுகள் மூலம் நுண்பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மற்றும் கட்டமைப்புத் தடைகளை நிவர்த்தி செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியளிக்க உள்ளது.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீள்வதற்கான அறிகுறிகள் தென்படுவதாக ஆசிய அபிவிருததி வங்கி குறிப்பிட்டுள்ளது. செப்டம்பர் 2022 மற்றும் டிசம்பர் 2023 வரையான காலப்பகுதியில் இலங்கையின் பணவீக்கம் 69.8% இலிருந்து 4.0% ஆகக் கணிசமாகக் குறைந்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. அந்நிய செலாவணி கையிருப்பு 2022 இல் 1.9 பில்லியன் டொலர்களில் இருந்து 2023 இல் 4.4 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது பாதியில் சாதகமான நிலைக்குத் திரும்பியுள்ளது.

இலங்கைக்கான புதிய மூலோபாய திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி மூன்று மூலோபாய நோக்கங்களில் கவனம் செலுத்தவுள்ளதோடு அரச நிதி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் பசுமை அபிவிருத்தியில் தனியார் துறையை ஊக்குவித்தல் மற்றும் காலநிலை ஸ்மார்ட் அரச சேவைகளுக்கான பிரவேசத்தை மேம்படுத்துதல் என்பனவே அவையாகும். அத்தோடு மூன்று கருப்பொருள் தொடர்பில் முன்னுரிமையளிக்கப்பட இருப்பதோடு காலநிலை நடவடிக்கை, பேரழிவை எதிர்க்கும் தன்மை மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை என்பன அதில் அடங்கும். அத்தோடு பாலின சமத்துவம் மற்றும் சமூக உள்ளடக்கம் மற்றும் நிர்வாகம், திறன் மேம்பாடு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகிய அம்சங்களும் புதிய மூலோபாய நோக்கங்களில் இணைக்கப்பட்டுள்ளன.

அரச நிதி முகாமைத்துவக் கட்டமைப்பை சீர்திருத்துதல், நிர்வாகத்தை வலுப்படுத்துதல், உள்நாட்டு வளங்களை திரட்டுதல் மற்றும் நிதி மற்றும் கடன் நிலைத்தன்மையை மேம்படுத்துதல், அத்துடன் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றிலும் ஆசிய அபிவிருத்தி வங்கி கவனம் செலுத்தும்.

நாட்டின் மீட்சி மற்றும் நீண்டகால பொருளாதார வளர்ச்சியில் தனியார் துறையின் முக்கிய பங்கை இந்த மூலோபாயத் திட்டம் அங்கீகரிக்கிறது.

2023 டிசம்பர் வரை ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையில் 45 அரச துறைகளுக்கு கடன்கள் மற்றும் மானியங்களாக 3.7 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகையை வழங்கியுள்ளதோடு தனியார் துறை முதலீடுகளில் 25.6 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகையை வழங்கியுள்ளது. (பா)

## குவைத் பேரீத்தம் பழம் முஸ்லிம் நிறுவனங்களுக்கும் அன்பளிப்பு



புனித ரமழானை முன்னிட்டு இலங்கையின் குவைத் தூதுவர் கலப் முஹம்மத் பூ லகீரின் வேண்டுகோளின்பேரில் குவைத் நாட்டைச்சேர்ந்த டாக்டர் மன்சூர் ஜெபாரா மற்றும் தனவந்தர்களின் உதவியோடு இலங்கைக்கு சுமார் 30 தொன் பேரீச்சம் பழங்கள் வழங்கப்பட்டுள்ளன. நாட்டின் நாலா புறங்களிலுமுள்ள நோன்பாளிகளுக்கு இதனை பகிர்ந்தளிக்கும் நோக்கில் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் குவைத் தூதரக அதிகாரி இப்றாஹீம் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது. இதன்போது இலங்கையில் செயற்பட்டு வரும் தொண்டு நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டதோடு அதனை முஸ்லிம் மக்களுக்கு கிடைக்கும் வகையில் விநியோகிக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

அல் ஹிமா சமூக சேவை அமைப்பிற்கான பேரீத்தம் பழ அன்பளிப்பினை தூதரக அதிகாரி இப்றாஹீம், அல் ஹிமா பணிப்பாளரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

## இசைத்துறை வாய்ப்பு



வளர்ந்துவரும் இளங் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதை பிரதான நோக்கமாகக் கொண்டு தலைநகரில் கடந்த 44 ஆண்டுகளாக இயங்கி வரும் புதிய அலை கலை வட்டம் இவ்வாண்டில் முற்றிலும் பெண்களுக்கான இசைக்குழு ஒன்றை ராகப்ரியா என்ற பெயரில் அரங்கேற்றவுள்ளது.

இதில் இலைமறை காய்களாக இருக்கும் இசைத்துறை ஆர்வலர்களுக்கு

வாய்பளிக்க எண்ணியுள்ளது. எனவே, பாடல் துறையில் ஆர்வமுள்ள பாடகர்கள், பாடகிகள் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை பெற 076 2002701,077 6274099,077 7412604,077 7111905 என்ற அலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

## சுயாதீன அறிவிப்பாளராக லைலா அக்ஷியா நியமனம்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவைப் பிரிவின் சுயாதீன அறிவிப்பாளராக லைலா அக்ஷியா நேற்று முன்தினம் (19) முதல் இ.ஒ.கூ. தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் ஆலோசனையின் பேரில் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் ஆர். கணபதிப்பிள்ளையால் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தெஹிவளையை பிறப்பிடமாகவும் மொறட்டுவையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், பாவா மொஹிதீன், ஷாஹீதா தம்பதிகளின் புதல்வியாவார்.

லைலா அக்ஷியா, ஹொரேதுடுவ முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் ஜீலான் மத்திய கல்லூரியின் பழைய மாணவியாவார்.

தற்போது ஆசிரியையான இவர், உளவியல் மற்றும் விசேட தேவை மாணவர் பயிற்சியாளராகவும் 'ஸ்கில் இன்சைட்' கல்வி நிலைய நிர்வாகியாகவும் கடமையாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

14 வயது பாடசாலை மாணவி பாலியல் துஷ்பிரயோகம்:

## அநுராதபுரத்தில் இருவர் கைது; 11 பேரை தேடி வலைவீச்சு!

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் பகுதியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம்9 இல் கல்வி பயிலும் 14 வயதுடைய மாணவியை தொடர்ச்சியாக பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் கடந்த 18 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 28 வரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் பிரதம நீதவானும், மேலதிக மாவட்ட நீதிபதியுமான நாலக சஞ்ஜீவ ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

அநுராதபுரம் யாழ்ப்பாணம் சந்தியில் அமைந்துள்ள சிகையலங்கார நிலைய உரிமையாளரான 57 வயதுடைய நபர் ஒருவரும், மிஹிந்தலை வீதி கோகிலா கொட்டுவ பகுதியைச் சேர்ந்த நபரொருவருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்திய அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் உபபொலிஸ் பரிசோதகர் ஏ.சீ. தயானந்த தெரிவிக்கையில், 14 வயதுடைய பாடசாலை மாணவியை பல நபர்கள் தொடர்ந்து பாலியல் துஷ்பிரயோகம் செய்வதாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் சந்தியில் அமைந்துள்ள சலூனுக்கு பின்னால் உள்ள அறையில் சந்தேக நபர்கள் இந்தக் குற்றத்தைப் புரிந்துள்ளதாக தெரியவந்துள்ளதாக உபபொலிஸ் பரிசோதகர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள நபர்களைத் தவிர 11 சந்தேக நபர்களின் பெயர்களை மேற்படி மாணவி வெளியிட்டுள்ளதுடன், அவர்களை கைது செய்வதற்கு பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்டவுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதாகவும் உபபொலிஸ் பரிசோதகர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சந்தேகநபர்களில் பொலிஸ் நிலையமொன்றில் கடமையாற்றும் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் பெண் உபபொலிஸ் பரிசோதகரின் 70 வயதுடைய தந்தை ஒருவரும் உள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த மாணவி வலைப்பந்து, கால்பந்து, கிரிக்கெட் , பாடசாலை மட்ட எல்லை போட்டி மற்றும் தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றி திறமைகளை வெளிக்காட்டியுள்ளார்.

அநுராதபுரம் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேவ பத்திரனவின் நேரடி மேற்பார்வையின் கீழ் அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம். ஜயவீரவின் ஆலோசனைப்படி சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் யமுனா காந்தி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.


**பெயர் மாற்றம்**

தர்காநகர் சமகி மாவத்தை இல. 71/35, இல் வசிக்கும் 716603962V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தை கொண்டிருக்கும் பாலகிருஷ்ணன் நலாதேவி ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை முஹம்மத் ஸாரா அம்மள் என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

முஹம்மத் ஸாரா அம்மள்


## வலம்புரி கவிதா வட்டத்தின் 98 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 98 ஆவது கவியரங்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும். கவிஞர் ராஜா நித்திலன் கவியரங்கினைத் தலைமையேற்று நடாத்துவார்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.

## புதையல் தோண்டிய நான்கு பேர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

பதவிய ஏழாவது கொளணிய பகுதியில் புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பேரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கொளணிய பகுதியில் புதையல் எடுக்கும் நோக்கில் அகழ்வுப்பணியில் சிலர் ஈடுபட்டுள்ளதாக நேற்று முன்தினம் 19 ஆம் திகதி விசேட அதிரடிப்படையின் புல்மோட்டை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய விசேட அதிரடிப்படையினரும் பதவிய பொலிஸாரும் கூட்டாக இணைந்து நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் நான்கு பேரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் பூஜைப் பொருட்களையும் அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் 25,27,56,60 வயதுடைய கொட்டியாகும்புற,பராக்ரமபுர பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2024.03.19
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5424 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,701,956.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 2 4 4 2 6 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3666 — சீட்டிழுப்பு திகதி 2024.03.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,559,621.36
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 01 05 51 62 — விசேட எழுத்து V — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 71616

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1772 — 2024.03.19 — 05823 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 427,725,570.00
ஆங்கில எழுத்து D — சுப்பர் இலக்கம் 05 — வெற்றி இலக்கங்கள் 12 63 67 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.03.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0250
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 5 8 5 4 5 7
L7 எழுத்து F — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 27,144,480.28

ராசி சுப பலன் — திகதி 2024.03.19 — சீட்டிழுப்பு இலக்கம் 733 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,123,909.80
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 01 31 40 57 — தனயோக இலக்கம் 19586 — நாளுக்கான விதி எண் 17

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1454 — 2024.03.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,808,473.12
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 15 57 62 81 — விசேட எழுத்து V — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 73397



ST & S SINCE 1892

# இலங்கை பொலிஸ் ஏலவிற்பனை

கனரக வாகனங்கள், ஜீப் வண்டிகள், கெப் வண்டிகள், கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான பாவிக்கப்பட்ட பெருந்தொகையான டயர்கள், பாவிக்கப்பட்ட பற்றரிகள், மோட்டார் சைக்கிள்களுக்கான பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத உதிரிப்பாகங்கள், மோட்டார் கார்கள், மோட்டார் வேன்கள், ஜீப் வண்டிகள், பஸ் வண்டிகள் மற்றும் டிரக்குகள், எரிந்த எண்ணெய் மற்றும் இரும்புத் துண்டுகள்

2024 மார்ச் 28 வியாழக்கிழமை
பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு,
இல. 343, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05
என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

பார்வையிடல் - ஏலவிற்பனை நிலையத்தில்
2024 மார்ச் 27 புதன்கிழமை
(மு.ப 9.30 மணி முதல் பி.ப 4.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்

- நுழைவு: ஏல விற்பனை நடைபெறும் ஒவ்வொரு தினத்திலும், ஒவ்வொருவரும் செல்லுபடியான அடையாள அட்டை அல்லது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழுடன் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1000/- செலுத்த வேண்டும்.
- **கொடுப்பனவுகள்:** விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் உடனடியாகச் செலுத்த வேண்டும் என்பதுடன், கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் அன்றைய தினமே பி.ப 3.00 மணிக்கு முன்னர் அங்கிருந்து அகற்றப்படல் வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை பணிப்பாளர் (பொலிஸ் போக்குவரத்து) மற்றும் ஏலதாரருக்கு உண்டு.
- பணிப்பாளர் (பொலிஸ் போக்குவரத்து) மற்றும் ஏலதாரரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

மேலதிக விபரங்கள் மற்றும் தகவல்களுக்கு 2024 மார்ச் 07 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி: 081-2227593
தொலை/ஃபக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671465, 011-2671468
தொலை/ஃபக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

011 2671468
www.sandslanka.com

# கிழக்கின் குரல்



## அக்கரைப்பற்றில் சமுர்த்தி பயனாளிகளுக்கு புதிய வீடுகள்

**திராய்க்கேணி தினகரன், அக்கரைப் பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்**



அம்பாறையின் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பள்ளிக்குடியிருப்பு மற்றும் ஆலிம் நகர் கிராம அலுவலர் பிரிவுகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை சமுர்த்தி பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (20) நடைபெற்றது.

சமுர்த்தி றண்விமண, ஜயவிமண திட்டத்தில் இவ்வீடுகள் மேற்படி பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டன. இதன்போது சமுர்த்தி பயனாளிகள் இருவருக்கு இவ்வீடுகள் கையளித்து வைக்கப்பட்டன.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.ஏ.சீ.அகமது ஷாபிர் கலந்துகொண்டு பயனாளிகளிடம் வீடுகளை கையளித்து வைத்தார்.

இதன் பின்னர் அக்கரைப்பற்று மேற்கு சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களால் செய்கை பண்ணப்பட்ட வீட்டுத்தோட்ட பயிர் அறுவடை மேற்கொள்ளப்பட்டதுடன், வாழ்வாதார மேம்பாட்டுக்கான கடன் உதவியும் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

## ரிதிதென்ன மையவாடிக்கு சுற்றுமதில் நிர்மாணம்



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பின் ரிதிதென்ன பிரதேசத்தில் அமைந்துள்ள மையவாடிக்கான சுற்றுமதில் அல் நூர் தொண்டு நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்டதுடன், இதற்கான நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (19) நடைபெற்றது. அல் நூர் தொண்டு நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எஸ்.எம். அலியார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்த சமூக சேவை திட்டத்துக்கு பங்காற்றியவர்கள் இதன்போது நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

## திருமலையில் அதிகளவில் விற்பனையாகும் தர்பூசணி

**கிண்ணியா மத்திய நிருபர்**

தற்போது நிலவி வரும் வரட்சியான காலநிலை காரணமாக திருகோணமலையின் கரையோர பிரதேசங்களில் அதிகளவில் தர்பூசணி பழங்கள் விற்பனை செய்யப்படுவதுடன், மக்களும் ஆர்வத்துடன் அவற்றை கொள்வனவு செய்து வருகின்றனர்.

கிண்ணியா மூதூர், குச்சவெளி, புல்மோட்டை, நிலாவெளி ஆகிய பிரதேசங்களின் பிரதான வீதியோரங்களில் வைத்து தர்பூசணி பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

தற்போதைய வரட்சியான காலநிலையால் ஏற்படும் உடல் உஷ்ணத்தை தணிக்கும் வகையில் தர்பூசணி பழங்களை உட்கொள்வதில் மக்கள் அதிக நாட்டம் கொண்டுள்ளதாக, வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். கிண்ணியாவில் தர்பூசணி பழங்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன், ஒரு கிலோகிராம் தர்பூசணி 130 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## முனைத்தீவு சக்தி மகா வித்தியாலயத்துக்கு நிதியுதவி

### கிழக்கு ஆளுநர் செந்திலுக்கு நன்றி தெரிவிப்பு



முனைத்தீவு சக்தி மகா வித்தியாலயத்தின் மேம்பாட்டுக்காக ஐந்து மில்லியன் ரூபா நிதி உதவியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

பாடசாலை மைதானத்துக்கு மண் நிரப்புதல் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஆளுநர் இந்த நிதி உதவியை வழங்கியுள்ளார். அத்துடன், விளையாட்டுக்கழகம் மற்றும் கிராமிய அபிவிருத்தி சங்கத்துக்கு தேவையான இடங்களையும் கிழக்கு ஆளுநர் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இந்த உதவிகளை நல்கிய ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு முனைத்தீவு மக்கள் சார்பாகவும் புதிய ஜனநாயக மக்கள் முன்னணி சார்பாகவும் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கோணேஸ்வரர் ஆலய

## நிர்வாகத்துக்கு எதிரான வழக்கில் இடைக்கால தடையின்றி இயங்க உத்தரவு

**அன்புவழிபுரம் தினகரன், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்**

திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாகத்துக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், எவ்வித இடைக்கால தடையுமின்றி நிர்வாக சபை இயங்கலாமென்று மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் 2023ஆம் ஆண்டு தொடக்கம் 2026ஆம் ஆண்டுவரையான நம்பிக்கை பொறுப்பாளர் சபைத் தலைவர் திலகரட்ணம் துஷ்யந்தன் நேற்று முன்தினம் (19) மாலை திருகோணமலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டார். இது தொட ர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

திருகோணமலை மேன்முறையீட்டு குடியியல் நீதிமன்றில் நீதிமுறை மீளாய்வு மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எமது நிர்வாக சபைக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதுடன், இடைக்கால நிர்வாகத்துக்கு தடை விதிக்கப்பட்டு, எமது நிர்வாகம் தொடர்ச்சியாக இயங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் மார்ச் மாதம் 24ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 18 நாட்களுக்கு மஹோற்சவத் திருவிழா வெகு விமர்சையாக நடைபெறும்" என்றார்.

## களுவாஞ்சிக்குடியில் வருடாந்த பொலிஸ் பரிசோதனை

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



வருடாந்த பொலிஸ் பரிசோதனை நேற்று புதன்கிழமை (20) களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றதுடன், மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் உஜித் லியனகே பொலிஸ் பரிசோதனையை நடத்தினார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பொலிஸ் பரிசோதகருமான அபயவிக்கிரம தலைமையில் நடைபெற்ற இப்பரிசோதனையில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எதிரிமான, களுவாஞ்சிக்குடி பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜனக்க ஜெயரெத்ன உட்பட பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது, களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் அதிகாரிகளின் சின்னங்கள், சீருடைகள், வாகனங்கள் உள்ளிட்டவை பரிசோதனை செய்யப்பட்டன.

## ரொட்டவெவவில் விலங்கு தீவன தயாரிப்பு நிலையம்



**ரொட்டவெவ குறூப் நிருபர்**

ரொட்டவெவ பிரதேசத்தில் விலங்கு தீவன தயாரிப்பு மற்றும் விலங்கு உற்பத்தி நிலையத்தை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

ரொட்டவெவ பிரதேசத்தில் வாழ்ந்து வரும் பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கோழி வளர்ப்பு உள்ளிட்ட திட்டங்களை அவர்கள் மத்தியில் ஊக்குவித்து, இந்த நிலையத்தினூடாக அவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கி, அப்பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டதன் நோக்காகும்.

அத்துடன், இந்த நிலையத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள் மூலம் பெறப்படும் உற்பத்தி பொருட்களை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மொரவெவ பிரதேச செயலாளர், யு.என்.டி.பி. அதிகாரிகள், ரொட்டவெவ பிரதேச மக்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## அக்கரைப்பற்றில் மகளிர் தின நிகழ்வு

**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**



புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சின் கீழ் இயங்கி வரும் அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (19) அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

'அவளுடைய பலம் தேசத்துக்கு முன்னேற்றம்', 'பெண்களின் முதலீடு மூலம் விரிவான முன்னேற்றம்' எனும் தொனிப்பொருளின் கீழ் இந்நிகழ்வு நடைபெற்றது. அக்கரைப்பற்றில் 3 தசாப்தங்களுக்கு மேலாக மாணவர்களுக்கு சிங்கள மொழியை கற்பித்து அம்மொழி விருத்தியை ஏற்படுத்திய ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் அனீசா இனாம் ஓசன் இதன்போது நினைவுச்சின்னம் வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார்.

அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் அஸ் ஷெய்க் வை.ராசித் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இந்நிகழ்வில் உரையாற்றினார்.

பிரதான சொற்பொழிவை வளவாளர் அஸ் ஷெய்க் எ.ஜி.அப்துல் றஊப் நிகழ்த்தினார்.

## கிழக்கு ஆளுநரின் ஏற்பாட்டில் காத்தான்குடியில் இப்தார் நிகழ்வு

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் காத்தான்குடி மத்திய கல்லூரியில் விசேட இப்தார் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்தார் நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுகளின் செயலாளர் திணைக்கள தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

பள்ளிவாசல் சம்மேளனம், வர்த்தக சம்மேளனம், ஜம்மியத்துல் உலமா காத்தான்குடிக் கிளை உட்பட அரசாங்க திணைக்களங்களுடன் இணைந்து இந்த இப்தார் நிகழ்வு மிகச் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

## உலக காசநோய் தினம்; சாய்ந்தமருதில் நடைபவனி

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபவனியுடன் கூடிய விழிப்புணர்வூட்டும் நிகழ்வை சாய்ந்தமருதில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாளிகைக்காடு ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாக நடைபவனி ஆரம்பிக்கப்பட்டு, சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைவரை செல்லவுள்ளது.

உலக காசநோய் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 24ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டு வரப்படுகின்றது.

கல்முனை பிராந்திய மார்புநோய் சிகிச்சை நிலையத்தால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், 'காசநோய் அற்ற கல்முனை பிராந்தியத்தை உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இதன்போது காசநோய் தொடர்பாகவும் அந்நோய்க்கான அறிகுறிகள், அந்நோயிலிருந்து பாதுகாப்பு பெறுதல், சமூகத்தில் காசநோயை கட்டுப்படுத்த முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நடைபவனி அமையவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எம்.எஸ்.எம்.ஸாகிர்)

## பிரதான பொலிஸ் பரிசோதகர் காலமானார்

**இறக்காமம் தினகரன் நிருபர்**



சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ்.எம். சமீம் (வயது 56) சுகயீனம் காரணமாக காலமானார்.

இறக்காமம் 9ஆம் பிரிவைச் சேர்ந்த இவர், கடமையில் இருந்த போது திடீர் சுகயீனம் அடைந்து, சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த வெள்ளியன்று (15) காலமானார். இவரது ஜனாஸா நல்லடக்கம் இறக்காமம் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மையவாடியில் இடம்பெற்றது. 1990ஆம் ஆண்டு உதவிப் பொலிஸ் பரிசோதகராக இணைந்த இவர், பொலிஸ் பரிசோதகராகவும் பிரதான பொலிஸ் பரிசோதகராகவும் பதவி உயர்வு பெற்றிருந்தார்.

## நாவிதன்வெளி பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்

**பெரியநீலாவணை விசேட நிருபர்**



நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சின் இழப்பீடுகளுக்கான அலுவலகம், அம்பாறை மாவட்ட செயலகத்துடன் இணைந்து 'நம்பிக்கைக்கான நூல்' மற்றும் 'வாழ்க்கைக்கான வெளிச்சம்' திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்த வாழ்வாதார உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கும் நடவடிக்கை நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (19) நடைபெற்றது.

நெசவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலும் மெழுகுதிரி உற்பத்திக்காகவும் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் பயிற்சி என்பன இதன்போது வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகியின் வழிகாட்டலுக்கமைய உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

## ஆரையம்பதியில் ஏழைக் குடும்பங்களுக்காக குழாய் கிணறு அமைக்கும் பணி

**ஆரையம்பதி தினகரன் நிருபர்**



ஆரையம்பதி பிரதேசத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு குழாய் கிணறுகள் அமைத்துக் கொடுக்கும் பணி, தகாதுரப் பவுண்டேஷன் அமைப்பின் அம்பாறை மாவட்ட கிளையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக செல்வாநகர் கிழக்கில் அமைக்கப்பட்ட குழாய் கிணறுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.எம்.சியாத்தின் வேண்டுகோளுக்கிணங்க, தகாதுரப் பவுண்டேஷன் அமைப்பின் அம்பாறை மாவட்ட கிளையான SMS TUBE WELL SERVICE இன் தலைவர் எஸ்.எம்.றியாஸ் தலைமையில் குழாய் கிணறு அமைத்துக் கொடுக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விநாயகர் புரம் கிராமத்துக்கு விஜயம்

(மன்னார் குறூப் நிருபர்)



மாந்தை மேற்கு பிரதேச செயலகப்பிரிவில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான கூராய் சீது விநாயகர் புரம் கிராமத்திற்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் நேரடியாக சென்று கிராம மக்களின் தேவைகளை கேட்டறிந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த பொதுமக்கள்,

கூராய் சீது விநாயகர் புரம் கிராமத்தில் வீதிகள் மற்றும் குடிநீர் பிரச்சினைகள் நீண்ட காலமாக தீர்வின்றி காணப்படுகின்றது. கிராமத்திலிருந்து 20 கிலோமீற்றர் தூரம் சென்றே மருத்துவம், கல்வி மற்றும் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதான வீதிக்கு செல்லும் சுமார் நான்கு கிலோமீற்றர் வீதி குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

மழை காலங்களில் குளக்கட்டு வீதி முற்றிலும் நீர் நிரம்பிவிடும். இரவு நேரங்களில் அவசர தேவைகளுக்கு இவ்வீதியை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக மக்கள் தெரிவித்தனர்.

மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்த மாவட்டச் செயலாளர், அவற்றுக்கான தீர்வுகளை மிக விரைவில் பெற்றுத்தருவதாக தெரிவித்தார். இந்நிகழ்வில் உதவி அரசாங்க அதிபர்கள், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டி.சி.அரவிந்தராஜ் ,மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டனர்.

## மதுபானசாலையில் திடீர் தீ விபத்து

(நாகர்கோவில் விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்)

புலோலி மதுபானசாலையில் ஏற்பட்ட தீப்பரவலால் அருகிலிருந்த பெட்டிக்கடையொன்றும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. நேற்று (20) அதிகாலை 4.30 மணியளவில் புலோலி மதுபானசாலையில் ஏற்பட்ட தீ பரவலில் அதன் அருகிலிருந்த பெட்டிக் கடைக்கும் தீ பரவியுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைக்கு சொந்தமான தண்ணீர் தாங்கி தீ பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்த போதிலும் தொடர்ந்து தீ பரவும் அபாயம் காணப்பட்டமையால் யாழ்ப்பாணம் நகரசபை தீயணைப்பு வாகனம் வரவழைக்கப்பட்டு காலை 7.45 மணியளவில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. தீ விபத்து தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வடக்கின் உதயம்

## கீரிமலை குமாரசுவாமிக் குருக்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது!

### பாபு சர்மா குருக்கள் அனுதாபம்



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீன கர்த்தா ந.குமாரசுவாமிக் குருக்களின் மறைவுக்கு சர்வதேச இந்துமத பீடம் சார்பாக சிவ.ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா அனுதாபம் தெரிவித்துள்ளார்.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தா ந.குமாரசுவாமிக் குருக்கள் நேற்றைய தினம் அதிகாலை தனது 71 வது வயதில் காலமானார். இந்நிலையில் சர்வதேச இந்து மத பீடம் சார்பாக கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளதுடன், ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல சிதம்பர நடராஜப் பெருமானை மனதாரப் பிராத்திப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## யாழில். மனித உரிமைகள் முதலுதவி நிலையம்

மனித உரிமைகள் பாதிக்கப்பட்ட இடங்களில் உடனடியான நிவாரணங்களை வழங்குவதற்காக யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் முதலுதவி மையம் என்ற தன்னார்வ அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் Save a Life என்ற அரசசார்பற்ற அமைப்பின் இயக்குநர் ராகுலன் கந்தசுவாமி இதனை தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் நாம் Right to Life என்ற அமைப்புடன் இணைந்து மனித உரிமைகள் முதலுதவி மையம் (Human rights first aid centre) என்ற அமைப்பினை உருவாக்கியுள்ளோம்.

யாழ்ப்பாணம் கோவில் வீதியிலுள்ள யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் மனித உரிமைகள் முதலுதவி மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சட்டரீதியான உதவி, உளரீதியான உதவி, மனித உரிமைகள் சார் விழிப்புணர்வு செயற்பாடுகள் என்பவற்றினை மேற்கொள்வது அமைப்பின் நோக்கங்களாகும். மேலும் 25 இளையவர்களை தெரிவு செய்து அவர்களுக்கு மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சர்வதேச நீர்தினம் அனுஷ்டிப்பு





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சர்வதேச நீர்தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வூட்டும் சிறப்பு ஒன்றுகூடல் நேற்று நடைபெற்றது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'அமைதிக்கான நீர்ப் பங்கீடு' (Leveraging Water for Peace) என்னும் தொனிப்பொருளில் நீர்த்தினம் பற்றிய சிறப்புரையை வடமாகாண விவசாய அமைச்சின் உத்தியோகத்தர் நடராஜா ஐங்கரன் வழங்கினார். அதிதிக்கான அறிமுகவுரையை விரிவுரையாளர் கு. பாலஷண்முகன் வழங்கினார். ஆசிரிய மாணவர்கள் தயாரித்த நீர்ப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு ஆவணப்படமும் இதன் போது காட்சிப்படுத்தப்பட்டது.

சிறப்புரையாற்றிய ந.ஐங்கரன் கலாசாலைச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டதோடு ஆவணப்படம் தயாரித்த ஆசிரிய மாணவர்களை சபையோர் எழுந்து நின்று கரகோஷித்துப் பாராட்டுத் தெரிவித்தனர்.

## இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழில் ஆர்ப்பாட்டம்

(யாழ். விசேட நிருபர்)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ். மாவட்ட மீனவர்கள் நேற்றைய தினம் யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் முன்பாக



கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ். மாவட்ட மீனவர்கள் நான்கு பேர் முன்னெடுத்த உணவு தவிர்ப்பு போராட்டம் இரண்டாவது நாளாகவும் தொடர்கின்றது.

## வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை மருந்தாளர்கள் பணிப்புறக்கணிப்பு

### நோயாளர்கள் அவதி

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை மருந்தாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பதவி உயர்வு மற்றும் புதிய நியமனம் ஆகியவற்றில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து மருந்தாளர்கள் சுகயீன விடுமுறையில் ஈடுபட்டனர். இதனால் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை மருந்தக பிரிவுகள் முற்றாக செயலிழந்திருந்தன. பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக கிளினிக், வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றுக்கு வருகை நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

# வரட்சியால் ஆதிவாசிகள் பாதிப்பு

(ஊவா சுழற்சி நிருபர்)



மொனராகலை மாவட்ட பிபில ரதுகல ஆதிவாசி கிராம மக்கள் வரட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

சுமார் இரண்டு மாதங்களாக மழை இன்மையால் கிராமமே பாலைவனமாக மாறி, பழங்குடியின மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சுதா வன்னிலத்தோ தெரிவித்தார்.

கிராமத்தினூடாக பாயும் ரம்பகன் ஓயாவின் நீர்மட்டம் வரட்சியால் குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆதிவாசிகள் தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள தண்ணீரின்றி நிர்க்கதியாகியுள்ளதோடு, கடந்த மாதம் சுமார் ஐம்பது ஏக்கரில் பயிரிடப்பட்ட கௌபீ மற்றும் வெண்டைக்காய் தோட்டங்கள் அனைத்தும் காய்ந்து நாசமடைந்துள்ளன.

மழை நீரை நம்பி இக்கிராமத்தில் வசிக்கும் 125 ஆதிவாசிக் குடும்பங்களின் விவசாய நிலங்கள் காய்ந்து கிடப்பதால், வாழ்வதற்கான உணவு கிடைக்காமல் தவிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பலாங்கொடையில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது கசிப்பு கைப்பற்றப்பட்டது.

பலாங்கொடை நகரத்தை அண்மித்த பகுதியில் ஹுனுகும்புர தொரவல ஆற்றுக்கு அருகில் மரக்கறி தோட்டம் என்ற போர்வையில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கசிப்பு தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை பொலிஸார் கைப்பற்றினர். கசிப்பு தயாரிப்பில் ஈடுபட்ட இருவரையும் பலாங்கொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# மலைச்சாரல்

## பெற்றோர் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(மாத்தளை சுழற்சி நிருபர்)



மாத்தளை கல்வி வலயத்துக்குட்பட்ட இரத்தோட்ட ஸ்ரீ குமரன் ஆரம்ப பாடசாலை அதிபருக்கு எதிராக பெற்றோர் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலைக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெரும்பாலான பெற்றோர் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் அதிபர் கரிசனை காட்டுவதில்லையென பெற்றோர் குற்றம்சாட்டினர்.

இதனால் தமது பிள்ளைகளின் கல்வியும் எதிர்காலமும் பாதிக்கப்படுவதாக தெரிவித்த பெற்றோர் உடனடியாக அதிபரை இடமாற்ற கோரி சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## ஹெல்பொட ஸ்ரீ முத்துமாரியம்மன் வருடாந்த அலங்கார உற்சவம்

கொத்மலை பிரதேசசபைக்குட்பட்ட ஹெல்பொட மத்தியப் பிரிவிலுள்ள வரலாற்று சிறப்பு மிக்க பேரருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் பங்குனி மாதம் 21ஆம் திகதி மாலை 04.00 மணியளவில் ஹெல்பொட மத்தியப்பிரிவு மண்ணின் கலை, கலாசாரங்களை மீட்டெடுக்கும் உன்னத பயணமான மாபெரும் கலைவிழா ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.



புரவலர் ஹாஷிம் உமரை அவரது இல்லத்தில் நட்பின் நிமித்தம் கலாபூஷணம் யாழ். பரீட் இக்பால் சந்தித்த போது அவரிடமிருந்து அவரது தொகுப்பான 'புரவலர் சில பதிவுகள்' எனும் நூலை அன்பளிப்பாக பெற்றார்.

## சிங்கராஜ வனப்பகுதியில் யானையை காணவில்லை



சிங்கராஜ வனப்பகுதியில் காணப்பட்ட பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் யானைகளில் ஒன்றை காணவில்லையென அந்தப்பகுதி வன பாதுகாப்பு அதிகாரி சரத் விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

சிங்கராஜ வனப்பகுதி இரத்தினபுரி எல்லையிலிருந்து ஹம்பாந்தோட்டை மற்றும் தென் மாகாண காலி நெலுவ பிரதேசத்தில் காணப்பட்ட இந்த இரண்டு யானைகளையும் அடையாளம் கண்டுகொள்வதற்காக ஒரு யானையின் கழுத்தில் கருப்பு நிற பட்டி அணிவிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். குறிப்பிட்ட யானை காணாமல் போனமை குறித்து கலவான பிரதேச இணைப்பு குழு கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தலவாக்கலை த.ம. வித்தியாலயத்தின் 45வது ஆண்டு நிறைவு விழா

(தலவாக்கலை குறூப் நிருபர்)

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் 45வது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 22ஆம் தொடக்கம் 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் 45வது வருட பூர்த்தி விழாவில் மாபெரும் கண்காட்சி, கௌரவிப்பு நிகழ்வுகள், பரிசளிப்பு நிகழ்வுகள், கலை கலாசார நிகழ்வுகள், 45 வது ஆண்டு நிறைவு சிறப்பு நூல் வெளியீடு, பல் பொருள் அங்காடி மேலும் பாடசாலை சமூகம் சார்ந்தோரின் நடை பவனி என்பன நடைபெறவுள்ளன.

இம்மாதம் 22,23,24 மற்றும் 25 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் அன்போடு அழைக்கின்றனர்.



பண்டாரவளை மாநகர சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். 'இசைக்கலை மணி', கலாநிதி. ஷாமினி இராமநாதன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் : பதுளை தினகரன் விசேட நிருபர்)

## பெரியகல்லாறில் விழுமிய கல்வி பயிற்சிப்பட்டறை



மாளிகைக்காடு குறூப் நிருபர்

பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் விழுமியப் பண்பை மேம்படுத்தும் வகையில் ஆசிரியர்களுக்கான விழுமியக் கல்வி பயிற்சிப்பட்டறை பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரன் தலைமையிலும் சத்திய சாயி கல்வி நிறுவகத்தின் அனுசரணையுடனும் இப்பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.ஜீவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டதுடன், சத்திய சாயி கல்வி நிறுவகத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் புனேந்திரன், கிழக்கு மாகாண இணைப்பாளர் விநாயகமூர்த்தி ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர். இணைப்பாளர்களாக பங்குபற்றிய ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## போதைப் பாவனைக்கு குச்சவெளியில் எதிர்ப்பு

### விழிப்புணர்வு பேரணி

தம்பலகாமம் குறூப் நிருபர்



போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை திருகோணமலையின் குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களும் சிறுவர் வள நிலையங்களும் இணைந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (19) முன்னெடுத்தன.

நாவற்சோலை சிறுவர் வள நிலையத்திலிருந்து ஆரம்பமாகிய இப்பேரணி, நிலாவெளி பொலிஸ் நிலையம்வரை சென்றதுடன், நிலாவெளி பொலிஸ் அதிகாரிகளிடம் மகஜரையும் கையளித்தனர்.

"எமது இளைஞர்களை, எமது எதிர்கால சந்ததியின் வாழ்வியலை பாதிக்கும் போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க நாம் உறுதி பூண்டுள்ளோம். அந்த வகையில் சமூகத்தில் பரவியுள்ள போதைப்பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு, போதைப் பொருள் விற்பனைக்கு எதிரான சட்ட செயற்பாடுகள் போன்றவற்றை இளைஞர்களாகிய நாம் முன்னெடுக்கவுள்ளோம்" என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் இப்தார்

பெரியநீலாவணை விசேட நிருபர்



கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த வருடாந்த இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு, அப்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.றம்ஸீன் பக்கீர் தலைமையில் பொலிஸ் நிலையத்தின் திறந்த வெளியரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் கலாநிதி சட்டத்தரணி அஜித் ரோஹண பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இப்தார் விசேட மார்க்க சொற்பொழிவுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் தமயந்த விஜயஸ்ரீ, கல்முனை நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன், அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என்.ஜயபத்ம, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக உட்பட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், இராணுவ, கடற்படை அதிகாரிகள் பொலிஸ் பரிசோதகர்கள், சர்வமத தலைவர்கள், மற்றும் கிராம அலுவலக உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர், சிவில் சமூக அமைப்பினரால் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

## ஏறாவூரில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

ஏறாவூர் நகர பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன


ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் நிஸா சிறப்பு மலர் இதழ் 02 வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், ஏறாவூர் நகர பிரதேசத்தின் முதல் பெண் அதிபராக இருந்து அர்ப்பணிப்புடன் கல்விச் சேவையாற்றிய பஹிய்யா அப்துல் காதர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்

## நற்பிட்டிமுனை நூலகத்துக்கு நூல்கள் வழங்கப்படவில்லை

### வாசகர்கள் கவலை

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்



நற்பிட்டிமுனை, கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது நூலகங்களுக்கு கடந்த இரு வருடங்களாக நூல்கள் எதுவும் வழங்கப்படவில்லையென, வாசகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கல்விப் பொதுத் தராதரபத்திர சாதாரணதர உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான பயிற்சி நூல்கள், போட்டிப் பரீட்சைக்கான நூல்கள் உட்பட நூல்கள் எதுவும் வழங்கப்படவில்லையெனவும், அவர்கள் தெரிவிக்கின்றனர்.

புதிய கல்வி சீர்திருத்தத்தின் பிரகாரம் கற்றலுக்கு மேலதிகமாக தேடல் அவசியமாதலால் விரைவாக நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு, கல்முனை பிரதேச நூலகங்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் அதற்கான தேவை தற்போது எழுந்துள்ளதாகவும், அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நான்கு நூலகங்களிலும் சுமார் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் உள்ளனரெனவும், வாசகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்பிரச்சினையை தீர்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், வாசகர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## சாரண ஆசிரியர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு



பாலமுனை தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் சாரணர் துறையில் கலைக்கூறு ஒன்றை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆசிரியர்கள் சின்னம் சூட்டி கௌரவிக்கப்பட்டனர்.

அம்பாறை மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் இதற்கான நிகழ்வு நடைபெற்றது.

மேலும் இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சாரணர் சங்கத்தின் தவிசாளர் யூ.எல்.எம். ஹாசீம் உட்பட உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரணர் சங்கத்தின் உறுப்பினர்கள், சாரண ஆசிரியர்கள் ஆகிய பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.






இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி புவனேகபாகு பெரேரா, இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியை, கொழும்பிலுள்ள தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம். இதன்போது இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

## புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுடன் இணைந்து முனைவர் கற்கைகளை அறிமுகம் செய்துள்ள ESOFT



இலங்கையின் முன்னணி தனியார் கல்வி வலையமைப்பான ESOFT Metro Campus, தனது இரு புகழ்பெற்ற முனைவர் கற்கைகளை அறிமுகம் செய்துள்ளது.

இலங்கையில் வழங்கப்படும் முதலாவதும் ஒரே பிரித்தானிய PhD கற்கையாக இந்த அறிமுகம் அமைந்திருப்பதுடன், கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்தினால் இந்தக் கற்கை வழங்கப்படுகின்றது. Doctor of Business Administration (DBA) கற்கையை Manipal GlobalNXT பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்க ESOFT முன்வந்துள்ளது.

ESOFT இன் தவிசாளர்/குழும முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் ஸ்தாபகர், கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் மற்றும் பீடாதிபதி மற்றும் கல்விப் பங்காண்மைகளுக்கு பொறுப்பதிகாரியுமான பேராசிரியர் முகேஷ் லிம்பாச்சியா மற்றும் Manipal GlobalNxt பல்கலைக்கழகத்தின் கூட்டாண்மை ஈடுபாடுகள் மற்றும் பங்காண்மைகளுக்கான தலைமை அதிகாரி சஞ்ஜீவ் குமார் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். அத்துடன், இரு கற்கைகளுக்குமான பிரதிநிதிகள் மற்றும் மேற்பார்வையாளர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையில் உயர் தரம் வாய்ந்த முனைவர் கற்கைகளை அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ESOFT இன் அர்ப்பணிப்பு இந்த அறிமுகத்தினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய கற்கைகளினூடாக, நிபுணர்களுக்கு கற்கைகளை சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட PhD மற்றும் DBA தொடர்வதற்கான வாய்ப்பை வழங்குவதுடன், தாம் தெரிவு செய்த பிரிவுகளில் சிறப்பாக செயலாற்றுவதற்கு அவசியமான அறிவையும் நிபுணத்துவத்தையும் வழங்குவதாக அமைந்துள்ளது.

## Kedalla Construction Expo 2024 வில் Title Partnerஆக இணைகிறது செலான்



செலான் வங்கி, Kedalla Construction Expo 2024 உடன் தொடர்ந்து 12ஆவது ஆண்டாக Title Partnerஆக தனது இணைவை அறிவித்தது. இலங்கையின் முதன்மையான கட்டுமான மற்றும் வீட்டு அலங்கார கண்காட்சியாக அங்கீகரிக்கப்பட்ட இந்தக் கண்காட்சி, Asia Exhibitions & Conventions (Pvt) Ltdஆல் ஏற்பாடு செய்யப்பட்டு நாளை மார்ச் 22 முதல் மார்ச் 24 வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற உள்ளது.

செலான் வங்கி, அதன் பரந்த வங்கித் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுடன் நிகழ்வில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கும் என்பதில் ஐயம் இல்லை. வீடமைப்பு மற்றும் தனிநபர் கடன்கள், குத்தகை வசதிகள், கடன் அட்டைகள், நடப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பல சேவைகள் தொடர்பாக பார்வையாளர்கள் அறிந்து கொள்ளலாம். வீட்டு உரிமையாளர்களை வலுவூட்டுவதற்காக செலான் வங்கியின் வீடமைப்புக் கடன் நிபுணர்கள் குழு கண்காட்சியில் கலந்துகொள்வர். இந்நிபுணர்கள் வீடமைப்பு கடன்கள் குறித்த நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் வழங்குவதுடன் பங்கேற்பாளர்கள் நன்மை பயக்கும் வட்டி விகிதங்களுடன் அவர்களுக்குத் தேவையான நிதியுதவியைப் பெறுவதையும் உறுதி செய்வர்.

மேலும் வாடிக்கையாளர்கள், கடன் விண்ணப்ப செயல்முறை முழுவதும் அர்ப்பணிப்புள்ள வல்லுநர்களிடமிருந்து தனிப்பயனாக்கப்பட்ட உதவியை எதிர்பார்க்கலாம்.

## Rhino Roofing Products நிறுவனத்தின் புதிய RBS சீமெந்து பெனல்கள்;



தனது புத்தாக்கமான RBS சீமெந்து பெனல்களுக்கு, வருடாந்த உற்பத்தி விருதுகள் 2024 நிகழ்வின் ஒரு பகுதியாக, இலங்கை கட்டடக்கலைஞர்கள் சங்கத்திடமிருந்து "Excellence Award" என்ற சிறப்பு விருது வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டுள்ளது.

புத்தாக்கம், நிலைபேண்தகைமை மற்றும் சிக்கனம் ஆகியவற்றில் தனித்துவம் பெற்றுள்ள,

உற்பத்திகளை உள்நாட்டில் தயாரிப்பதில் Rhino Roofing Products Limited நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை இந்த விருது எடுத்துக்காட்டுகின்றது.

Rhino Roofing Products Limited நிறுவனத்திள் பிரதம செயல்பாட்டு அதிகாரி இந்திக ராஜபக்ச இது தொடர்பில் தனது கருத்தினை வெளியிடுகையில், "SLIA இடமிருந்து இந்த சிறப்பு விருதைப் பெற்றுக்கொண்டமை உண்மையில் மிகுந்த கௌரவம் அளிக்கின்றது.

இவ் விருதானது, தொழிற்துறையின் தரச் சிறப்பினை பூர்த்தி செய்வது மாத்திரமன்றி அதற்கு

அப்பால் சென்று நவீன உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதில் எமது அணியினரின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்புக்கு கிடைத்த மிகச்சிறந்த சான்றாகும்.

இவ்விருதை வென்றுள்ளமையானது Rhino Roofing Products Limited நிறுவனத்துக்கு மிகவும் பெருமைக்குரிய தருணமாகும்.

முன்னோடியான மற்றும் சுற்றுச்சூழல் மீது அக்கறை மிகுந்த தீர்வுகளை வழங்கி, கட்டுமானத் துறையை முன்னேற்றுவதற்கு பங்களிப்பதில் எமது தொடர்ச்சியான முயற்சிகளை இவ்விருது பிரதிபலிக்கின்றது," என்று குறிப்பிட்டார்.

## online பாவனையை ஆதரிக்க உத்தியோகபூர்வ வலைத்தளத்தை தரமுயர்த்தும் டயலொக்




இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, தனது உத்தியோகபூர்வ வலைத்தளமான dialog.lk ஐ அனைவரும் கருத்தில்கொள்ளும் நிறுவன கொள்கையின் மீதுள்ள அசைக்கமுடியாத அர்ப்பணிப்பின் அடையாளமாக மாற்றுத்திறனாளி பயனர்களுக்கு இலகுவான வகையில் மீள வடிவமைத்து தரமுயர்த்தவுள்ளது. எல்லாவிதமான மக்களும் பாவிக்கக்கூடிய வகையில் அவர்களை கருத்திற்கொண்டு இவ்வலைத்தளம் தரமுயர்த்தப்படுகிறது. இதனுடன் dialog.lk இனி வாசிப்பவருக்கு இணக்கமான திரையமைப்பு, நிறக்குருடு உள்ளோருக்கேற்ற வண்ணக்கோர்வைகள், படங்கள் மற்றும் பல்ஊடக பதிவுகளுக்கு ஒத்த மாற்று எழுத்து வடிவ பதிவுகள், துலங்கல் மிகு வடிவமைப்பு, தெளிவான மற்றும் இலகுவான மொழிநடையுடன் பயனருக்கு இலகுவான வகையில் உலவும் வசதியையும் தொழில்நுட்ப ஆதரவு வசதியையும் அளிக்கும் வகையில் வடிவமைக்கப்படவுள்ளது. பார்வை குறைபாடுகள், இயக்கத் திறன் சீர்கேடு, அறிவுத்திறன் வளர்ச்சி குறைபாடு, அவதானக்குறை மிகையியக்க குறைபாடு (ADHD) மற்றும் வலிப்பு நோய் உள்ளோர் முதலான பலதரப்பட்ட தேவைகள் மற்றும் குறைபாடுகள் உள்ள அனைவரது தேவைகளையும் இவ்வசதிகள் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் குறிப்பாக இலக்கு 9 மீண்டெழக்கூடிய உட்கட்டமைப்பை கட்டியெழுப்புதல், உட்சேர்க்கைமிக்கதும் நிலைபேறானதுமான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்ப்பது என்பதற்கிணங்க டயலொக்கின் சேவைகளை அணுகும் வசதி மாற்றுத்திறனாளிகளுக்கும் கிடைக்கச் செய்வதே நிறுவனத்தின் இலக்கு.

# கிளிநொச்சி முதலாம் காலாண்டுக்கான சிறுவர் அபிவிருத்திக்குழுக் கூட்டம்

**பரந்தன் குறூப் நிருபர்**



கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டின் முதலாம் காலாண்டுக்கான சிறுவர் அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனின் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் சிறுவர் அபிவிருத்திக்குழு கூட்டம் நடைபெற்றது. இதன்போது, மாவட்ட ரீதியில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது. மேலும் பாடசாலை மாணவர்களின் வரவு ஒழுங்கின்மை, இடைவிலகல் தொடர்பாக ஆராயப்பட்டு மாணவர்களின் மீள் இணைப்பு செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. முன்பள்ளிகளுக்கான காலை உணவு வழங்குதல், கர்ப்பவதிகளுக்கான போசாக்கு பொதி விநியோகம் மற்றும் மாணவர்களின் போசாக்கு தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

சுகாதாரம், பிறப்புச் சான்றிதழ் தொடர்பான நடவடிக்கைகள், சிறுவர் கழக செயற்பாடுகள், கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழு செயற்பாடுகள், தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதனைவிட சட்டவிரோத செயற்பாடுகள், போதைப்பொருள் ஒழிப்பு, சிறுவர் பாதுகாப்பு மற்றும் துஷ்பிரயோகம், சிறுவர் தொழில்கள், பால்நிலை சார் வன்முறைகள், துறை சார்ந்து பணியாற்றுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட தாய் சேய் மருத்துவ நிபுணர், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பங்களாதேஷ் தேசபிதாவின் 104ஆவது பிறந்த நாள் நிகழ்வு

**ருசைக் பாரூக்**



இலங்கையிலுள்ள பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயம், தேசத்தின் தந்தை பங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மானின் 104 வது பிறந்தநாள் மற்றும் தேசிய சிறுவர் தினத்தை கடந்த 17 ஞாயிற்றுக் கிழமை பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் இல்லத்தில் கொண்டாடியது.

பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தரேக் எம்.டி அரிபுல் இஸ்லாமின் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் சிறுவர்கள் பல்வேறு கலாசார நிகழ்ச்சிகளை வழங்கியதுடன், பல்வேறு போட்டிகளில் பங்குபற்றிய சிறுவர்களுக்கான பரிசில்களை சிரேஷ்ட ஊடகவியலாளர் தயா திசாநாயக்க வழங்கி வைத்தார்.

*Colombo Times* பிரதம ஆசிரியரும் *Arab News* கொழும்பு செய்தியாளருமான மொஹமட் ரசூல் தீன் மற்றும் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் உட்பட ஊடகவியலாளர்கள், சமூக உறுப்பினர்கள் மற்றும் அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# விளையாட்டின் மூலம் எதிர்கால தலைவர்கள் உருவாகின்றனர்

**பாலமுனை தினகரன் நிருபர்**

விளையாட்டின் மூலம் இளைஞர்களின் தலைமைத்துவ பண்புகள் அதிகரிப்பதால், சமூகத்தில் பெரும் தலைவர்கள் உருவாக வாய்ப்பு ஏற்படுவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ.கே அமீர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில், விசேட அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அமீர் தனது உரையில் தெரிவித்ததாவது: பாடசாலைகள் கல்வியோடு விளையாட்டையும் சமாந்திரமாக கொண்டு செல்ல வேண்டும். தலைநகரிலுள்ள அதிகமான பாடசாலைகள் விளையாட்டுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றன. கல்வியையும் விளையாட்டையும் சிறப்பாக பெற்றவர்கள் தொழில் வாய்ப்போடு, சமூக அங்கீகாரத்தையும் இலகுவாக பெற்று விடுகின்றனர். ஒரு விளையாட்டு வீரன் உடல் ஆரோக்கியத்தை தாண்டி சமூக தொடர்பாடலை அதிகமாக கொண்டுள்ளான். உலகத்தில் விளையாட்டு வீரனுக்கு உள்ள அங்கீகாரம் வேற எந்த துறைகளுக்கும் இல்லை. அந்நூர் பாடசாலை தொடர்ச்சியாக விளையாட்டு போட்டிகளை நடாத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.


## பெறுகை அறிவித்தல்

### ஊவா மாகாண சபை

### ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம்

ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வீதி அபிவிருத்தி அமைச்சு பெறுகைக்குழுவின் தலைவரால் 2024ம் ஆண்டிற்காக மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் தார் கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து போட்டி கேள்வி கோரல் மூலம் வழங்குநர்களைத் தேர்தெடுப்பதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**கீழ்க்காணும் தார் வகைகளுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| இணைப்பு இலக்கம் | கொள்வனவு செய்யப்படும் மூலப் பொருள் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்பு (காசாக) | கேள்விப் படிவக் கட்டணம் | அளவு (திண்மத் தார் பெரல் 180L) |
|---|---|---|---|---|
| 2024/Bitumen/01 | 80/100 Straight Run Bitimen திண்மத் தார் விசேடம் (180L) | ரூ. 247,500.00 | ரூ. 5,000.00 | 1500 |

கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் - 2024.03.21 - 2024.04.15 பி.ப. 2.30
கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் இறுதித் திகதி மற்றும் நேரம் - 2024.04.16 பி.ப. 2.30 வரை
கேள்விகள் திறக்கப்படல் - 2024.04.16 பி.ப. 2.30

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்களுக்கு ரூ. 5000.00 ஐ செலுத்தி வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதுடன், அதனோடு சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்களை கீழேயுள்ள தொலைபேசி இலக்கங்களை அழைத்து மற்றும் இணையதளத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தொலைபேசி இல. 055-2229626 / 055-2225570 / வீதி அபிவிருத்தித் திணைக்களம்**
**இணையதளம் - roaddept.up.gov.lk**

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம்,**
**இரண்டாம் மாடி,**
**ஊவா மாகாண சபைக்கட்டிடத் தொகுதி,**
**பதுளை.**
**2024.03.21**



## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

PV-8017 TATA SUPER ACE, 2013 அதியுயர் விலைக்கானது. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071454295 8 . 019911

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

AAR-3954 BAJAJ 2014, AAK-4393 BAJAJ 2013, AAC-64 55 BAJ AJ 2012, முச்சக்கர வண்டி அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1121081 0 , 0705999163 019910

### வர்த்தகம்

**223 விவசாயம்**

ZA-6788 JCB, 1995, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி , இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 4 5 4 295 8 019912



## சுகாதார சேவைத் திணைக்களம் - தென் மாகாணம்

## நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித்திட்டம் 2024

### கேள்வி அறிவித்தல்

2024ம் ஆண்டிற்காக தென் மாகாணத்தில் நாய்கள் மலடாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் முகமாக தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் கேள்வி கோரப்படுகின்றன.

01. கீழ்க்காணும் அடிப்படைத் தகைமைகள் பூர்த்திசெய்யும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.
    i. குறித்த விண்ணப்பதாரிகள் தகைமையுள்ள கால்நடை வைத்திய அதிகாரிகளாக இருத்தல் வேண்டும். (கால்நடை மருத்துவப் பட்டச் சான்றிதழ், கால்நடை மருத்துவ சபையின் பதிவுச் சான்றிதழ்)
    ii. விண்ணப்பதாரியினால் ஒரு பிரதேசத்தை உள்ளடக்குமாறு குறைந்தப்பட்ச ஒரு வருட காலத்திற்கு குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தியிருத்தல் வேண்டும். (குறித்த பிரதேசத்தின் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரின் பரிந்துரையை சமர்ப்பித்தல் வேண்டும்.)
02. கேள்வி விண்ணப்பங்கள் 2024.03.21 முதல் 2024.04.04 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள தென் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பத்தை பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூ. 1000.00 மீளளிக்கப்படும் ரூ. 50,000.00 வைப்பை இத்திணைக்களத்தின் பிரதம கணக்காளரிடம் காசாகச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் மேற்படி ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. அவ்வாறு குறிப்பிடப்படும் கேள்வி ஆவணங்களை முறையாகப் பூர்த்திசெய்து 2024.04.05 மு.ப. 10.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது சுகாதார சேவைப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையில் இடதுபக்க மேல்மூலையில் "நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கான விலைமனுக்கள் - 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
04. 2024.04.05 மு.ப. 10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன், கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களுக்காக மாகாண சுகாதார கேள்வி பணிப்பாளர் / பிரதம கணக்காளரிடமிருந்து விசாரித்து அறியலாம். (தொ.பே. இல.: 091-2234980 / 091-2224609 / 091-2231620)
05. தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநர்கள் தென் மாகாணத்திற்குள் நாய்களை மலடாக்குவதற்கு இணங்கியிருத்தல் வேண்டும்.
06. குறித்த கேள்விகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கப்படும் உரிமை தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**மாகாண பெறுகைக்குழு,**
**சுகாதார திணைக்களம்,**
**இல. 15A, கீழ் டிக்சன் வீதி,**
**காலி**



## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### கூட்டுத்தாபனம் வசமுள்ள தொகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை அபிவிருத்தி செய்து நடாத்திக்கொண்டு செல்வதற்கு ஆர்வத்தை கோருதல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வசமுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய வலையமைப்பை தேசிய பொருளாதாரத்திற்கு மிகவும் பயனுள்ள வகையில் பங்களிப்புச் செய்வதற்காக பின்வரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தரநிலை மற்றும் விபரக்குறிப்பின் பிரகாரம் அபிவிருத்தி செய்து சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சூழல் தரநிலைக்கு அமைவாக பாவனையாளர்களுக்கு மேலான மற்றும் வினைத்திறனுடனான சேவையை வழங்கி நடாத்திக்கொண்டு செல்வதற்காக ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து எரிபொருள் நிரப்புநிலைய விநியோகத்துறைக்கு ஆர்வத்தைக் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| | அம்பலாங்கொட | முந்தல் |
|---|---|---|
| அமைவிடம் | காலி மாவட்டம், அம்பலாங்கொட நகரம் | புத்தளம் மாவட்டம், முந்தல் நகரம் |
| முகவரி | இலங்கை நிரப்புநிலையம், அம்பலாங்கொட | இலங்கை நிரப்புநிலையம், முந்தல் |
| எரிபொருள் நிரப்பு நிலையத்தின் தரை பரப்பளவு | 15.32 பேர்ச் | 28.12 பேர்ச் |
| கட்டிடம் | இரண்டு மாடிக் கட்டிடம் மற்றும் கெனபியை திருத்தவேலைகள் செய்துகொள்ள வேண்டும். | தற்போதுள்ள கட்டிடம் உடைந்த நிலையில் உள்ளதால் மீள் நிர்மாணம் செய்துகொள்ள வேண்டும். |
| பராமரிப்பு மற்றும் திருத்தவேலை நடவடிக்கைகள் | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தரநிலை மற்றும் அறிவுரைகளுக்கு அமைவாக விநியோகஸ்தர்களின் செலவில் செய்துகொள்ளல் வேண்டும் | |

மேற்கூறிய விடயங்களை கவனத்திற் கொண்டு இது தொடர்பில் ஆர்வம் காட்டும் இலங்கைப் பிரஜைகள் மற்றும் வியாபார நிறுவனங்களிடமிருந்து வியாபார முன்மொழிவுகள் கோரப்படுகின்றன. அதன் பிரகாரம் மேற்கூறிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை அபிவிருத்தி செய்து விநியோகத்துவத்தை நடாத்திக்கொண்டு செல்வதற்காக ஆர்வம் காட்டும் தரப்பினரினால் இது தொடர்பான ஆர்வத்தை 2024 ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்படுகின்றது. முதலீட்டுத் திட்டத்தை முறையாக மற்றும் உறுதியாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். உங்களது முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு முன் எரிபொருள் நிரப்பு நிலைய இடப்பரப்பை பரீட்சித்துப் பார்ப்பதற்குத் தேவையானால் எமது முகாமையாளர் (பொறியியல் மற்றும் இடப்பரப்பு) அவர்களைத் தொடர்புகொண்டு நாளொன்று ஒதுக்கிக்கொள்ளலாம்.

சமர்ப்பிக்கப்படும் வியாபார முன்மொழிவினுள் பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகள் தொடர்பில் பொறியியலாளர் திட்டமிடல் / மீள் நிர்மாண பொறியியல் திட்டம் மற்றும் அதற்கான நிதி மதிப்பீடு (BOQ), முதலீட்டிற்கான நிதி மானியம் வழங்கப்படும் முறை, அதேபோல் முதலீட்டின் மூலம் கிடைக்கும் பிரதிபலன் (ROI) தொடர்பாக உறுதியான தகவல் ஆவணங்கள் மற்றும் அறிக்கை மூலம் உறுதிப்படுத்துதல் கட்டாயமாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். இதில் ஆர்வம் காட்டும் தரப்பினர் மேற்கூறப்பட்ட இரண்டு இடங்களுக்கும் அல்லது விருப்பத்தின் பேரில் ஒரு இடத்திற்காக ஆர்வத்தை முன்வைக்கலாம்.

உங்கள் முன்மொழிவு தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் பரிசீலனையின் பின் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்தால் மட்டும் மிகுதி வேலைகளுக்கான மேலதிக தகவல்கள் மற்றும் ஆவணங்களை கேட்கப்படும் வேளையில் சமர்ப்பித்தல் விண்ணப்பதாரரின் பொறுப்பு என்பதை கவனத்திற் கொள்ளவும்.

எரிபொருள் நிரப்பு நிலையம் தொடர்பான அடிப்படைத் தகவல்கள் மற்றும் தேவையான ஏனைய விபரங்களுக்கு **www.ceypetco.gov.lk** எனும் எமது உத்தியோகபூர்வ இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**சந்தைப்படுத்தல் பணியகம்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**இல. 609, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி 0115 455 253 தொலைநகல் 0115 455 411**

**www.ceypetco.gov.lk**





# பெறுகை அறிவித்தல்

## அபிவிருத்தி லொத்தர் சபை

**(நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு)**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### வணிக உரிமைப் பெயருடைய ஆண்களுக்கான குடைகளை வழங்கல் - 3000

### Bid No.: DLB/PRO/2024/17

3000 எண்ணிக்கையான வர்த்தக உரிமைப் பெயருடைய ஆண்களுக்கான குடைகளை வழங்குவதற்காக ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பாக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கீழ்மட்ட பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.

03. 2024.03.21 ஆம் திகதியிலிருந்து 2024.04.04 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 1,180 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை (யூனியன் பிளேஸ்),

356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவிற்கு வழங்குநரினால் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று பரீட்சிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

04. விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ளவாறு விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

05. விலைமனுக்கோரல் ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு அனைத்து விபரமான தகவலை விலைமனுதாரர்கள் வழங்கல் வேண்டும்.

06. விலைமனு நிபந்தனைகளின் பிரகாரம், விலைமனுக்கள் இரு பிரதிகளில் தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் **"Supplying of Branded Gents Umbrellas – 3000 (Bid No. DLB/PRO/2024/17)"** என குறிக்கப்பட்டு 2024.04.05 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு பிந்தாமல் கிடைக்கும் வகையில் தலைவர், கீழ்மட்ட பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை, 356, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை, கொழும்பு-02, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் குறிப்பிட்ட நேரத்தின் பின்னரான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

07. விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியின் அபிவிருத்தி லொத்தர் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024.04.05 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மூடப்படுமென்பதுடன் விலைமனுக்கள் அவற்றின் மூடும் நேரத்தின் பின்னர் விரைவாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

08. விலைமனுக்கோரல் ஆவணங்களை **www.dlb.lk** என்ற அலொச இன் இணையதளத்தில் பார்வையிடலாம்.

தலைவர்,
கீழ்மட்ட பெறுகைக் குழு,
அபிவிருத்தி லொத்தர் சபை,
356, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை, கொழும்பு-02.
தொலைபேசி: 011 4824824
20.03.2024. **www.dlb.lk**

DLB DEVELOPMENT LOTTERIES

# கடற்றொழில் அமைச்சு

## மத்திய மீன் சந்தை தொகுதி - பேலியகொடை

## பேலியகொட மத்திய மீன் சந்தை தொகுதிக்கு கட்டி ஐஸ் வழங்கும் சேவையை நடத்திச் செல்வதற்காக வழங்குநர்கள் இதுவரை தேர்ந்தெடுப்பதற்கான கேள்வி கோரல் – 2024

கடற்றொழில் அமைச்சின் கீழ் முகாமைத்துவப் பொறுப்பின் மூலம் நிர்வகிக்கப்படும் பேலியகொடவில் அமைந்துள்ள மத்திய மீன் சந்தை தொகுதிக்கு கட்டி ஐஸ் வழங்கும் சேவையை இரு வருட கால எல்லைக்கு குத்தகை அடிப்படையில் நடத்திச் செல்வதற்கு கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து மாத்திரம் பேலியகொட மத்திய மீன் சந்தை தொகுதி முகாமைத்துவப் பொறுப்பின் தலைவரால், 2024.04.10 மு.ப.10.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. 2010ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேலியகொட மத்திய மீன் சந்தை தொகுதி - 154 விற்பனை கூடங்களைக் கொண்ட மொத்த சந்தையையும், 128 விற்பனை கூடங்களை கொண்ட சில்லறைச் சந்தையையும், 500 வாகனங்கள் மட்டில் நிறுத்தி வைக்கக்கூடிய வாகன நிறுத்துமிடத்தையும் கொண்டதுடன், தற்போது பெரும் எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தக சமுகத்தினரால் அன்றாடம் பாவிக்கப்படும் மிகவும் பரபரப்பான இலங்கையில் தற்போது காணப்படும் மிகப் பிரதானமான மீன் வழங்கும் நிறுவனமாக பொருளாதார ரீதியில் உறுதி நிலையை அடைந்துள்ளது. அதன் பிரகாரம் சந்தை தொகுதிக்கு ஐம்பது கிலோகிராம் (50Kg) நிறைகொண்ட துண்டாக்கப்பட்ட ஐஸ் கட்டிகளின் அன்றாட தேவைப்பாடு அண்ணளவாக 3000 ஐஸ் கட்டிகளாகும்.

01. தேசிய போட்டி கேள்விகோரல் செயற்பாடுகள் (NCB) மூலம் இக்கேள்விகோரல் நடத்தப்படும் கேள்விதாரர்கள்:

02. துண்டு ஐஸ் உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் விற்பனை பற்றிய இலங்கை வியாபார பெயர் பதிவு சட்டவாக்கத்தின் கீழ் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. துண்டு ஐஸ் உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் விற்பனை பற்றிய குறைந்தபட்சம் கிட்டிய 05 வருடத்திற்குள், 03 வருட சேவை அனுபவம் இருத்தல் வேண்டும்.

04. தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இரு கேள்விதாரர்களுக்கு (02) மாத்திரம் இச் சேவை வழங்குவதற்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

05. இச் சேவைக்கான மாதாந்த வாடகைத் தொகை ரூபா ஒன்பது இலட்சம் (900,000.00) ஆவதுடன் அது உறுதியானதாகும். அம்மாதாந்த குத்தகை தொகை தேர்ந்தெடுக்கப்படும் இரு கேள்விதாரர்களுக்கிடையில் சமமாக பகிர்ந்தளிக்கப்படும்.

06. கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டியது, இல.83/1, மீகஹவத்த வீதி, பேலியகொட என்ற முகவரியில் அமைந்துள்ள பேலியகொட மத்திய மீன் சந்தை தொகுதியின் நிர்வாக அலுவலகத்திலிருந்து 2024.03.21ம் திகதி முதல் 2024.04.09 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை கேள்விதாரரால் தமது கடிதத் தலைப்பிலான கடிதத்தின் மூலம் விண்ணப்பித்து பெற்றுக்கொண்ட மாதிரிப் பத்திரம் மூலம் மாத்திரமே.

07. கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு முன்பு மீளளிக்கப்படாத ரூ.2000/- கேள்விக் கட்டணத்தை பேலியகொட மத்திய மீன்சந்தை தொகுதியின் முகாமைத்துவப் பொறுப்பின் கணக்கு இல - 71446342 என்ற இலங்கை வங்கி கணக்கில் வைப்புச் செய்து குறித்த பற்றுச்சீட்டை பேலியகொட மீன் சந்தை தொகுதியின் நிர்வாக அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பித்து காசுப் பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

08. இதனோடு சம்பந்தப்பட்ட கேள்விக்கு முன்னரான சந்திப்பு 2024.03.28 மு.ப.10.00 பேலியகொட மத்திய மீன் சந்தை தொகுதியின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

09. சகல கேள்வியுடனும் கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித்திகதி முதல் 110 நாட்கள் வரை (அதாவது 2024 ஜூலை 28 வரை) செல்லுபடியாகும் மற்றும் கேள்வி ஆவணங்களுடன் தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாகவும், இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பெயர் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற வங்கிப்பிணையில் வர்த்தகத்திலான ரூ.ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் (ரூ.150,000/-) பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் இல்லையெனில் அதன் பெறுமதி மற்றும் சமமான தொகையை பேலியகொட மீன்சந்தை தொகுதியின் முகாமைத்துவ பொறுப்பின் கணக்கு இல.71446342 என்ற இலங்கை வங்கி கணக்கில் வைப்புச் செய்து குறித்த பற்றுச்சீட்டை பேலியகொட மத்திய மீன் சந்தைத் தொகுதியின் நிர்வாக அலுவலகத்தில் கணக்குப்பிரிவிற்கு சமர்ப்பித்து அப் பிரிவில் இருந்து விநியோகிக்கப்படும் நிதிப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

10. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2024.04.10 மு.ப.10.00 இற்கு முன் கிடைக்குமாறு.

**தலைவர்,**
**பேலியகொட மீன் சந்தை தொகுதி முகாமைத்துவ பொறுப்பு கடற்றொழில் அமைச்சு,**
**புதிய செயலகம், மாளிகாவத்த,**
**கொழும்பு - 10**
**என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கடற்றொழில் அமைச்சின் இரண்டாம் மாடியின் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.**

11. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு வருகை தருவதற்கு அனுமதியளிக்கப்படும். 2024.04.10 மு.ப.10.00 இற்கு கேள்விகோரல் முடிவடைந்தவுடன் கிடைக்கப்பெற்றுள்ள கேள்விப் பத்திரங்கள், கடற்றொழில் அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள பிரதம கணக்காளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

12. இதுபற்றிய மேலதிக விபரங்களை நிர்வாக அலுவலகத்தின் தொ.பே.இல : 0113301707 ஐ அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பேலியகொட மத்திய மீன் சந்தை தொகுதி முகாமைத்துவ பொறுப்பு கடற்றொழில் அமைச்சு**
**புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு - 10.**
**2024.03.21**

## பதவி வெற்றிடங்கள்

# தேசிய கல்வி நிறுவகம்

தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024 ஏப்ரல் 02 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம், த.பெட்டி 21, மஹரகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைக்கும் வகையில் தயவு செய்து அனுப்பவும். விதித்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்கள் ஆகியன **www.nie.ac.lk** என்ற இணையதளத்தின் "News & Events" என்ற பிரிவிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிப் பெயரை தயவு செய்து குறித்துரைக்கவும்.

**பதவிகள்:** :- 01. இயக்குநர் (ஆங்கில மொழியில்.)
02. பணிப்பாளர் (அச்சடித்தல் மற்றும் வெளியீடுகள்)

**சேவை வகுதி** :- சிரேஷ்ட முகாமையாளர் (ஏச்எம் 1-1)

**பொதுவான நிபந்தனைகள் :**

- பிறப்புச் சான்றிதழ், கல்விசார்/தொழில்சார் சான்றிதழ்கள் மற்றும் சேவைகள் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- அரச துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட அமைப்புக்கள் மற்றும் அரசாங்க திணைக்களங்களின் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அமைப்புக்களின் தலைமையூடாகவே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- இந்த பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் அவர்களின் சம்பளத்தின் 8% ஐ ஊசேநி இற்கு பங்களிப்புச் செய்வதுடன் நிறுவனமானது 12% ஐ ஊசேநி இற்கும் 3% ஐ ஊநபி இற்கும் பங்களிப்புச் செய்யும்.
- அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக, தொழில்சார் படி, போக்குவரத்து படி, ஆய்வு படி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# கடற்றொழில் அமைச்சு

## தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை (NARA)

### நாரா தலைமை அலுவலகத்திற்கு மற்றும் பிராந்திய நிலையங்களுக்கான பாதுகாப்பு சேவை மற்றும் துப்பரவேற்பாட்டு சேவையை பெற்றுக் கொள்வதற்கான விலைமனு கோரல் 2024/2025

2024 / 2025 ஆகிய ஓர் ஆண்டு காலத்திற்கு தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமையின் தலைமை அலுவலகத்திற்கு மற்றும் பிராந்திய நிலையங்களுக்கான பாதுகாப்பு சேவை மற்றும் துப்புரவேற்பாட்டு சேவையை பெற்றுக் கொள்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. விலைமனு விண்ணப்பக் கட்டணமாக ஒரு விண்ணப்பப் படிவத்திற்கு மீளளிக்கப்படாத 1000.00 ரூபா தொகையை 2024.03.20 ஆம் திகதி தொடக்கம் 2024.04.08 ஆம் திகதி மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில், பணிப்பாளர் நாயகம்/ நாராவின் பெயருக்கு காக்கை தீவு, மட்டக்குளி, கொழும்பு-15 இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தின் நிதிப் பிரிவுக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு கோரிக்கை கடிதம் ஒன்றை கொள்வனவு மற்றும் வழங்கல் பிரிவுக்கு சமர்ப்பித்து பெறுகை விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

02. அந்த சேவைகள் தொடர்பில் விபரம் கீழுள்ளவாறு அமையும்.

**பாதுகாப்புச் சேவை:-**

| | |
|---|---|
| பிணையின் பெறுமதி | ரூபா 200,000.00 |
| விலைமனு விண்ணப்பங்களை வழங்கும் இறுதித் திகதி | 2024.04.08 ஆம் திகதி வரையாகும். |
| விலைமனு விண்ணப்பங்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் | 2024.04.09 அன்று மு.ப. 10.30 |
| விலைக்கேட்புப் பெட்டி இலக்கம் | இலக்கம் 03 |

**துப்புரவேற்பாட்டு சேவை:-**

| | |
|---|---|
| பிணையின் பெறுமதி | ரூபா 110,000.00 |
| விலைமனு விண்ணப்பங்களை வழங்கும் இறுதித் திகதி | 2024.04.08 ஆம் திகதி வரையாகும். |
| விலைமனு விண்ணப்பங்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் | 2024.04.09 அன்று மு.ப. 11.30 |
| விலைக்கேட்புப் பெட்டி இலக்கம் | இலக்கம் 04 |

- அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட விலைமனு பிணை அல்லது பணிப்பாளர் நாயகம்/ நாரா என்ற பெயரில் தலைமை அலுவலகத்தின் நிதிப் பிரிவுக்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு ஒன்றை பெறுகை ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விலைமனுக்களை சமர்ப்பிக்கின்ற நிறுவனத்தினால் வழங்குகின்ற விண்ணப்பத்தை, அதாவது மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரை இட்டு அந்த இரண்டையும் ஒரு உறையில் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் "நாரா தலைமை அலுவலகத்திற்கு மற்றும் பிராந்திய நிலையங்களுக்கு பாதுகாப்பு சேவையை பெற்றுக் கொள்ளல் - 2024/2025 விலைக்கேட்புப் பெட்டி இலக்கம் - 03" என்று மற்றும் "நாரா தலைமை அலுவலகத்திற்கு மற்றும் பிராந்திய நிலையங்களுக்கு துப்புரவேற்பாட்டு சேவையை பெற்றுக் கொள்ளல் - 2024/2025 விலைக்கேட்புப் பெட்டி இலக்கம் - 04" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

04. பாதுகாப்பு சேவைக்காக விலைமனுக்களை பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்களுக்காக முன் அறிவூட்டல் கூட்டம் 2024.03.28 ஆம் திகதி மு.ப. 10.00 மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைக்காக விலைமனுக்களை பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்களுக்கு முன் அறிவூட்டும் கூட்டம் 2024.03.28 ஆம் திகதி மு.ப. 11.00 க்கு பிரதான கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.

05. பாதுகாப்பு சேவையை பெற்றுக்கொள்ளல் - 2024/ 2025 விலைக்கேட்புப் பெட்டி இலக்கம் - 03 மற்றும் துப்புரவேற்பாட்டு சேவையை பெற்றுக்கொள்ளல் - 2024/ 2025 விலைக்கேட்புப் பெட்டி இலக்கம் - 04 என வெவ்வேறாக முறையாக பூர்த்தி செய்யப்பட்ட உங்களது விலைமனுக்களை நாரா தலைமை அலுவலகத்தின் முதல் மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும்.

06. விலைமனுக்களை திறக்கின்ற சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் பிரதிநிதி ஒருவருக்கு அதற்காக பங்கேற்க முடியும். பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை**
**காக்கை தீவு, மட்டக்குளி**
**கொழும்பு-15**
**0112-529717/ 0112-521000**

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|---|
| **கார்** | | | | |
| 014 | -0XXX | MITSUBISHI | L400 | 1983 |
| HS | -7XXX | HYUNDAI | TRAJET | 2000 |
| **வேன்** | | | | |
| 51 | -5XXX | NISSAN | VANETTE | 1986 |
| **லொறி** | | | | |
| PP | -2XXX | TATA | ACE | 2010 |
| PT | -5XXX | TATA | SUPER ACE | 2012 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | | |
| JP | -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JZ | -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QG | -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QG | -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QW | -3XXX | BAJAJ | AR4S-UG | 2009 |
| YK | -7XXX | PIAGGIO | APE CITY | 2011 |
| YP | -5XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YU | -1XXX | PIAGGIO | APE | 2011 |
| AAG | -9XXX | BAJAJ | RE 205 | 2013 |
| AAJ | -6XXX | BAJAJ | RE205 | 2013 |
| ABH | -6XXX | BAJAJ | RE | 2015 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2024 மார்ச் 21ஆம், 22ஆம், 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 மார்ச் 26ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**

www.skillsads.com

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு குறிப்பிட்ட நபர்களுக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை மேம்படுத்த உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின்நிலையம்/ வசதியின் பெயர் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|
| E/AL/N/24/02 | WKV ஹைட்ரோ டெக்னிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | வே கங்கா மினி ஹைட்ரோ மின் உற்பத்தி நிலையம் | 8.925 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/24/03 | சூப்பர்பா ஹைட்ரோ (பிரைவேட்) லிமிடெட் | நுகெதொல மினி ஹைட்ரோ மின் உற்பத்தி நிலையம் | 0.5 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தலைவர்**
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

திகதி: 2024.03.21

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக மூலப்பொருட்களை வழங்கல்


1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) அவிசாவளை தலைமை பொறியியல் பிரிவிற்கு கொள்வனவுக் குழுவின் தலைவரினால் Dense Graded ABC (37.5mm) (Loose Volume) வழங்குவதற்காகதகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
   - I. **RDA/SP/1500km/WP/11** - வெனிவெல்கொல பாசல் மாவத்த
   - II. **RDA/SP/1500km/WP/17** - மொரட்டுவா கந்த வீதி
2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.
   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
   வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிரதேச கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - அவிசாவளை**
**தொ.பே 033-2222307**

SELACINE

---




---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### சுகாதார அமைச்சு

**இலங்கை தேசிய கண் வைத்தியசாலை, கொழும்பு-10**
**பழைய கட்டிடத்தின் முன் பக்கம் மற்றும் டி சேரம் பிளேஸ் பக்கம் ஆகியவற்றிற்கு பெயிண்ட் பூசுதல்**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் இடைநிகழ்வுகள் நீங்கலாக 7.50 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுமான கொழும்பு-10, இலங்கை தேசிய கண் வைத்தியசாலையின் பழைய கட்டிடத்தின் முன் பக்கம் மற்றும் டி சேரம் பிளேஸ் பக்கம் ஆகியவற்றிற்கு பெயிண்ட் பூசுவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பிரதேச பெறுகைக் குழுத் தலைவரின் சார்பாக கொழும்பு-10, இலங்கை தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். அமைவிடமானது கொழும்பு-10, இலங்கை தேசிய கண் வைத்தியசாலையிலுள்ளது. பூர்த்தி செய்யப்பட வேண்டிய பிரதான வேலையானது அளவைப் பட்டியலில் விபரிக்கப்பட்டவாறு பெயிண்ட் வேலைகள் மற்றும் சுவர் மெருகூட்டல் அடங்கலாக பழைய கட்டிடத்தின் முன் பக்கம் மற்றும் டி சேரம் பிளேஸ் பக்கம் ஆகியவற்றிற்கு பெயிண்ட் பூசுதல் ஆகியவற்றை அடக்குகின்றது. ஒப்பந்தக் காலமானது 56 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
   தேவைப்படும் ICTAD பதிவு செய்தல்.
   - விஷேடத்துவம் : கட்டிடம்
   - தரம் : சி-8 அல்லது மேற்பட்டது
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-10, இலங்கை தேசிய கண் வைத்தியசாலை பணிப்பாளரிடமிருந்து பெற்று மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024.03.21 ஆம் திகதியிலிருந்து (ஆவணத்தை வழங்குவதற்கான ஆரம்ப திகதி) 2024.04.09 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 2500 ரூபாவைச் செலுத்திய பின்னர் கொழும்பு-10, இலங்கை தேசிய வைத்தியசாலை பணிப்பாளரிடமிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
6. கொழும்பு-10, இலங்கை தேசிய கண் வைத்தியசாலை பணிப்பாளரிடம் விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2024 ஏப்ரல் 10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவற்றை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
7. அனைத்து விலைமனுக்களும் 115,000 ரூபா (ஒரு இலட்சத்து பதினைந்தாயிரம் ரூபா) பெறுமதியான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுவின் விலையானது ஐந்து மில்லியனுக்கு மேற்பட்டால் விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டமூலத்தின் கீழ் பதிவு செய்தல் வேண்டுமென்பதுடன் அதனது 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளுக்கு கண்டிப்பாக இணைந்தொழுகல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. விலைமனுப் பிணையானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**இலங்கை தேசிய கண் வைத்தியசாலை,**
**கொழும்பு-10.**
**தொலைபேசி: 011-2693911**

---

## 2024/2025 ஆம் ஆண்டிற்காக தெஹிவளை, களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கட்டிடங்களுக்காக அறை வளிச்சீராக்கல் முறைகளுக்காக பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு முன்னரான பராமரிப்பு மற்றும் சேவைகளுக்காக பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான அழைத்தல்

1. கீழே விபரிக்கப்பட்டவாறு 2024/2025 ஆம் ஆண்டிற்காக தெஹிவளை, களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கட்டிடங்களுக்காக "Registration of Maintenance Contractors for Preventive & Corrective Maintenance & Services of Inverter & Non Inverter Type Room Air Conditioning System" என்பதற்காக பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை தெஹிவளை, களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் தெஹிவளை கொழும்பு தெற்கு வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து வேலை நாட்களில் 10 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
5. 2024 ஏப்ரல் 4 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழேயுள்ள முகவரிக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 1500 ரூபாவை செலுத்திய பின்னர் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் தெஹிவளை, களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
6. விலைமனுக்கள் 2024 ஜூலை 4 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு 2024 ஏப்ரல் 5 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் 2024 ஓகஸ்ட் 01 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமெனவும் 20,000 இலங்கை ரூபா பெறுமதியிலான தொகைக்காகவும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு.
   **பணிப்பாளர்,**
   **கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
   **களுபோவில,**
   **தெஹிவளை.**

**தொடர்பிலக்கம் : 0112832950 (நீடிப்பு-2205)**
**தொலைநகல் : 0112765505**

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**பாரிய கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டம்**

### கொட்டாவ, மாக்கும்புர பல்வகை நிலையத்தில் வாடகைக்காக இடப்பரப்பொன்றின் பெறுகை

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பாரிய கொழும்பு நகர போக்குவரத்து செயறிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| பெறுகை இலக்கம் | அம்ச விளக்கம் | விலைமனுப்பிணை (ரூபாவில்) | மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனுப்பிணையை மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| Mo T&H/GCUTDP/ MMCK/BD/2024/QSS | Quick Stop Shop (spft) | 50,000.00 | 3000.00 | 2024.04.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைக்கு இசைவாக நடத்தப்படும்.
2. 2024 மார்ச் 21 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 3 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, II ஆம் கட்ட ''செத்சிரிபாய'', தரை மாடி, GB-01, பாரிய கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டத்தின் அபிவிருத்தியின் நகர்சார்ந்த அபிவிருத்தி ஆக்கக்கூறு செயற்றிட்ட பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று பரீட்சிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் மாத்திரமே இருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தெளிவுறுத்தல்களை பத்தரமுல்ல, II ஆம் கட்ட ''செத்சிரிபாய'', தரை மாடி, GB-01, பாரிய கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 0112186094/0112034471. தொலைநகல்: 011-2186096.
4. 2024 மார்ச் 27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொட்டாவ, மாக்கும்புர பல்வகை நிலையத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமும் அதே முகவரியில் அதன் பின்னர் விலைமனு முன்னோடிக் கூட்டமும் உடனடியாகவே தள விஜயமும் நடைபெறும்.
5. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் மற்றும் விடயமும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் தபாலுறையானது பதிவுத் தபாலில் செயற்றிட்டப் பணிப்பாளர், **GB-01,** தரை மாடி, 'செத்சிரிபாய', **II** ஆம் கட்டம், பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே அதே முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் இரு பிரதிகளில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் 2024 ஏப்ரல் 03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்களின் தாமதமான சமர்ப்பிப்புக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடும் நேரத்தின் பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**பாரிய கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**GB-01, தரை மாடி, 'செத்சிரிபாய', II ஆம் கட்டம், பத்தரமுல்ல.**

# விலைமனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம்: 070/T/2023**

## கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு குதைகள் 48 வலையமைவு நிலைமாற்றி (NETWORK SWITCH 48 PORT) 12 வழங்குதல் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு குதைகள் 48 வலையமைவு

நிலைமாற்றி (NETWORK SWITCH 48 PORT) 12 வழங்குவதற்காக மற்றும் செயலுரிமையளிப்பதற்காக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால் விலைக்கேள்விகளை அழைக்கப்படுகின்றன.

விலைக்கேள்வியாளரால் வெளியிடப்பட்ட அலுவல்முறைக் கடிதமொன்றுடன் மீண்டும்-திருப்பிச்செலுத்தப்படாத விலைக்கேள்வி கட்டணமான ரூபா ஆறாயிரம் (ரூபா.6,000/-) காசாக செலுத்தி கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்ற விலைக்கேள்வி ஆவணங்கள் மூலம் விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2024.03.21 ஆம் திகதி முதல் 2024.04.15 ஆம் திகதி வரை வாரத்தில் வேலை செய்யும் ஏதேனும் ஒரு நாளில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப 03.00 வரையிலான காலப்பகுதிக்குள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவிலிருந்து விலைக்கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்து கொள்ள முடியும். அக்குறித்த விலாசத்தில் விலைக்கேள்வி ஆவணத்தினை இலவசமாக பார்வையிடும் இயலுமை உள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் இதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைக்கேள்விகள் வைப்பிட முடியும். விலைக்கேள்வியாளர்கள் தாங்கள் விரும்பினால், மேற்குறிப்பிட்ட முகவரிக்கு முத்திரைக் குறியிடப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்களை தனிப்பட்ட முறையில் கொண்டு வந்து ஒப்படைக்க முடியும்.

2024.04.16 செவ்வாய் பி.ப 02.00 மணிக்கு விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் முடிவடைவதுடன் அதற்குப் பின்னர் உடனடியாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியில் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் விலைக்கேள்விகள் திறந்துவைக்கப்படும். விலைக்கேள்விகளை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு அதில் பங்கேற்க முடியும்.

மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற, இலங்கைக்குள்ளே செயற்படுகின்ற, வங்கியொன்றினால் வெளியிடப்படுகின்ற வங்கி பிணைமுறி வடிவில் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் தவிசாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா மூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் (ரூபா.325,000/-) கேட்டவுடன் செலுத்தப்படும் விலைக்கேள்வி பிணைமுறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் தொலைபேசி இலக்கம் 011-2264106/011-2264103, அழைப்பதன் மூலம், head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

# கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

ஐக்கிய இராச்சியம், ரிச்மண்ட் TW10 7YL டியூக்ஸ் எவனியூ, 160 இல் வசித்து மரணமடைந்த ஹிக்கடுவகே தயாசேன பர்ணாந்து வின் மரண சாதனம் தொடர்பாக ஹய் கோட் ஒப் ஜஸ்டிஸ் இங்கிலண்ட் அண்ட் வேல்ஸ் இனால் ஐக்கிய இராச்சியம், ஸ்டெண்ட்லேக் ஒக்ஸ்பர்ஷ்யர் OX29 7RY, ஹை ஸ்ட்ரீட், இலக்கம் 28/ஏ ஐச் சேர்ந்த மைக்கல் ரொபர்ட் பியூமன்டுக்கு வழங்கப்பட்ட மரண சாசன அதிகாரப் பத்திரம் 1977, 20 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சிவில் நடைமுறை கோவை அரச பேரவை சட்டத்தினால் திருத்தப்பட்ட சிவில் நடைமுறைக் கோவையின் XXXVIIIB ஆம் இலக்க அத்தியாயத்தின் கீழ் மீள உறுதிப்படுத்துவதற்கான விண்ணப்பம் சம்பந்தமான விடயம் தொடர்பாக.

வழக்கிலக்கம் - DTS / 56 /24 - தன்மை - மரண சாசனம் நடைமுறை - சுருக்கம் பெறுமதி - ரூ. 49,802,474.65

**மரணித்தவர்**

ஐக்கிய இராச்சியம், ஸ்டெண்ட்லேக் ஒக்ஸ்பர்ஷயர் OX29 TRY, ஹை ஸ்ட்ரீட், இலக்கம் 28/ஏ ஐச் சேர்ந்த மைக்கல் ரொபர்ட் பியூமன்ட்.

தனது அட்டோர்னி தத்துவக்காரராகிய கொழும்பு 06, வெள்ளவத்தை, சிரி போதிருக்காராம வீதி, 27/2B இலக்கத்தைச் சேர்ந்த கவிந்து திமோத்தி ஜயவீர ஊடாக ஆஜராகிறார்.

**முறைப்பாட்டாளர்**

ஐக்கிய இராச்சியம், ரிச்மண்ட் TW10 7YL டியூக்ஸ் எவனியூ, 160 இல் வசித்து மரணமடைந்த ஹிக்கடுவகே தயாசேன பர்ணாந்து வின் மரண சாசனம் தொடர்பாக ஹை கோட் ஒப் ஜஸ்டிஸ் இங்கிலண்ட் அண்ட் வேல்ஸ் இனால் ஐக்கிய இராச்சியம், ஸ்டெண்ட்லேக் ஒக்ஸ்பர்ஷயர் OX29 TRY, ஹய் ஸ்ட்ரீட், இலக்கம் 28/ஏ ஐச் சேர்ந்த மைக்கல் ரொபர்ட் பியூமன்டுக்கு வழங்கப்பட்ட மரண சாதன அதிகாரப் பத்திரம் 1977, 20 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சிவில் நடைமுறை கோவை அரச பேரவை சட்டத்தினால் திருத்தப்பட்ட சிவில் நடைமுறைக் கோவையின் XXXVIIIB ஆம் இலக்க அத்தியாயத்தின் கீழ் மீள உறுதிப்படுத்துவதற்கான விண்ணப்பம் சம்பந்தமான விடயம் தொடர்பான விண்ணப்பப் பத்திரமொன்று, இது பிரசுரிக்கப்பட்டு 28 நாட்கள் கழிந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**2024 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி.**

**டீ.எல். அண்ட் எப். டி சேரம்**
**முறைப்பாட்டாளரின் சட்டத்தரணிகள்**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

**புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்**

# சுற்றாடல் அமைச்சு

**அம்பாறை பிரதேசத்தில் விடுதி ஒன்றிற்கான வீடொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளல்**

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் அதிகாரிகளுக்கு விடுதி ஒன்றிற்காக வீடொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்ளத் தேவை, அதனோடு சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை www.gsmb.gov.lk இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**திறந்த போட்டிரீதியான விலைமனு (OCB) - தேசிய விளம்பரம்**

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்**

## மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு

**திகதி: 2024 மார்ச் 20**

கடன்/ மானிய இல. மற்றும் தலைப்பு : **ADB Grant G9229-SRI** (உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி திட்டம்)

ஒப்பந்த இல. : **MWCASE/PRO/ADB/OCB/NCB/SOLAR/GS-14**

ஒப்பந்த தலைப்பு : முதியோர் இல்லங்கள் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கான சூரிய கூரை **PV** அமைப்பின் வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்பு.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி: 2024 ஏப்ரல் 22 அன்று பி.ப. 2.00

1. உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி திட்டத்தின் செலவை நோக்கி ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) இடமிருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு நிதி கிடைக்கப்பெற்றிருப்பதோடு, மேல் பெயரிடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த நிதியின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுடைய மூல நாடுகளில் இருந்த விலைமக்கேட்புக்கு விலைமனுதாரர்களுக்கு திறக்கப்பட்டுள்ளது.
2. முதியோர் இல்லங்கள் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கான சூரிய கூரை PV அமைப்பின் வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்புக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் சார்பில் (“வாங்குபவர்”) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 41 முதியோர் இல்லங்கள் மற்றும் 9 தொழில் பயிற்சி நிறுவனங்கள் (VTI) தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையத்திற்காகவும் சூரிய சக்தி கொள்ளளவு 2.2 KW தொடக்கம் 20.0 KW அளவில் அமைவதோடு மொத்த கொள்ளளவு சுமார் 325 KW ஆகும்.
3. ADB இன் ஒரு கட்ட கடித உறை (1S1E) நடைமுறைக்கு அமைய திறந்த போட்டிரீதியான விலைக்கேட்பு நடத்தப்படுவதோடு விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுடைய நாடுகளிடம் இருந்து அனைத்து விலைமனுதாரர்களுக்கும் திறக்கப்பட்டிருக்கும்.
4. விலைமனு ஆவணத்தில் வரையறுக்கப்பட்ட பின்வரும் முக்கிய தகைமைகளுடனான தகுதிபெற்ற விலைமனுதாரர்களுக்கு மாத்திரம் இந்த விலைக்கேட்பில் பங்கேற்கலாம்:

   **ஒப்பந்த ரீதியிலான அனுபவம்:**
   - கடந்த 5 ஆண்டுகளுக்குள் வெற்றிகரமாக மற்றும் கணிசமாக பூர்த்தி செய்யப்பட்ட குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதோடு அது முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்திற்கு ஒத்ததாக, விலைமனுதாரர்களின் பங்கேற்பு பெறுமதி 60 மில்லியன் இ. ரூபாவுக்கு விஞ்சியதாக இருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் பங்கேற்பின் ஒத்த தன்மை பௌதீக அளவு, பணிகளின் பண்பு, சிக்கற்பாட்டு முறை, தொழில்நுட்பம் அல்லது பிரிவு 6 இல் விபரிக்கப்பட்டிருக்கும் (தொழில் வழங்குநரின் தேவை) மற்ற அம்சங்களை கொண்டிருத்தல் வேண்டும்.
   - சூரிய ஒளி மின்னழுத்த மின் உற்பத்தி திட்டங்களில் தொடர்புபட்ட குறைந்தது 100 Grid இல் வடிவமைப்பு, நிறுவுதல், செயற்படவைத்தல். ஒவ்வொர திட்டத்தினதும் நிறுவல் திறன் குறைந்தது 05kWp அதற்கு மேல் இருத்தல் வேண்டும். கடந்த மூன்று (3) ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட அனைத்து திட்டங்களினதும் ஒன்றிணைந்த நிறுவல் திறன் 1000 kW அல்லது அதற்கு மேல் இருத்தல் வேண்டும். தேவையெனில் மேலதிக பக்கங்களை இணைக்கவும். விலைமனுதாரர்கள் மூன்று (3) திட்டங்களுக்கான பயன்பாடு மற்றும் வாடிக்கையாளர் உடன்படிக்கைகளுடன் நிகர அளவீடு ஆவணத்தின் மூன்று (3) பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

   **கடந்த கால நிதி செயல்திறன்**
   - மொத்த சொத்துகள் மற்றும் மொத்த பொறுப்புகளுக்கு இடையிலான வேறுபாடாக கடந்த ஆண்டு மதிப்பிடப்பட்ட குறைந்தபட்சமாக விலைமனுதாரர்களின் நிகர பெறுமதி சாதகமாக இருத்தல் வேண்டும்.
   - கடந்த 3 ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றலுக்கு உட்பட்ட ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரர்களினால் பெறப்பட்ட மொத்த கொடுப்பனவாக மதிப்படப்பட்ட 160 மில்லியன் இலங்கை ரூபாவின் குறைந்தபட்ச சராசரி ஆண்டுப் புரள்வை கொண்டிருத்தல்.
   - நிதிப் பாய்ச்சலுக்கு தேவையான கிடைக்கப்பெறும் அல்லது அணுகலுக்கான திரவச் சொத்துகள், கடன் வழிகள், மற்றும் ஏனைய நிதி செயல்திறன்கள் 40 மில்லியன் இ. ரூபா இருத்தல் வேண்டும்.
5. விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை பரீட்சிப்பது மற்றும் மேலதிக விபரங்களை பெறுவதற்கு பின்வருமாறு தொடர்புகொள்ளவும்:

   “தலைமை கணக்காளர், பெறுகை பிரிவு, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு, 5ஆவது மாடி (பிரிவு A), “செத்சிறிபாய” - கட்டம் 2, பத்தரமுல்லை, இலங்கை. தொலைபேசி இலக்கம் +9411-2187253 அல்லது தொலைநகல் இலக்கம் +9411-2187255 (மின்னஞ்சல்: abbproject.mwca@gmail.com) மற்றும் விலைமனு ஆவணங்களை அதே அலுவலகத்தில் கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம். விலைமனு ஆவணங்களை http://www.childwomenmin.gov.lk/ என்ற இணையதளத்தில் பிரவேசிப்பதன் மூலம் பரீட்சிக்க முடியும்.
6. தகுதியுடைய விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் விலைமனு ஆவணங்களை வாங்குவதற்கு
   - இலங்கை, பத்தரமுல்லை, “செத்சிறிபாய” - கட்டம் 2, 5ஆவது மாடி (பிரிவு A), பெறுகை பிரிவு, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு, உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி திட்டம், அமைச்சு பெறுகைக் குழு, தலைவருக்கு விலைமனு ஆவணத்திற்கு மேலுள்ள முகவரிக்கு எழுதிய கோரிக்கை.
   - சாதாரண வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை 2024 மார்ச் 20 ஆம் திகதி தொடக்கம் 2024 ஏப்ரல் 19 ஆம் திகதி வரை மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் பெயருக்கு ரொக்கப்பணம் அல்லது வங்கி வரைவு மூலம் 12,500.00 இ. ரூபாவின் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துல்.
   - ஆவணத்தை கைகளால் சேர்த்தல் வேண்டும். காணாமல்போதல் அல்லது தாமதித்து கிடைப்பவற்றுக்கு பொறுப்பேற்க மாட்டாது.
7. உங்களது விலைமனுவை சமர்ப்பித்தல்:
   - “தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி திட்டம், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு, 5ஆவது மாடி (பிரிவு A), “செத்சிறிபாய” - கட்டம் 2, பத்தரமுல்லை, இலங்கை” என்ற முகவரிக்கு
   - 2024 ஏப்ரல் 22 ஆம் திகதி பி.ப. 2:00 என்ற இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர்
   - 1,500,000 இ. ரூபா தொகைக்கான விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனு பிணை ஒன்றை இணைத்து

   பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்குப் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்களை ஒப்பிடும்போது, உள்நாட்டு முன்னுரிமை பொருந்தாது.
9. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு இலங்கை, பத்தரமுல்லை, “செத்சிறிபாய” - கட்டம் II, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் மாநாட்டு அறையில் 2024 ஏப்ரல் 04 ஆம் திகதி நடத்த ஏற்பாடாகியுள்ளது. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் இந்த விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்கலாம்.
10. இந்த விலைமனுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுடன் தொடர்புபட்ட அனைத்து செலவுகளையும் விலைமனுதாரர் ஏற்க வேண்டும் என்பதோடு விலைமனு நடைமுறையை நடத்துவது அல்லது முடிவுகள் என்ன ஆனபோதும் அந்த செலவுகளுக்கு தொழில்வழங்குநர் பொறுப்பேற்க மாட்டார்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு**
**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு**
**உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி திட்டம்**
**2024.03.20**

The Housewives' companion
Classifieds on
Daily News

**மத்திய மாகாண சபை**

# கேள்விக்கான அழைப்பு

**நிர்மாணங்கள்**

## நிதித்தன்மை - ஆரம்ப சுகாதார சேவையை வலுவூட்டும் செயற்றிட்டம்

### சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, சுற்றாடல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு

01. கீழே பட்டியலில் விபரிக்கப்படும் செயற்றிட்டங்களுக்காக மத்திய மாகாண சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சின் பெறுகைக்குழுத் தலைவரால் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2021.02.18ம் திகதி அரச நிதி சுற்றுநிருப இல. 4/2016 (III) இன் பிரகாரம், தேசிய போட்டி முறையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
03. கேள்விகளின் குறித்த மேலதிக விபரங்களை கண்டி, சங்கராஜ மாவத்தை, த.பெ.121 இல் மத்திய மாகாண சுகாதார அமைச்சின் பிரதம கணக்காளர் இடம் அல்லது கண்டி, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள பொறியியல் சேவைத் திணைக்களத்தின், பிரதிப் பணிப்பாளர் (சுகாதாரம் கட்டிடங்கள்) இடம்பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல.முறையே 081-2232620 மற்றும் 081-2201624 ஆகும்)
04. கீழே அட்டவணையில் இல.01 முதல் 04 வரை சேவை மற்றும் கைத்தொழில்களுக்கு குறித்த கேள்வி பத்திரங்களுக்காக மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை கண்டி, சங்கராஜ மாவத்தை, த.பெ.121 இல், மத்திய மாகாண சுகாதார அமைச்சின் கணக்குப் பிரிவிற்கு காசாக செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் அமைச்சின் கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பித்து 2024.03.21 முதல் 2024.04.08 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
05. முறையாக பூர்த்தி செய்யப்பட்டு பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2024.04.09 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கண்டி, சங்கராஜ மாவத்த, த.பெ.121 இல் அமைந்துள்ள சுகாதார சுதேச மருத்துவ, சமூக நலன்புரி, சுற்றாடல் மற்றும் சிறுவர் காப்புச் சேவை அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அவ் அலுவலகத்தில் கணக்குப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
06. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு, உறையின் இடதுபக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிட்டு பொறியிட்டு அனுப்புதல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
08. சமர்ப்பிக்கப்படும் கேள்விகளின் செல்லுபடியாகும் காலம் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் கால எல்லையாக இருப்பதுடன், இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து அல்லது இலங்கை காப்புறுதி சபை அனுமதித்த காப்புறுதி கம்பனி மூலம் அல்லது நிர்மாணத்திற்காக உறுதி செய்யும் உதவிதொகையில் அல்லது மத்திய மாகாண சுகாதார சுதேச மருத்துவ சமூக நலன்புரி சுற்றாடல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு செயலாளரின் பெயரில் விநியோகிக்கப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு பெறுமதியுடைய மற்றும் கால எல்லையுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பிணையொன்றை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பிணை காசாக வைப்பதாயின் மத்திய மாகாண சுகாதார அமைச்சின் நிதி உதவியாளரிடம் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு நிதி வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டில் உறுதிசெய்த பிரதியொன்றை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. இக்கேள்விப்பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.04.01 மு.ப.10.00 இற்கு மத்திய மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூக நலன்புரி, சுற்றாடல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சில் நடைபெறும்.
10. சகல கேள்வி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் கமிட்டியின் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும்

| தொடர் இல | கேள்வி இலக்கம் | கைத்தொழில்/சேவை/பொருட்கள் வழங்கப்படும் மாவட்டம் மற்றும் பெயர் | பொறியியல் அளவுப் பத்திர பெறுமதி (ரூ.மில்லியன்) (வெட் இன்றி) | தேவைப் படும் பதிவு (CIDA) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை அல்லது தொகை | | ஒப்பந்த காலம் (நாட்கள்) | கேள்விப் பிணை செல்லுபடி காலம் (நாட்கள்) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ) மீளளிக்கப் படாதது |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணையின் பெறுமதி (ரூ) | நிதி வைப்பு (ரூ) | | | |
| **சுகாதார கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்த்தல் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்** | | | | | | | | | |
| **கண்டி மாவட்டம்** | | | | | | | | | |
| 1 | சிபிசி/எம்/ எச்/02/08/ 04/01/2024 | கண்டி மாவட்டத்தின் சுகாதார நிறுவனங்கள் 27 ஐ சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வலையமைப்புக்கு உட்படுத்துதல் | 40.84 | - | 800,000.00 | 400,000.00 | 180 | 105 | 7500.00 |
| 2 | சிபிசி/எம்/ எச்/02/08/ 04/03/2024 PSDG | நாஉல நன்னடத்தை அலுவலக கட்டிட நிர்மாணம் கட்டம் II | 24.90 | C7 - C6 அல்லது C5 | 500,000.00 | 250,000.00 | 210 | 105 | 4500.00 |
| 3 | சிபிசி/எம்/ எச்/02/08/ 04/04/2024 PSDG | வேரவிலவத்த மகளிர், சிறுவர் இல்லத்தின் பாதுகாப்பு மதிலை நிர்மாணித்தல் | 16.00 | C7 - C6 அல்லது C5 | 330,000.00 | 105,000.00 | 210 | 105 | 4500.00 |
| 4 | சிபிசி/எம்/ எச்/02/08/ 04/05/2024 PSDG | தம்புல்ல நன்னடத்தை அலுவலகத்தின் மேல்மாடியை நிர்மாணித்தல் (கட்டம் 03) | 17.20 | C7 - C6 அல்லது C5 | 340,000.00 | 170,000.00 | 210 | 105 | 4500.00 |
| 5 | சிபிசி/எம்/ எச்/02/08/ 01/17/2023 | மத்திய மாகாண சுகாதார அமைச்சிற்கு சொந்தமான உணவகத்தை நடத்திச் செல்லல் | 0.12 | - | 2400.00 | 1200.00 | 2024 டிசம்பர் 31 வரை | 105 | 1000.00 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு, சுகாதார, சுதேச மருத்துவ, சமூக நலன்புரி, சுற்றாடல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு,**
**மத்திய மாகாணம், த.பெ.121, சங்கராஜ மாவத்தை, கண்டி** **2024.03.19**

**For classified advertisements and for replies**

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**
**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம்**
**பிரிவு 55**

குருநாகல் மாவட்டத்தின் பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் பஹல கலயாய எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 420593 பிரிவு இல. 01 தாள் இல. 01 துண்டு இல. 79 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த, இல. 260, கலயாய, பன்னல எனும் விலாசத்தைக் கொண்ட நெத்திகுமாரகே சிறிசேன என்பவர் 09.02.2017 ஆந் திகதி மரணமடைந் துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் குளியாப்பிட்டி வீதி, பன்னல என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 19.04.2024 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

## பெறுகை அறிவித்தல்

### மாவட்ட பொது வைத்தியசாலை - மொனராகலை

01. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக தகைமைவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மொனராகலை மாவட்ட வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2024-04-10ஆம் திகதி மு.ப. 09.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். இந்த வேலைகளுக்காக விலைமனுதாரர்களின் தகைமை மற்றும் உடன்படிக்கை காலம் என்பன அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

02. விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத விலைக்கோரல் வைப்பை மொனராகலை மாவட்டப் பொது வைத்தியுசாலையின் மருத்துவ அதிகாரியின் பெயரில் காசாளர் பிரிவிற்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பொது 172 மாதிரி படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை முத்திரைக் குறி பொறித்து நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம்.

03. 2024-03-21ஆம் திகதி முதல் 2024-04-09ஆம் திகதி வரையான காலத்தினுள் வாரத்தின் பொதுவான வேலை நாட்களில் பி.ப. 2.30 மணி வரையான காலத்தினுள் விலைமுனுதாரர் / விலை மனுதாரர் சார்பில் முன்வரும் தகுதிவாய்ந்த முகவர் அல்லது பெயரிடப்பட்ட பிரதிநிதியொருவர் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. பொதுவான கடமை நேரங்களில் வைத்தியசாலை அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் மருத்துவ அதிகாரி, மாவட்ட பொது வைத்தியசாலை, மொராகலை எனும் முகவரிக்கு பெற்றுக்கொண்ட செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்றை விலைக்கோரல் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த பெறுமதியை மொனராகலை மாவட்டப் பொது வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிக்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்யலாம்.

06. தேசியபோட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் ஒப்பந்தக்காரர் / வழங்குநர் தெரிவு செய்யப்படுவார்.

07. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

08. விலைக்கோரல் நிறைவடைந்த உடனடுத்து அதாவது 2023-04-10ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு விலைமனுதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்கு இடமளிக்கப்படும்.

09. விலைமனுக்களின் சகல பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிடப்பட்டு நிறுவனத்தின் முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்ட விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடியாது.

11. ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு இயைபான சகல விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 0552276261 / 0552276912 / 0552277194 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் அலுவலகத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை**

| கோவை இலக்கம் | வேலையின் பெயர் | விண்ணப்பதாரரின் தகைமை | மீளளிக்கப் படாத விலைக் கோரல் படிவக் கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| DGH/MO/14/நிர்மாணம்/01/22 | கண் வார்டின் கூரைத் திருத்தவேலைகளைச் செய்தல் | C7 அல்லது அதற்கு மேல் | 3,000.00 | 45,000.00 |
| DGH/M14/நிர்மாணம்/01/22 | மேல் தாதியர் தங்கும் விடுதியின் மலசலகூட முறைமையை நவீனமயப்படுத்துதல் | C7 அல்லது அதற்கு மேல் | 3,000.00 | 55,000.00 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மொனராகலை.**

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6541(MAR) | Spares for attending the repairs of main engine (Man B & W,405-26VO) of Tug Indra | 150,000.00 | 3,500.00 | 2024.05.02 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/PT/6575 (EL) | Main and Guide Wheels for Dutratrack Trolley of JCT Cranes | 40,000.00 | 1,000.00 | 2024.05.02 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/PT/6578 (MP) | 08 Nos. Main Hoist Wire Ropes for 41 TIHI STS Cranes at UCT | 120,000.00 | 3,500.00 | 2024.05.02 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CESFP/02/PT/6574(EL) | 04 Nos. Ventilation Blowers for the Hoist Motors of Transfer Cranes | 30,000.00 | 1,000.00 | 2024.05.02 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/PT/6580(MP) | 20 Nos. Roller Clutches for Anti-sway System of ZPMC RTGCS at JCT | 80,000.00 | 1,000.00 | 2024.05.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/PT/6571(MP) | Refurbishment of 03 Nos. Safety Devices of Alimk Elevators at UCT STS Cranes | 150,000.00 | 1,000.00 | 2024.05.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/24/PT/14/051 | Spares for UD Nissan Prime Movers | 40,000.00 | 1,000.00 | 2024.04.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/02/058 | 500 Nos. Motor Tyres 1000 X 20 16 PLY (Cross PLY) | 450,000.00 | 3,500.00 | 2024.04.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/08/051 | 20 Nos. Motor Tyres 10.00 X 20 16 PLY | 18,000.00 | 1,000.00 | 2024.04.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/05/051 | 50 KGS Welding Electrode AWSA 5.15 E NI 08 SWG & 50 KGS Welding Electrode AWSA 5.15 E NI-CI0 SW | 25,000.00 | 1,000.00 | 2024.04.18 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/08/052 | 05 Nos. Cooling Fan P/N T 10072536 | 18,500.00 | 1,000.00 | 2024.04.18 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/08/071 | Marine Quality paint and Thinner for Docking of Tug Barana II | 120,000.00 | 3,500.00 | 2024.04.18 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2024 மார்ச் 22 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம் பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443**

## விலை மனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனுகோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/24/042** வாடகைக்கு வான்-மின் அத்தியட்சகர் (அலுவலகம்)- மட்டக்களப்பு பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம். (இரண்டு வருட காலம்) | 03-04-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், (மட்டக்களப்பு) 065-2222639 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666/ 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/24/043** வாடகைக்கு வான் - மின் அத்தியட்சகர் - I (திட்டமிடல்)- பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 03-04-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666/ 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/24/045** வாடகைக்கு கட்டிடம் - நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையம் - கல்முனை (இரண்டு வருட காலம்) | 03-04-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், கல்முனை 067-2229276 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666/ 026-2221030 | 500.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுதிகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்து மூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

வளமான வாழ்விற்கு மின்சாரம்

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

# டி20 உலகக் கிண்ண போட்டி தடையை தவிர்த்தார் வனிந்து



டெஸ்ட் ஓய்வில் இருந்து விலகி பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் குழாத்தில் சேர்க்கப்பட்ட வனிந்து ஹசரங்கவுக்கு ஐ.சி.சி. தடை விதித்ததை அடுத்து அந்த டெஸ்ட் தொடரில் ஆட முடியாமல் போயுள்ளது.

நடுவரின் முடிவுக்கு எதிர்ப்பை வெளியிட்டது தொடர்பில் வீரர்களின் நடத்தை விதியின் 2.8 பிரிவை மீறியதற்காகவே அவர் தண்டிக்கப்பட்டுள்ளார். கடந்த திங்கட்கிழமை (18) நடைபெற்ற பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியின் 37 ஆவது ஓவரில் வைத்து நடுவரின் முடிவை எதிர்த்த வனிந்து ஹசரங்க, அவரை கேலி செய்ததோடு, நடுவரிடம் இருந்து தனது தொப்பியையும் பறித்தெடுத்தார்.

இது தொடர்பில் நடுவர் ஐ.சி.சியிடம் முறையிட்ட நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை, அவருக்கு போட்டிக் கட்டணத்தில் 50 வீத அபராதமும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதில் எட்டு தகுதியிழப்பு புள்ளிக்களை சேர்த்த வனிந்துவுக்கு அடுத்து வரும் இரண்டு டெஸ்ட் அல்லது நான்கு ஒருநாள் அல்லது டி20 போட்டிகளில் தடை விதிக்கப்பட்டது.

இதன்படி முதலில் டெஸ்ட் போட்டி இடம்பெறுவதால் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவரது தடை அமுலில் இருக்கும்.

இதன்மூலம் எதிர்வரும் ஜூன் மாதம் மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணப் போட்டியில் நான்கு ஆட்டங்களில் தடையை எதிர்கொள்ளும் நெருக்கடியை அவர் தவிர்த்துக் கொண்டுள்ளார்.

முன்னதாக அவர் கடந்த பெப்ரவரியில் ஆப்கானுக்கு எதிரான போட்டியின்போதும் நடுவருடன் மோதலில் ஈடுபட்டு இரண்டு டி20 போட்களில் தடையை எதிர்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று மேற்படி போட்டியில், நடுவருடன் கைலாகு கொடுக்கும்போது மோசமாக நடந்து கொண்டதாகக் கூறி இலங்கை ஒருநாள் அணித் தலைவர் குசல் மெண்டிஸுக்கு போட்டிக் கட்டணத்தில் 50 வீதம் அபராதம் விதித்த ஐ.சி.சி. அவருக்கு மூன்று தகுதி இழக்கு புள்ளிகளையும் வழங்கியுள்ளது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை (22) சில்ஹட்டில் ஆரம்பமாகவுள்ளது.

# இலங்கையுடனான டெஸ்ட்: முஷ்பீகுர் ரஹீம் விலகல்



பங்களாதேஷ் அணியின் அனுபவ துடுப்பாட்ட வீரர் முஷ்பீகுர் ரஹீம் கட்டை விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக இலங்கைக்கு எதிராக நாளை (22) ஆரம்பமாகும் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

அவர் காயத்தில் இருந்து மீண்டு வருவதற்கு குறைந்தது மூன்று வாரங்கள் தேவைப்படும் என்று பங்களாதேஷ் உடற்பயிற்சி நிபுணர் பைஜதுல் இஸ்லாம் கான் உறுதி செய்துள்ளார்.

கடந்த திங்களன்று (18) நடைபெற்ற இலங்கைக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் இரண்டாவது ஓவரின்போது 36 வயதான முஷ்பீகுர் உபாதைக்கு உள்ளானார். தக்சின் அஹமது வீசிய பந்து அவரது வலது கை கட்டை விரலில் பட்டு காயம் ஏற்பட்டது. பின்னர் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு தொடர்ந்து ஆட்டத்தில் பங்கேற்றிருந்ததோடு துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களை பெற்று பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு உதவினார். எனினும் போட்டிக்குப் பின்னர் செய்யப்பட்ட எக்ஸ்ரே சோதனையில் அவரது விரலில் முறிவு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 88 டெஸ்ட் போட்டிகளில் ஆடியிருக்கும் முஷ்பீகுர் 38.09 ஓட்ட சராசரியுடன் மொத்தம் 5676 ஓட்டங்களை பெற்றிருக்கும் நிலையில் அவரது விலகல் பங்களாதேஷ் அணிக்கு பின்னடைவாக உள்ளது. அவருக்கு மாற்று வீரர் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# பத்தும் முன்னேற்றம்



சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் ஒருநாள் தரவரிசையில் இலங்கை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்க மூன்று இடங்கள் ஏற்றம் கண்டு முதல் 10 இடங்களுக்குள் முன்னேறியுள்ளார்.

அண்மையில் நடந்த பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பத்தும் மூன்று போட்டிளில் மொத்த 151 ஓட்டங்களை பெற்ற நிலையில் புதிய தரவரிசையில் எட்டாவது இடத்தை பிடித்துள்ளார். மறுபுறம் சரித் அசலங்கள் இரண்டு இடங்கள் முன்னேறி 14 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் பட்டினிச் சாவும் அதிகரிப்பு: 32 ஆயிரத்தை நெருங்கும் உயிரிழப்பு



கா சாவில் கடுமையான பட்டினி காரணமாக உயிரிழப்பவர்கள் எ ண்ணிக்கை அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்திருக்கும் சூழலில் இஸ்ரேலின் தொடர் தாக்குதல்களுக்கு மத்தியில் காசாவில் உயிரிழப்பு எண்ணிக்கை 32 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

கடந் த ஐந்து மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் இந்தப் போரில் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்கு மத்தியில் காசாவில் உணவு, நீர், எரிபொருள் மற்றும் மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவி வருகிறது.

இந்நிலையில் காசாவுக்கு குறிப்பிடத்தக்க உணவுகள் செல்ல அனுமதிக்கப்படாத பட்சத்தில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கடுமையான பட்டினியால் பாதிக்கப்படுவார்கள் என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் கடும் பட்டினியால் உயிரிழக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக குறிப்பிட்டிருக்கும் அந்த அமைப்பு, பிறந்த குழந்தைகள் எடை குறைவு காரணமாக உயிரிழப்பதாகவும் சுட்டிக்காட்டியது.



காசாவில் ஊட்டச்சத்து குறைபாட்டால் 27 பேர் உயிரிழந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு கடைசியாக வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

காசாவுக்கு பல நாடுகளும் வானில் இருந்து உதவிகளை போட்டு, தொண்டு நிறுவனம் ஒன்று கடல் மார்க்கமாக விநியோகப் பாதை ஒன்றை ஆரம்பித்தபோதும் தரை வழியாக உதவிகள் செல்வது தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறான உதவி விநியோகங்களே செயல்திறன் மிக்கது என தொண்டு அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

இதில் உதவிகள் அதிகரிக்கப்படாத பட்சத்தில் வடக்கு காசாவில் உள்ள 300,000 மக்கள் மே மாதத்தில் பஞ்சத்தை எதிர்கொள்வார்கள் என்று ஐ.நா ஆதரவு பெற்ற புதிய அறிக்கை ஒன்று மதிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் உதவிகளை முடக்கி இருப்பதாகவும் இது பட்டினியை போர் முறையாக பயன்படுத்துவதற்கு சமமானது என்றும் மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் வோல்கர் துர்க் நேற்று முன்தினம் (19) குறிப்பிட்டிருந்தார்.

**உதவி வாகனங்கள் மீது தாக்குதல்**

எவ்வாறாயினும் உதவி வாகனங்கள் மீது இஸ்ரேலியப் படை நேற்று முன்தினம் நடத்திய மற்றொரு தாக்குதலில் மேலும் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு காசாவின் குவைட் சுற்றுவட்டப்பாதையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உதவி லொறிகளை நோக்கி மக்கள் கூடியிருந்தபோது இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

காசாவில் உணவு பற்றாக்குறைக்கு மத்தியில் உதவி லொறிகள் மற்றும் அதற்காக காத்திருக்கும் மக்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவது இது முதல் முறையல்ல. இவ்வாறான தாக்குதல்களில் 400க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசாவின் அரச ஊடக அலுவலகம் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தது.

கடந்த சில நாட்களாக காசா நகர் மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக குடியிருப்பு கட்டடங்கள் தொடர்ந்து இலக்கு வைக்கப்பட்டு வருகின்றன.

நேற்று இடம்பெற்ற இவ்வாறான ஒரு தாக்குதலில் வீடு ஒன்று இலக்கு வைக்கப்பட்டதோடு அதில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என 15 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டது. தாக்குதல் இடம்பெற்ற விரைவில் அங்கு சென்ற அல் ஜசீரா செய்தியாளர், இடிபாடுகளில் இருந்து உடல்கள் மீட்கப்படுவதை கண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மூன்று மாடிக் கட்டடம் ஒன்று தரைமட்டமாக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்து பலர் இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான வடக்கில் உள்ள அல் ஷிபா மருத்துவமனை மீது இஸ்ரேல் கடந்த இரண்டு நாட்களாக மேற்கொண்ட கடுமையான சுற்றிவளைப்பு நடவடிக்கையில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளது.

அல் ஷிபா மருத்துவமனையில் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருந்த நிலையில் தெற்கை நோக்கி செல்லும்படி அவர்களுக்கு இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்டிருந்தது.

அந்த மருத்துவமனையில் இருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்ட பெண் ஒருவர் தமது அனுபவத்தை விபரித்துள்ளார். 'இஸ்ரேலிய வாகனங்கள் மற்றும் புல்டோசர்களுக்கு இடையே நடப்பதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டேன். சிறுவர்கள் பெரும் வேதனையை சந்தித்ததோடு டாங்கிகள் எம்மீது சூடு நடத்தின' என்று நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் அந்தப் பெண் அல் ஜசீராவுக்கு தெரிவித்துள்ளார்.

'காசா காசாவாக இல்லை. அனைத்து இடங்களும் அழிந்துள்ளன. மூன்று நாட்கள் உண்ணாமல் இருந்தோம். நான் மரணிக்கப்போவதாக உணர்கிறேன்' என்று அந்தப் பெண் குறிப்பிட்டார்.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் தாக்குதலில் மேலும் 104 பேர் கொல்லப்பட்டு 162 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 31,923 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 74,096 பேர் காயமடைந்துள்ளனர்.

**எதிர்பார்ப்பின்றி தொடரும் பேச்சு**

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான பேச்சுவார்த்தை கட்டார் தலைநகர் டோஹாவில் மூன்றாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது. இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்கா மத்தியஸ்தம் வகிப்பதோடு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பிரதிநிதிகள் மறைமுக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற கட்டார் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர், இந்தப் பேச்சுவார்த்தையில் முடிவொன்று எட்டப்பட்டதாக கூறுவது முன்கூட்டியதாக இருக்கும் என்றும் பேச்சுவார்த்தை தொடர்பில் அவதானத்துடனும் நம்பிக்கையுடனும் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இஸ்ரேல் திட்டமிட்டு வரும் காசாவின் ரபா நகர் மீதான தாக்குதல் ஒன்று முன்னெடுக்கப்பட்டால் பேச்சுவார்த்தையில் அது பாதகமான விலைவையே ஏற்படுத்தும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா பகுதி இஸ்ரேலிய தரைப்படை நுழையாத காசாவின் ஒரே பிரதான நகராக இருந்து வருகிறது. எனினும் ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் திட்டத்தை பூர்த்தி செய்ய ரபா மீது படை நடவடிக்கையை முன்னெடுப்பது அவசியமாக இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறி வருகிறார்.

கட்டாரில் இஸ்ரேலிய பிரதிநிதிகளுக்கு தலைமை வகிக்கும் இஸ்ரேல் உளவுப் பிரிவு தலைவர் டேவிட் பார்னீ, இஸ்ரேல் போர் அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்க கடந்த செவ்வாய்க்கிழமை இஸ்ரேல் திரும்பியுள்ளார். இதில் டொஹாவில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் பதில் முன்மொழிவுகள் தொடர்பில் ஆலோசிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் உடன்பாடு ஒன்றை எட்டுவதில் அவநம்பிக்கை இருப்பதாக பெயர் குறிப்பிடாத இஸ்ரேலிய மூத்த அதிகாரி ஒருவர் சென்னல் 12 தொலைக்காட்சிக்கு குறிப்பிட்டுள்ளார். காசாவில் உள்ள ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வார், உண்மையில் உடன்பாடு ஒன்றை நாடுகிறாரா அல்லது காலத்துடன் விளையாடுகிறாரா என்பது தொடர்பில் சந்தேகத்தை அந்த அதிகாரி வெளியிட்டுள்ளார்.

# செல்களில் எச்.ஐ.வியை அகற்றிய விஞ்ஞானிகள்



நோபல் பரிசு வென்ற மரபணு திருத்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட செல்களில் இருந்து அந்தத் தொற்றை வெற்றிகரமாக நீக்கியதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது கத்தரிக்கோல் போன்று செயற்படுகின்ற போதும் மூலக்கூறு அளவில் மரபணுவை நீக்குவதால், மோசமான துணுக்குகளை அகற்றுவது அல்லது செயலிழக்கச் செய்ய முடியும். இறுதியில் இது உடலில் இருந்து முழுமையாக வைரஸை அகற்ற முடியுமாக இருக்கும். எனினும் இது பாதுகாப்பானது மற்றும் செயற்திறன் கொண்டது என்பதை உறுதி செய்ய மேலும் சோதனை நடத்தப்பட வேண்டி இருப்பதாக விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போதுள்ள எச்.ஐ.வி. மருந்துகள் தொற்றை தடுக்கின்ற போதும் இல்லாமல் செய்யாது. இந்நிலையில் ஆம்ஸ்டர்டாம் பல்கலைக்கழக ஆய்வுக் குழு தனது கண்டுபிடிப்பு குறித்த விபரத்தை மருத்துவ மாநாடு ஒன்றில் முன்வைத்துள்ளது. இதனை ஒரு கோட்பாட்டு அடிப்படையிலேயே முன்வைத்திருக்கும் அந்தக் குழு விரைவில் எய்ட்ஸ் நோயை குணப்படுத்தும் மருந்தாக மாறாது என்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

# சீன மருத்துவமனைகளில் மகப்பேறு சேவைக்கு பூட்டு



சீனாவில் குழந்தை பிறப்பு வீதம் சாதனை அளவுக்கு வீழ்ச்சி அடைந்திருக்கும் சூழலில் அந்நாட்டின் பல மருத்துவமனைகள் இந்த ஆண்டில் மகப்பேறு சேவைகளை நிறுத்தியுள்ளன.

கிழக்கு செஜியாங் மற்றும் தெற்கு ஜியாங்சி உட்பட பல மாகாணங்களின் மருத்துவமனைகள் கடந்த இரண்டு மாதங்களில் தமது மகப்பேறு பிரிவுகளை மூடுவது தொடர்பில் அறிவித்திருப்பதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

சீனாவில் மக்கள் தொகை வீழ்ச்சி வேகமாக அதிகரித்து வரும் நிலையில் இளம் தம்பதிகள் இடையே குழந்தை பிரசவத்தை ஊக்குவிப்பதற்கு அந்நாட்டு நிர்வாகம் கடுமையாக முயன்று வருகிறது.

சீனாவில் குறைந்த பிறப்பு வீதம் மற்றும் கொவிட் தொற்று காரணமாக மரணங்கள் அதிகரித்த சூழலில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 2023 இல் சீன மக்கள் தொகை வீழ்ச்சி கண்டதோடு இது நீண்ட கால பாதிப்பை ஏற்படுத்தும் என்று நிர்வாகம் அஞ்சுகிறது.

அண்மைய தரவுகளின்படி சீனாவில் மகப்பேற்று மருத்துவமனைகள் 2020 இல் 807 ஆக இருந்த நிலையில் அது 2021 இல் 793 ஆக குறைவடைந்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 21ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.